THE MUKKUVA LAW

முக்குவர் சட்டம்

சி. பிறிற்றோ

தமிழில்

திருத்தமிழ்த்தேவனார்

முக்குவர் சட்டம்

சி. பிறிற்றோ
வழக்கறிஞர்

தமிழில்

திருத்தமிழ்த்தேவனார்
வழக்கறிஞர்

வெளியீடு
தெற்கு எழுத்தாளர் இயக்கம்

.

முக்குவர் சட்டம் ♦ ஆசிரியர்: வழக்கறிஞர். சி. பிறிற்றோ ♦ பொருள்: இலங்கை முக்குவர்களின் வாரிசுரிமைச் சட்டம் ♦ மூலமொழி: ஆங்கிலம் ♦ முதல் வெளியீடு: கைச்.டி. கபிரியேல், பெய்லி தெரு, கொழும்பு, 1876 ♦ இதன் அசல் ஆங்கில நூலினை பார்வையிட: கார்னல் பல்கலைக்கழக நூலகம், இத்தாக்கா, நியூயார்க் ♦ இந்நூலினை தமிழில் மொழிபெயர்த்தவர்: வழக்கறிஞர். திருத்தமிழ்த்தேவனார், நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கம், நாகர்கோவில் – 629001, பேச: 8300207193. ♦ தமிழில் முதற்பதிப்பு: அக்டோபர் 2020 ♦ பதிப்பகம்: நெய்தல்வெளி, 153சி, ஈத்தாமொழி சாலை, நாகர்கோவில் – 629002, பேச: 9367510043 ♦ தட்டச்சு: திருத்தமிழ்த் தேவனார் ♦ நூலாக்கம்: கடிகை ஆன்றனி, பேச: 9840590892 ♦ அச்சாக்கம்:ரியல் இம்பேக்ட் சொலியூசன், சென்னை. ♦ அளவு: டெம்மி 1/8 ♦ பக்கம்: 148 ♦ விலை: ரூ. 130/–

நூலாசிரியர் குறித்து...

பிறிற்றோவின் முழுப்பெயர் கிறித்தோபர் பிறிற்றோ. இவருடைய தகப்பனார் பிலிப் பிறிற்றோ, புத்தளத்தைப் பூர்வீகமாக கொண்டவர். ஓர் கத்தோலிக்கக் கிறித்தவர். அரசாங்க பதிவாளராகப் பணியாற்றியவர்.

பிறிற்றோ, இலங்கையிலுள்ள இராயல் பாடசாலையில் கல்வி பயின்றார். பின்னர், கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு, ஆக்ரா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்தார். இலங்கை திரும்பியதும், கொழும்பு அக்காடமியில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1862இல் சட்ட நிருபண சபையில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

மானிப்பாயைச் சார்ந்த மிகப்பெரிய செல்வந்தர் ஈ.எம். நன்னித்தம்பியின் இளைய மகள் தங்கம்மாவை 1866இல் பிறிற்றோ திருமணம் செய்தார். பிறிற்றோவுக்கு நான்கு பிள்ளைகள். அவர்கள்: பிலிப் பிறிற்றோ, கிறித்தோபர் பிறிற்றோ, தெரேசா மற்றும் அலாய்சியா.

1867இல் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக பிறிற்றோ பணியாற்றினார். மட்டக்களப்பு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இராணியின் வழக்கறிஞராகவும் இருந்தார். பிற்காலத்தில், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளில் மாவட்ட நீதிபதியாகவும் பணி புரிந்தார்.

1872 சனவரி முதல் திசம்பர் வரை கொழும்பு மாநகர சபை உறுப்பனராக தேர்வு செய்யப்பட்டார். தமிழ், சிங்களம்,

ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், சமற்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். சிலோன் கத்தோலிக்கச் சங்கத்தில் தலைவராக இருந்தார். தோட்ட உரிமையாளராகவும் இருந்தார். கற்பிட்டி, சிலாபம், மாதம்பே, நீர்கொழும்பு போன்ற இடங்களில் அவருக்கு நிலங்கள் இருந்தன.

1878–1879 காலங்களில் காலரா நோய் பரவியபோது, பாதிக்கப்பட்ட மக்களுக்காக கஞ்சித் தொட்டி திட்டத்தை ஆறுமுக நாவலர் ஏற்படுத்தினார். அவரோடு இணைந்து சமூகப்பணி மேற்கொண்டார். கஞ்சித் தொட்டி திட்டத்திற்காக பண உதவி செய்தார். அதன்பின்பு, யாழ்ப்பாண அதிபர் டபிளியு.சி. துவைனம், மாவட்ட நீதிபதி டி. சராம், மாகாண உதவியாளர் சி. பிரைம் ஆகியோர் ஆதரவுடன் கஞ்சித் தொட்டி தரும சங்கம் ஒன்றினை ஏற்படுத்தினார். அதனை, அன்றைய யாழ் அரசாங்க அதிபர் புகழ்ந்து பாராட்டினார்.

1736இல், புலவர் மாதகல் மயில் வாகனம் எழுதிய, 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்கிற நூலினை பிறிற்றோ ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து 1879 சூலை மாதம் வெளியிட்டார். இது, ஒரு சரித்திர நூலாகும். இந்நூலின் தமிழ் மூலப் பிரதி கிடைக்காமல் போனதால், ஆங்கிலப் பிரதியை ஆதாரமாக வைத்து யாழ்ப்பாண வைபவ மாலை தமிழில் பின்னர் வெளியிடப்பட்டது.

1879 மே 4இல், சட்ட நிருபண சபையில் உறுப்பினராக இருந்த முத்துக்குமாரசாமி மறைந்தார். அந்த வெற்றிடத்திற்கு கத்தோலிக்கக் கிறித்தவரான சி. பிறிற்றோ போட்டியிட்டார். ஆறுமுகநாவலர், சைவ வேளாளராகிய வழக்கறிஞர் பொன்னம்பலம் இராமநாதனை முன்னிறுத்தினார். அதாவது, நல்லூர் கந்தசுவாமி வழக்கில் பிராமணர்கள்

சார்பாக ஆறுமுகநாவலர் இயங்கிக் கொண்டிருந்தபோது, கோவில் நிர்வாகம் சார்பில் பிறிற்றோ வாதிட்டார் என்பதாலே பொன்னம்பலம் இராமநாதனை பிறிற்றோவுக்கு எதிராகக் களம் இறக்கினார். சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு இராமநாதன் என்பவராலே முடியுமென்கிற கருத்துரையைப் பரப்பினார். இதில் இராமநாதன் வெற்றிபெற்றார்.

"பிறிற்றோ அரசியலுக்கு வருவதை பிரபாகரனின் கொள்ளுப்பாட்டன் வல்வெட்டித்துறை திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளை ஆதரித்தார். அதைத் தோற்கடித்து ஒரு சைவ வெள்ளாளனைத்தான் கொண்டுவர வேண்டும் என்று ஆறுமுக நாவலர் தன் முழு முயற்சியுடன் இராமநாதனை அரசியலுக்குக் கொண்டுவந்தார். இந்த நிகழ்ச்சி நிகழாமல் இருந்திருந்தால் இலங்கையின் வரலாறு வேறொரு அரசியல் பக்கத்தை திருப்பியிருக்கக்கூடும்" என்கிறார் பெருமாள். இந்நிலையில், 1879இல், கொழும்பு மாநகர சபை உறுப்பினராக மீண்டும் பிறிற்றோ தேர்வு செய்யப்பட்டார்.

சி. பிறிற்றோ எழுதிய 'பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர்' என்கிற நூலானது 1892இல் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடப்பட்டது. 'இலங்கையின் அரசியல் நிலை' என்கிற தலைப்பில் பிறிற்றோ உரை நிகழ்த்தியுள்ளார். பிரபல தொல்பொருள் ஆய்வாளர் கைச்.சி.பி. பெல்லுடன் இணைந்து, 'தமிழர்கள் பிரச்சனை' என்கிற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டுள்ளார். சிலப்பதிகாரத்தில் உரை நிகழ்த்தியுள்ளார். கசபா மன்னன் இந்தியாவுக்கு வருகை புரிந்தது குறித்த ஆவணங்களைப் பெறுவது சம்பந்தமாக உரையாடியுள்ளார்.

‘முக்குவர் சட்டம்’ என்கிற இந்நூலினை சி. பிறிற்றோ ஆங்கிலத்தில் 1876இல் எழுதி வெளியிட்டுள்ளார். இது எழுத்து வடிவில் எழுதப்பட்ட சட்ட நூலின் பிரதி அல்ல. இந்நூல், வழக்குத் தீர்ப்புகள் மற்றும் நேரடி ஆய்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டவை.

1900 மார்ச் மாதம், பிறிற்றோவின் மனைவி தங்கம்மா மரணம் அடைந்தார். 26 திசம்பர் 1910இல், திருவனந்தபுரத்தில் வைத்து பிறிற்றோ மரணமடைந்தார். இவருடைய மகன் சி.எம். பிறிற்றோ பின்னாளில் தந்தையைப் போலவே பிரபலமான வழக்கறிஞராக இருந்தார்.

– திருத்தமிழ்த்தேவனார்

முன்னுரை...

இது, முக்குவர்களின் வழக்கமான சட்டங்களை அறிவு பூர்வமாக வெளிப்படுத்தும் ஓர் முயற்சியாகும். இது, அவற்றின் முதல் தொகுப்பாகும்.

இக்கட்டுரையில் நிகழும் முக்குவ சட்ட விதிகளின் உச்சரிப்பை எளிதாக்கும் நோக்கில் ஒரு குறியீடு சேர்க்கப்பட்டுள்ளது. இது, பயனுள்ளதாக இருக்குமென நம்புகிறேன்.

அவருக்கு உதவிகளும், இத்தலைப்பில் தகவல்களும் கொடுத்து உதவியவர்களுக்கு தொகுப்பாளர் என்கிற முறையில் அவருடைய நன்றிகளை அவரது நண்பர்களுக்கு வழங்க வேண்டும். குறிப்பாக கற்பிட்டி, நாவற்காடுவைச் சார்ந்த முக்குவப் பண்டிதர் லூயி விதானி அந்தோணிப்பிள்ளை.

மேலும், நன்றிக் கடனாக அவருடைய நீதிமன்றப் பதிவுகளைப் பார்வையிட வசதி செய்து கொடுத்த கற்றறிந்த மட்டக்கிளப்பு மாவட்ட நீதிபதி திரு. சி.இ. ஓர்த்திங்டன் மற்றும் அதனை தொகுப்பதற்கு அவரோடு இருந்த அவருடைய நிறுவன நண்பர்களும் வழக்கறிஞர்களுமான ஆர். கதிராமர் மற்றும் மட்டக்களப்பு செ.செ.பி. சுவாமிநாடார்.

(குறிப்பு: முக்குவர் சட்டத்தை ஆங்கிலத்தில் வாசிப்பவர்களுக்கு தமிழ் எழுத்துக்கான உச்சரிப்புக் குறியீடு தேவைப்படும். தமிழில் வாசிப்பவர்களுக்கு அக்குறியீடு தேவைப்படாது என்பதால் தமிழ் சொற்களுக்கான ஆங்கிலக் குறியீடுகள் இந்நூலில் சேர்க்கப்படவில்லை).

பொருளடக்கம்

அறிமுகம்

இலங்கை முக்குவர்கள் பெரும்பாலும் தமிழ் இனத்தவர்கள். இவர்கள், முக்கியமாக கற்பிட்டி, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வசிக்கிறார்கள். கற்பிட்டி முக்குவர்கள் கிறித்தவர்களாக இருந்தாலும், முகம்மதியர்களாக இருந்தாலும் தற்போதைய பொதுவான பரம்பரைச் சட்டங்களுக்கு உட்பட்டவர்கள். இது, தீவின் கடல் மகாணங்களில் வசிக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கமதியர்களுக்கும் பொருந்தும். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு முக்குவர்கள் சைவர்கள் என்றாலும், அவர்களுக்கு மத்தியில் கிறித்தவர்கள் சிறிய எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். அவர்கள், கிறித்தவராகவோ அல்லது சைவராகவோ இருந்தாலும், இந்த முக்குவர்கள் அவர்களுடைய வாரிசுக்கான சொத்து சாசனத்தை ஒழுங்குபடுத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் மகாணத்தில் தேசவழமையும், மட்டக்களப்பில் அவர்களுக்குள்ளான தனித்துவமான பழக்கமும் நடைமுறையில் உள்ளன. அந்த வழக்கமே பொதுவாக, ‘முக்குவர் சட்டம்’ என்று அழைக்கப்படுகிறது. இதுபோன்ற இயல்பான வழக்கம் இந்தியாவின் சில பகுதிகளிலும் உள்ளன. அவற்றின் தோற்றம் குறித்த விவாதம் எவ்வளவு சுவையாக இருந்தாலும் தற்போதைய தொகுப்பின் தன்மைக்குப் பொருந்தாது. இந்த பொருளுக்கு நம்பகமான தகவலோ, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கமான பாரம்பரியமோ எதுவும் இல்லை. அதனை, மெதுவாக முதலீடு செய்யும் அளவிற்கு காதல் ஒளிவட்டமும் இல்லை. முக்குவர்களுக்கான அறநெறி விதிகளோ அல்லது அவர்களின் தந்தைவழி சந்ததியினரை தீர்மானிக்கும் நேர்மறையான சட்டமோ இல்லாதிருப்பதால், உண்மையான தோற்றத்தை அந்த பழமையான காலங்களில்தான் அநேகமாகத் தேடவேண்டும்.

மட்டக்களப்பிலுள்ள முக்குவர் சட்டம் உறுதியற்ற நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. நம்பகத்தன்மையுடைய பொருள் யாதெனில், மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சில தீர்ப்புகள் மற்றும் மட்டகளப்பு நீதிமன்றக் குறிப்புகள். இதிலுள்ள சில தீர்ப்புகள், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு மதிப்பாய்வு செய்யப் பட்டுள்ளன. அதில் தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் தீர்வு சட்டமாக மாறிவிட்டன. பெரியளவில் விவாதிக்கத்தக்க பல காரியங்கள் இன்னும் உள்ளன. சட்டத் தீர்ப்புக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும்வரை அவை அவசியமாக தொடர்ந்து இருக்க வேண்டும்.

பின்வரும் பக்கங்களின் பொருளடக்க முடிவுகள் யாதெனில், மட்டகளப்பு மற்றும் கற்பிட்டியிலுள்ள கற்றறிந்த முக்குவர்கள் மத்தியில் தொகுப்பாளர் விசாரித்தவைகள் மற்றும் மட்டகளப்பில் வழக்கறிஞராக பணியாற்றியபோது அவரால் யோசனை செய்யப்பட்ட வழக்குகளின் ஆய்வுகள் ஆகியவைகள் ஆகும். இந்த வழக்குகள் எதுவும் 1844ஆம் ஆண்டினைவிட பழமை வாய்ந்தவை அல்ல. ஆனால், அதனை நம்புவதற்குரிய காரணம் யாதெனில், மட்டக்களப்பு நீதிமன்ற ஆவணங்களை கவனமாகத் தேடினால், வெகுமதியாக பழமையான மற்றும் மிக முக்கியமான வழக்குகளைக் கண்டுபிடிக்கலாம். பணியிலுள்ள சில நண்பர்கள் தேடலை மேற்கொண்டால், பொதுமக்களுக்கு இப்பொழுது வழங்கப்பட்டவைகளுடன் மிகச்சிறிய தகவலை கூடுதலாகச் சேர்க்க முடியும் என்பதனை நம்பலாம்.

கற்பிட்டி முக்குவர்கள், புத்தளம் மற்றும் சிலாபம் மாகாண நீதிமன்றங்கள் நிறுவப்படுவதற்கும் நீண்ட காலத்திற்கு முன்பாகவே அவர்களது சாதி வழக்கங்களைக் கைவிட்டதாகத் தெரிகிறது. ஆனால், சிலாபம் மற்றும் புத்தளம் நிலபுல சட்ட ஆவணங்களை இப்பொழுது

அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்றால், இந்த பொருளில் மிகுந்த மதிப்புமிக்கத் தகவல்கள் கிடைக்கக்கூடும்.

இந்த சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைப் பொறுத்தளவில் அவர்களில் பெரும்பாலானோருக்கு மூத்தவர்களின் கட்டளையைவிட சிறந்த அதிகாரம் ஏதுமில்லை. இந்த விதிமுறைகள் அனைத்தும், ஒருகாலத்தில் முக்குவர்களிடையே நடைமுறையில் தீவிரமாக இருந்து வந்துள்ளன என்பதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். ஆனால், அவைகளில் ஏதேனும் ஒன்றினை இப்பொழுது சட்டத்திற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு எதிராகச் சிறப்பாகவே எச்சரிக்கப்படுகிறீர்கள். அவைகள், நேரடியாகவோ அல்லது சட்ட முடிவால் ஆதரிக்கப்படும் அனுமானத்திற்காகவோ அல்ல. மட்டக்களப்பு முக்குவர்களின் நாகரீக பயன்பாட்டில், அவர்களுக்கு ஏதேனும் இடமிருக்கிறதா என்பது குறித்தும், எதிர்கால விசாரணைக்கு வழிகாட்டும் சேவையாக அவை இங்கே வழங்கப்பட்டுள்ளன.

தொகுப்பாளரால் ஆலோசிக்கப்பட்ட வழக்குகளிலுள்ள சிலவற்றின் சுருக்கங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை கடைசியில் காணலாம். இராணியின் துணை மேலாட்சியராகிய வழக்கறிஞர் கேய் அவர்கள், மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக இருக்கும்போது, வழக்கு எண். 16384 க்கு சிறப்பானதொரு தீர்ப்பினை வழங்கினார். சமீபத்திய இத்தீர்ப்பு, முக்குவர் சட்டத்தின் அடிப்படையில் வெளியான முக்கியமான தீர்ப்புகளில் மிக முக்கியமானதாகும்.

மேல்முறையீட்டில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது பிரின்சு மற்றும் கண்டர்லாக் (பக்கம் 381, 382) ஆகிய சட்டச் செய்தியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு முக்குவர்களின் வழக்கங்களில் டச்சு அரசோ அல்லது

ஆங்கில அரசோ ஒருபோதும் தலையிட்டதில்லை என்பதனை சுட்டிக்காட்டும் வகையில் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திசம்பர் 13, 1874.

சின்னத்தம்பி
எதிர்
மின்னி

எண். 5/1835 ஆணைப்படி, 23 செப்டம்பர் 1799ஆம் தேதி, பிரகடனம் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதுவரை, "பிரிட்டன் அரசாட்சியின்கீழ் இருந்த நீதித்துறை மற்றும் காவல்துறை நிர்வாகம் கடல்சார் மகாணங்களின் பெயரால் அறியப்படுகிற ஐக்கிய மகாணங்களின் பண்டைய அரசாங்கத்தின்கீழ் இருந்த சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின்படி அனைத்து நீதிமன்றங்களும் செயல்பட வேண்டும்" என்றது. அந்த ஆணைப்படி இந்த சட்டங்களும் நிறுவனங்களும் தொடர்ந்து வலிமையுடன், 'பொருள்' மற்றும் இதரவற்றைக் கொண்டிருந்தது.

சொத்துக்களின் வாரிசுரிமை தொடர்பாக மட்டக்களப்பில் வசிக்கும் தமிழர்களின் சட்டங்களிலும் வழக்கங்களிலும் டச்சு அரசாங்கத்தின் கீழுள்ள நீதிமன்றங்கள் தலையிடவில்லை என நம்புவதற்கு உச்சநீதிமன்றம் அனைத்துக் காரணங்களையும் கொண்டுள்ளது. முக்குவர்கள் மற்றும் வன்னியர்கள் ஆகியோரின் வழக்கங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடைசி அமர்வுகளில்கூட ஒரு வழக்கில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளடக்கம், இரத்து செய்யப்பட்டதாகக்கூட வாதாடப்படவில்லை. (எண். 8933, மாவட்ட நீதிமன்றம், மட்டக்களப்பு).

முக்குவர் சட்டம்

முதல் அத்தியாயம்

வரையறை

1. பகுக்கப்பட்ட சொத்து:

தேடிய தேட்டம் மற்றும் மூதாதையர் சொத்து என முக்குவர்கள் வேறுபடுத்தியுள்ளனர்.

2. தேட்டம்:

வாங்கிய சொத்தானது தேட்டம் அல்லது தேடிய தேட்டம் என அழைக்கப்படுகிறது.

தேட்டம் – மூலம்:

தேடிய என்பதன் பொருள் வாங்கியது. தேட்டம் என்பதன் பொருள் சம்பாதித்தவை அல்லது சொத்து என்பதாகும்.

தேடிய மற்றும் தேட்டம் ஆகியவை தேடுகிறது என்ற வினைச் சொல்லிலிருந்து எழுந்த இணைச் சொற்கள்தான். அதன் பொருள் தேடுவது, சம்பாதிப்பது அல்லது அடைவது.

3. முதுசொம்:

மூதாதையர் சொத்து முதுசொம் என அழைக்கப்படுகிறது.

முதுசொம் – மூலம்:

முது என்பதன் பொருள், பழைய அல்லது பூர்வீகம். சொம் என்பதன் பொருள், செல்வம் அல்லது சொத்து.

4. தேட்டம் – வரையறை:

தேட்டம் என்பது கீழ்காணும் ஏதேனும் ஒருவகையில் வாங்கப்பட்ட சொத்து அல்லது சம்பாதித்த சொத்து:

உடைமையாக்குதல்,
வாங்குதல்,
வழக்காற்றுரிமை,
விருப்பப்படுதல் அல்லது விருப்பவுரிமைக்கொடை,
அந்நியர்களிடமிருந்து பெறப்படுதல்,
அன்பளிப்பு அல்லது அந்நியர்களிடமிருந்து பெறப்பட்ட சீதனம்,
ஒப்பந்தம் வாயிலாக தனதாக்கிக் கொள்ளுதல்.

அந்நியர்கள்:

அந்நியர்கள் என்பதன் பொருள் யாதெனில், மாதாக்கள் அல்லது மூதாக்கள் அல்லாத அனைத்து நபர்களும்.

5. மாதாக்கள் – மூலம்:

மாதாக்கள் என்பது பன்மை வடிவிலான சொற்களாகிய மாதா, தாய் மற்றும் சட்டப்பூர்வமான தாய்மார்களைக் குறிக்கிறது.

மாதாக்கள் – வரையறை:

முக்குவர்களிடத்தில் மாதாக்கள் என்கிற பதம், அவனுடைய அம்மா மற்றும் அவளுடைய சுற்றத்தார். மேலும், அவனுக்குள் உள்ளடக்கமாக இருக்கிற

அவனுடைய தந்தை மற்றும் அவனுடைய தந்தையின் சுற்றத்தார்.

6. தாத்தா மற்றும் தாத்தாக்கள் பயன்பாட்டில் இல்லை:

தாத்தா, தந்தை அல்லது பன்மை வடிவமான தாத்தாக்கள், தந்தைகள் ஆகிய சொற்கள் ஒருபோதும் பயன்பாட்டில் இருந்ததாக அறியப்படவில்லை.

அதற்கான காரணம்:

முக்குவ இறங்குரிமை சட்டத்தின் தோற்றத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, அவர்கள் மாதாக்கள் மற்றும் மூதாக்கள் பற்றி மட்டுமே பேசினார்களே தவிர, அவர்களுடைய தாத்தாக்களைப் பற்றி ஏன் பேசவில்லை என்பதற்கான காரணங்களை நாம் புரிந்துகொள்ள இயலும்.

மாதாக்கள் – எப்படி பயன்படுத்துவது:

முக்குவர் பயன்பாட்டின்படி மாதாக்கள் என்கிற பதம், இந்த பக்கங்களில் தாத்தாக்களையும் உள்ளடக்கியதாகவே அமையும்.

7. மூதாக்கள் – வரையறை:

மூதாக்கள் என்பதன் பொருள் மூதாதையர்கள். மேலும், ஒருவருடைய பெற்றோரின் முன்னோர்கள் மற்றும் அவருடைய சுற்றத்தாரின் முன்னோர்கள்.

8. குடி – வரையறை:

குடி என்ற பதம் மட்டக்களப்பிலுள்ள அனைத்து தமிழ் பேசும் வகுப்பினரால் பயன்படுத்துகிறது. அது, ஒருவரின் தாயின் பக்கத்திலுள்ள ஒருவருடன் மட்டுமே தொடர்புடைய ஒவ்வொரு நபரையும் குறிக்கிறது.

தாயின் குடி:

அதே குடியைச் சார்ந்த நபர்கள் தூரத்து தொடர்புடையவர்களாக இருந்தாலும், ஒருவருக் கொருவர் உறவினர்களாக அங்கீகரிக்கின்றனர்.

தந்தையின் குடி:

ஒருவரின் தந்தை மற்றும் அவருடைய நெருங்கிய உறவினர்களைத் தவிர, அதைத்தாண்டிய வேறு எவரையும் தந்தையின் குடியைச் சார்ந்தவர்களாக ஒருவர் அரிதாகவே அங்கீகரிக்கின்றார்.

9. **வயிற்று வார் – எப்படி பயன்படுத்துவது:**

மட்டக்களப்பில் வயிற்று வார் என்ற பதம், குடிக்கு இணையாக பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக கரையார் மத்தியிலும், சாதாரணமாக பிற வகுப்பினர் மத்தியிலும் பயன்படுத்தப்படுகிறது.

அதன் பொருள்:

வயிற்று வார் என்பது தொப்பிள் கொடி.

மூலம்:

வயிறு, கருப்பை மற்றும் வார், பந்தம் அல்லது ஒப்பந்தம் ஆகியவற்றிலிருந்து இது உருவானதாகும்.

10. **முதுசொம் – மூலம்:**

முதுசொம் என்பதை முக்குவரின் சொல் நடையில் மாதாக்கள் சொத்து அல்லது மூதாக்கள் சொத்து என வரையறை செய்யலாம்.

11. இயற்கையாகவே உரிமை பெறுதல்:

இயற்கையாகவே உரிமை பெறுதல் என்பது பெறப்பட்டால் அல்லது தேட்டத்தில் சேர்க்கப்பட்டால் தேட்டம் எனக் கருதப்படும். அது முதுசொம் எனில், முதுசொம்மாகக் கருதப்படும்.

12. கலப்பிதம் மற்றும் குழப்பமடைதல்:

அதிக மதிப்பினை உடைய தேட்டம் மற்றும் முதுசொம் ஆகியவற்றில் கலப்பிதம் அல்லது குழப்பம் ஏற்பட்டால், ஈர்க்கும் வகையைப் பொறுத்தளவில் டச்சு உரோமன் சட்டத்தில் உள்ளபடி தானே மதிப்பு குறைந்ததாக மாறிவிடும். குறைவாக கிடைத்த உரிமையாளரின் வாரிசுதாரருக்கு, அவர் விட்டுக் கொடுத்தவற்றின் மதிப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க வேண்டும்.

முக்குவர்களின் மரபுகள், இந்த விசயத்தில் அமைதி காக்கின்றன.

13. சாகுபடி மற்றும் கட்டுமானம் வாயிலாக உரிமைபெறல்:

எவையெல்லாம் நிலத்திலிருந்து பிரிக்க முடியாத வகையில் பயிரிடப்பட்டதோ அல்லது கட்டப்பட்டதோ அவையனைத்தும் எந்த நிபந்தனையின்பேரில் தேட்டம் அல்லது முதுசொம் என கருத முடியும் என்கிற கேள்வி எழும்.

14. சொம் மற்றும் காணி வேறுபடுத்துதல்:

அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஆகியவற்றை சொம் உள்ளடக்கும்.

காணி என்பதற்கு சரியான பொருள் பயரிடுவதற்குரிய நிலம். அது, ஏனைய பொதுவான நிலங்களைவிட வேறுபட்டது. ஆயினும், பொதுவாக அது, அசையாச் சொத்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

15. அசைபவை மற்றும் அசையாதவை:

சொத்துக்களை அசையும் மற்றும் அசைவற்றதாக வகைப்படுத்துவது முக்குவர்களுக்கோ அல்லது ஏனைய தமிழர்களுக்கோ பண்டைக்காலத்தில் தெரிந்திருக்க வில்லை.

அசைகின்றவற்றிலிருந்து அசையாதவற்றை வேறு படுத்தும் சரம், அசரம், மற்றும் அசையும், அசைவற்ற ஆகிய சொற்கள் நவீன பயன்பாட்டில் உள்ளன.

தளவாடம்:

தளபாடம் அல்லது தளவாடம், சரியாக தளவாளம், நிச்சயமாக தேவையானப் பொருட்களை அர்த்தப்படுத்துவதுடன், பொதுவாக மரச்சாமான்கள், பாத்திரங்கள், கருவிகள் மற்றும் இதரவற்றை நேரடியாகவே குறிக்கிறது.

சாமான்:

சாமான் (பன்மையில் சாமான்கள்) என்ற சொல், வெளிநாட்டு மூலச்சொல் ஆகும். அதன்பொருள், தமிழர்கள் மத்தியில் வாழ்கின்ற விலங்குகள் மற்றும் பணம் தவிர ஏனைய அசையும் பொருட்களைக் குறிக்கும். இது மேலும், ஒட்டுமொத்தமாக கப்பல் சரக்கு, வீடு அல்லது கடைகளிலுள்ள பலசரக்கு மற்றும் பயணப் பொருட்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

16. *தமிழர்கள், அவர்களுடைய உடைமைகளை விவரிக்க சந்தர்ப்பம் கிடைத்தபோது, அவர்கள் பின்வரும் மோனையிலோ அல்லது ஓசை நயத்திலோ சொற்களில் அவற்றைக் கண்டார்கள்.*

ஆடு மாடு:

ஆடு: செம்மறி மற்றும் ஆடுகள்

மாடு: பசுமாடு மற்றும் காளைகள்

கன்று காளை:

கன்று: பசு குட்டிகள், எருமை, மான், ஒட்டகம், குதிரை, யானை மற்றும் இதர வகைகள். நாய், பன்றி, குள்ளநரி மற்றும் இதர வகைகளை குறிக்காது.

காளை: கூட்டமாகவுள்ள மிருகங்கள் (வீட்டில் வளர்க்கக்கூடியவை).

மாடு கன்று:

மாடு: மேலே குறிப்பிட்டுள்ளதுபோல்.

கன்று: மேலே குறிப்பிட்டுள்ளதுபோல்.

தட்டு முட்டு:

தட்டு: தரையில் தட்டையாகக் கிடக்கும் சாதனங்கள் அல்லது ஊன்றுகோலின்றி திரையில் கிடக்கும் சாதனங்கள்.

முட்டு: தாங்கிப்பிடிப்பவைகள்.

இந்த இரண்டு சொற்களும் கூட்டுச்சொற்களாக எப்பொழுதும் வீட்டுப் பொருட்களை குறிப்பிடுகின்றன.

காணி பூமி:

காணி: விதி 14யை பார்க்கவும்.

பூமி: நிலம் என்பதன் பொருள், விவசாயம் செய்யப்படாத மைதானம்.

வீடு வளவு:

வீடு: இல்லம்

வளவு: தோட்டம்; வீட்டைச் சுற்றியுள்ள நிலம். தோட்டத்திற்கு பொருத்தமான அல்லது கட்டுமானத்திற்குப் பயன்படாத வீணான சிறிய நிலம்.

வீடு வாசல்:

வீடு: முன்பு குறிப்பிட்டதுபோல்.

வாசல்: உறைவிடம் அல்லது வசிப்பிடம்.

வாசல் – மூலம்:

இந்த இணைப்பில், வாசல் என்ற சொல்லின் வரலாறு கொஞ்சமும் விசித்திரமானதாக இல்லை. வாய் என்ற தமிழ்ச் சொல், ஆதியில் இடம் என்றும், பின்னர் வழி அல்லது வாய் என்ற பொருளில் புழங்கியது. இணைச் சொல்லான இன்னொரு தமிழ்ச்சொல் இல், வீடு என வேறொரு வடிவத்தை எடுத்தது. அதற்குப் பதிலாக, அதிகளவில் வழக்கமான வடிவமாகிய இல்வாய், நுழைவாயில் அல்லது கதவு என்றாகி இருக்க வேண்டும்.

வாயில் சிதைந்து அல்லது பலபொருள் கூட்டான வாயல் (அதிகாரப்பூர்வமாக சந்தேகத்திற்குரிய வார்த்தை) என்ற சொல்லும் வாய் என்ற

மூலத்திலிருந்து வந்தன. அதன்பொருள், பக்கம் (side) *என்பதாகும்.*

சொற்களைப் பின்பற்றுவதில், சமற்கிருத மொழியிலிருந்து பயன்பாட்டிற்கு பெறப்பட்ட s *மற்றும்* y *மாறக்கூடியவை என்பதால், வாயல் என்ற சொல், வாசல் என்று மாறியது.*

வாசல் என்ற சொல், வாசம் என்ற சொல்லோடு ஒத்ததாகத் தோன்றுகிறது. அதன்பொருள், உறைவிடம், இருப்பிடம் அல்லது ஊர்.

தோட்டம் துரவு:

தோட்டம்: நிலப்பண்ணை.

துரவு: ஒரு திறந்த கிணறு.

17. உரிமை மற்றும் கூட்டுப்பொருள்:

உரிமை என்பது பரம்பரை என்பதற்கான தமிழ்ச்சொல்.

அவை, சொற்களுடன் இணையும்போது,

பிள்ளை - child

ஆண் - male

பெண் - female

வழி - way or line

இது, பின்வரும் வடிவங்களாகவும் அர்த்தங்களாகவும் கருதப்படுகிறது.

உரிமைப்பிள்ளை – வாரிசு

உரிமை ஆண் பிள்ளை – ஆண் வாரிசு

உரிமைப் பெண்பிள்ளை – பெண் வாரிசு

பெண்வழி உரிமை – ஒரு பெண் பிள்ளையின் வழி.

பெண்வழி உரிமைப்பிள்ளை – ஒரு பெண் வழியில் வருகிற வாரிசு.

பெண்வழி உரிமைப் பெண்பிள்ளை – ஒரு பெண் வரிசையில் வருகிற பெண் வாரிசு.

பெண்வழி உரிமைப்பிள்ளை:

ஒரு நபர், ஆணோ அல்லது பெண்ணோ, அவனுடைய அல்லது அவளுடைய வம்சாவழியை ஒரு பெண்ணிடமிருந்து தொடங்கி தங்குதடையின்றி பெண்கள் வாரிசில் வந்திருப்பார் என்றால், அப்பெண்ணின் வம்சாவழி பெண்வழி உரிமைப் பிள்ளை எனப்படுவார்.

பெண்வழி உரிமைப் பெண்பிள்ளை:

வேறொரு பெண்ணிடமிருந்து, அவளுடைய வம்சாவழியைப் பெற்ற ஒரு பெண், தங்கு தடையின்றி பெண்கள் வாரிசில் வந்திருப்பாராயின், அவள் வேறொரு பெண்ணின் பெண்வழி உரிமைப் பெண்பிள்ளை எனப்படுவார்.

மட்டகளப்பில், இந்தப் பதங்கள் எதுவும் பொதுப் பயன்பாட்டில் இல்லை. ஆனால், அதன் முக்கியத்துவம் வேறுவிதமாக வெளிப்படுத்தப்படுகிறது.

18. தாய்வழி முதுசொம் – வரையறை:

அம்மாவின் முதுசொம் என்பது தாய்வழி முதுசொம்.

ஒரு பெண், சொத்தினை வைத்திருந்தால் அல்லது அதற்குத் தகுதியுடையவராக இருந்தால், அது அவளது முதுசொம் என்ற உரிமையுடன் வருவதாகும். அது, அவளுடைய பிள்ளைகளைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய தாய்வழி முதுசொம் என அழைக்கப் படுகிறது.

தாய்வழி முதுசொம் குறித்து அதிகபட்ச அறியாமையும் குழப்பமும் நிலவுவதால், அதுபற்றி விரிவாக விளக்க வேண்டிய தேவை இருக்கிறது.

விளக்கம்:

தேட்டம் தவிர, வேறு எவ்வகை சொத்துக்களையும் கொண்டிராத திருமணமான முக்குவர் குடும்பம் ஒன்றினை எடுத்துக் கொள்வோம்.

இந்த தேட்டம், அவர்களின் பிள்ளைகளுக்கு முதுசொம். அதனைப் பிள்ளைகள் பெறும்போது, தந்தைவழியில் ஒரு அரையாக, தாய்வழியில் ஒரு அரையாக இருக்குமென அவர்கள் கருதுகிறார்கள். அதனை அவர்கள், உண்மையாகவே இரண்டு அரையாகப் பெற்றுக் கொண்டாலும், வெவ்வேறு சமயங்களில், அவர்களின் பெற்றோர்கள் இவ்வுலக வாழ்க்கையைவிட்டுச் சென்றபின்பாக, அது தந்தைவழி முதுசொம் மற்றும் தாய்வழி முதுசொம் என இருக்காது என்பதால் தந்தைசொம் மற்றும் தாய்சொம் என்று மட்டுமே பேசப்படுகிறது.

தாய்வழி அல்லது தந்தைவழி முதுசொம் என்று வெளிப்படுகிறபோது, அந்த சொம், ஒத்த தம்பதியருக்கு முது என்றாலும் உத்தேசமாக அப்படியல்ல.

ஒத்த தம்பதியரின் பெண்பிள்ளை ஒன்று, பிள்ளைகளை விட்டுவிட்டு மரித்துவிட்டால், அந்த மரித்தப் பெண் பிள்ளையின் பங்கு அவளது பிள்ளைகளைப் பற்றிய குறிப்புடன் அவர்களது தாய்வழி முதுசொம் பாணியில் அமையும்.

அதற்கான காரணம் வெளிப்படையானது:

அது, உண்மையான உரிமையாளருக்கு தேட்டமாக இருக்கும்.

அது, அந்த உரிமையாளரின் பிள்ளைகளுக்கு முதுசொம்.

அது, அந்த உரிமையாளரின் மகள்களின் பிள்ளைகளுக்கு தாய்வழி முதுசொம்.

அதுகுறித்த முக்குவர் வரையறை:

முக்குவர் வரையறை யாதெனில்,

'என் தாய்க்கு முதுசொம் என்பது எனக்கு தாய்வழி முதுசொம்'.

தாய்வழி முதுசொம் எதனைக் கொண்டுள்ளது?

ஒருவருடைய தாய்வழி முதுசொம் கீழ்க்காணும் பலவற்றைத் தன்னுள் கொண்டதாகும். அவை:

I. *ஒருவருடைய தாயின் தந்தைவழி சொம்: அதாவது, அவளுடைய தந்தையின் தேட்டம்.*

II. *அவளுடைய தந்தைவழி முதுசொம்: அதாவது, அவளுடைய தந்தையின் முதுசொம்; அவளது தாயின் மூலம் பெறப்படவில்லை.*

III. *அவளுடைய தாய்வழி சொம்: அதாவது, அவளுடைய தாயின் தேட்டம்.*

IV. *அவளுடைய தாய்வழி முதுசொம்: அதாவது, சொம்மானது அவளுடைய தாய்க்கு முது.*

தாய்வழி முதுசொம், தாய்வழி சொம் இடையே குழப்பம் கூடாது:

தந்தைவழி சொம், தந்தைவழி முதுசொம் மற்றும் தாய்வழி சொம் போன்ற பதங்கள் முக்குவர் பயன்பாட்டில் இல்லை. இனிமேல் தோன்றும் காரணங்களாக: அதாவது, தாய்வழி சொம் மற்றும் தந்தைவழி முதுசொம் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை வாசகர்கள் மனதில் கொள்ளவேண்டும். கற்றுக்குட்டியாக இருப்பவர், முக்குவர் சட்டத்தைப் புரிந்து கொள்வதில் மிகுந்த சிரமம் அடைவதற்கு காரணமாக இருப்பது இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்வதில் இருக்கிற அவருடைய அறியாமை மற்றும் மறதி ஆகியவையே.

தாய்வழி முதுசொம்மின் பிறப் பெயர்கள்:

சில நேரங்களில் சிறப்பான முறையில் தாய்வழி முதுசொம் வெறுமனே முதுசொம் என அழைக்கப் படுகிறது.

இது, இன்னும் சில சமயங்களில்

முக்குவ முதுசொம்,

முக்குவ காணி,

முக்குவ நிலம்,

பரவணிக் காணி,

பரவணி முதுசொம்

மற்றும்

மருமக்கள் காணி.

பரவணி – வரையறை:

பரவணி என்பது சமற்கிருத தோற்றம்கொண்ட ஒரு சொல். அதன்பொருள், நேர் வம்சாவளி அல்லது பரம்பரை வாரிசு.

பரவணிக் காணி என்பது காணி. அது, வம்சாவளி அல்லது வாரிசு வாயிலாக வருவதாகும்.

மருமக்கள் என்பது ஒரு மனிதன் அவனுடைய சகோதரியின் பிள்ளைகளையும் மற்றும் ஒரு பெண் அவளுடைய சகோதரனின் பிள்ளைகளையும் அழைக்கும் பெயராகும்.

19. முதுசொம் எனக் கருதப்படுவது எது?

முதுசொம் தொடர்ச்சியாக முதுசொம் என்றே கணக்கிடப்படுகிறது. அது, உரிமைப் பிள்ளையால் உடனடியாக அவருடைய மாதாக்கள் மற்றும் மூதாக்கள் வாயிலாக கிடைக்கிறது அல்லது அது அவர்களிடமிருந்து பெறப்பட்டதாக, அதாவது சமரசமாக அவர்களுடைய வம்சாவழி உறவினர் களிடமிருந்து அல்லது தர்ம கர்த்தாக்களிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கலாம்.

அது, உரிமைப்பிள்ளை வாயிலாக தொடர்ந்து வந்தாலும் முதுசொம் தொடர்ச்சியாகவே முதுசொம் என்றே கணக்கிடப்படுகிறது.

சட்டப்படி, எழுதப்படாத உரிமைச்சொத்து,

அல்லது உயில் வாயிலாக, விருப்பப்படி அல்லது மரபுமூலம்,

அல்லது கொடை வாயிலாக, அன்பளிப்பு அல்லது சீதனம்.

தாய்வழி முதுசொம் கால்நடைகள் எப்பொழுது நிலத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது?

தாய்வழி முதுசொம் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வழக்கமாக அதனுள் வேலை செய்வதால், சாகுபடிக்கான தாய்வழி முதுசொம் நிலமானது அந்த நிலத்தின் ஒரு பகுதியாக கணக்கிடப்படுகிறது.

கருவிகள் எவ்வாறு கருதப்படுகிறது?

சட்டத்தைப்போன்றே கருவிகளும் மரியாதைக்கு உரியவை.

20. தேட்டம் என்னவாக கணக்கிடப்படுகிறது?

முதுசொம் நிலத்தின் விளைபொருட்கள் நிலத்திலிருந்து பிரிக்கப்படும்போது தேட்டம் ஆகிறது.

முதுசொம் பணத்தால் வாங்கப்பட்ட அல்லது முதுசொம் சொத்தால் பண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள் ஒன்று இயற்கையாகவே முதுசொம் தன்மையில் பங்கு கொள்ளாது என்பதால் அது தேட்டத்தில் இடம்பெறுகிறது.

தேட்டம் எதனைக் கொண்டிருக்கும்?

தேட்டம், ஒவ்வொரு வகையிலுமான சொத்தினை உட்படுத்தியவையாக இருக்கும்.

அது, அசையும் அல்லது அசையாதவையாக,

அது, கணவனால் மட்டும் வாங்கப்பட்டதாக,

அல்லது மனைவியால் மட்டும்,

அல்லது அவர்கள் இருவரால்,

அது, அவர்களது திருமணத்திற்கு முன்பாகவே வாங்கியதாக,

அல்லது அவர்களுடைய திருமணத்திற்குப் பின்பாக,

அது, உண்மையான அந்நியர்களிடமிருந்து,

அல்லது அவர்களுடைய சொந்த சந்ததியினர் மற்றும் உறவினர்களிடமிருந்து.

தேட்டத்திற்கு ஆதரவான அனுமானம்:

ஆதாரத்தால் முரண்பாடு நிருபிக்கப்படாததுவரை ஒரு சொத்து எப்பொழுதும் தேட்டமாகவே கருதப்படும்.

21. தாய்வழி முதுசொம் நிலம்:

தாய்வழி முதுசொம் நிலத்துடன் தொடர்புடைய அனைத்துக் கேள்விகளும் கீழ்க்காணும் உரிமைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

I. *உண்மையான ஆட்சியுரிமை.*

II. உடைமை என்பது உடைமையாளர் நிலத்தைப் பயிரிடுவதற்கும் மற்றும் விளைச்சலிலிருந்து நியாயமான பங்கினைப் பெறுவதற்கும், சச்சரவு, அபாயம் மற்றும் சாகுபடி செலவுகளால் ஏற்படுகிற இழப்பீட்டை பெறுவதுமாகும்.

III. அனுபவித்தல் என்பது பயன்பாடு மற்றும் ஆதாயம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்பதால், ஏனைய உரிமைகளிலிருந்து வேறுபடுகிறது.

IV. விடுவித்தல் என்பது அந்நியப்படுத்துதல், மாற்றியமைத்தல் மற்றும் வில்லங்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மேற்காணும் நான்கு உரிமைகளையும், ஏனைய உரிமைகளிலிருந்து வேறுபட்டவையாகவும் வித்தியாசமானவையாகவும் கருத வேண்டும்.

I. ஆட்சியுரிமை ஒரு வாரிசுதாரரிடம் இருக்கும்போது, உடைமை மற்றும் அனுபவித்தல் இன்னொருவரிடம் இருக்கும். எனினும், விடுவித்தல் என்பது இருவரிடமும் இருக்கும்.

இருப்பினும், இதிலுள்ள இரு நிகழ்வுகளிலும், விடுவிப்பதற்கான உரிமை என்பது அனுபவிப்பவருக்கே இருக்கிறது.

II. ஒரு வாரிசுதாரரிடம் உடைமை இருக்கும்போது, ஆட்சி, அனுபவித்தல் மற்றும் விடுவித்தல் ஆகியவை பிறரிடம் இருக்கும்.

III. இனிமேல் விளக்கப்பட வேண்டிய சில நிலையான விதிகளின்படி, ஒரு வாரிசுதாரரிடம் அனுபவம் இருக்கும்போது, சிலவேளைகளில் உடைமை அதே

வாரிசுதாரரிடமும் மற்றும் சில வேளைகளில் வேறு வாரிசுதாரரிடமும் இருக்கும்.

IV. விடுவித்தல் எப்பொழுதுமே ஆட்சியுரிமை கொண்டிருப்பவரிடமே இருக்கும். அது, அனுபவம் வைத்திருப்பவரின் உரிமைகளுக்கு உட்பட்டது.

மேலும், மேலே சுட்டிக்காட்டியதுபோல் விடுவித்தல் சில நேரங்களில் அனுபவத்தை வைத்திருப்பவரிடம் மட்டுமே இருக்கும்.

இரண்டாம் அத்தியாயம்

கணவன் மனைவி இருவரும் உயிரோடு வாழ்கிறபோது...

22. தாய்வழி முதுசொம் தவிர, அனைத்து சொத்தும் திருமண அதிகாரத்தின்கீழ் வருபவை:

கணவன், சொத்தின் அனைத்து உரிமைகளையும் மற்றும் அவனது மனைவியின் அனுமதியின்றி தேட்டம் முழுவதையும் முழுமையாகப் பயன்படுத்துவார்.

அவனுடைய அசையும் மற்றும் அசையா தந்தைவழி சொம்.

அவனுடைய அசையும் மற்றும் அசையா தந்தைவழி முதுசொம்.

அவனுடைய அசையும் மற்றும் அசையா தாய்வழி சொம்.

அவனுடைய மனைவியின் தந்தைவழி அசையும் சொம்.

அவளுடைய தந்தைவழி அசையும் முதுசொம்.

மற்றும்

அவளுடைய தாய்வழி அசையும் முதுசொம்.

23. ஆனால், அவளுடைய தந்தைவழி அசையா சொம் மற்றும் அவளுடையை தந்தைவழி அசையா முதுசொம் ஆகியவற்றைப் பொறுத்தளவில்:

I. *அவனுக்கு, அவற்றை மேலாண்மை செய்வதற்கு மட்டுமே உரிமை உண்டு.*

II. *அவளுடைய ஒப்புதலின்றி அவற்றை அவனால் அந்நியப்படுத்த முடியாது.*

III. *எந்தவொரு உடன்படிக்கையும் அவளுடைய ஒப்புதலின்றி, விருப்பமின்றி அவனால் செயல்படுத்தப் பட்டு, அவர்களில் யாரேனும் ஒருவருடைய மரணத்தால் திருமண உறவு முடிந்துபோனால், அதற்கு அவளையோ, அவளுடைய வாரிசுகளையோ பொறுப்பாக்கிட முடியாது.*

24. கணவன், அவனுடைய தாய்வழி முதுசொம்மை அந்நியப்படுத்த முடியாது:

கணவனுடைய தாய்வழி முதுசொம் (முக்குவர் சட்டப்படி, ஏதோ ஒரு நுட்பமற்ற முறையில் வெளிப்படுத்துவதாக இருந்தால் தாய்வழி முதுசொம்மீது ஆணுக்கு ஆயுள் குத்தகை மட்டுமே உண்டு) எல்லா வகையிலும் அவனுடைய சக்திக்கு உட்பட்டதாக இருந்தாலும், அவனுடைய சகோதரிகளின் அனுமதியின்றி, அவனுடைய அல்லது அவனுடைய முன்னோர்களால் ஏற்பட்ட கடன்களுக்காக தவிர, அதாவது (1) அதன் சாகுபடியில், அல்லது (2) அரசுக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கிக்காக மட்டுமின்றி வேறு எந்த நோக்கங்களுக்காகவும், அவனுடைய வாழ்க்கையைத் தாண்டி அதனை அந்நியப்படுத்தவோ அல்லது வில்லங்கம் செய்யவோ முடியாது.

25. அவன், எந்தவொரு நோக்கத்திற்காகவும் அவளுடைய தாய்வழி முதுசொம் நிலத்தை அந்நியப்படுத்த முடியாது. அவளுடைய சகோதரர்கள், வரி அல்லது சாகுபடி கடனுக்காக செயல்படுத்தலாம்.

மனைவியின் அசையா சொத்தான தாய்வழி முதுசொம் அனைத்தும் திருமண அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது. அவளுடைய சகோதரர்கள், வரி அல்லது சாகுபடி நோக்கங்களுக்காக வேண்டி அதை அவளுடைய அனுமதியின்றி அந்நியப்படுத்தலாம்.

அவளுடைய கணவனின் அனுமதியின்றி, அதேவேளையில் அவளுடைய சகோதரர்களின் உரிமைகளுக்கு உட்பட்டு அவற்றைக் கையகப்படுத்தவும், தடங்கல் செய்யவும் அவளால் முடியும். பார்க்கவும்: விதி 38, உறுப்பு 6, 8 மற்றும் 10.

அவர்கள், நீதிமன்றத்தில் அவளை பிரதிநிதித்துவப் படுத்துவார்கள்:

அவளுடைய தாய்வழி முதுசொம் நிலம் சம்பந்தமாக அவளுடையக் கணவன் அல்ல; அவளுடைய சகோதரர்கள் அவளை நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்த முடியும். அத்தகைய நிலம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் கண்டிப்பாக அவர்களுடைய சொந்த செலவில் நடத்த வேண்டும்.

26. கணவன் மனைவி இருவரும் அவர்களுடைய தாய்வழி முதுசொம் நிலத்தைத் தவிர, ஏனைய அனைத்துச் சொத்துக்களையும் ஒன்றாக அப்புறப்படுத்தலாம்:

தாய்வழி முதுசொம் நிலங்களைத் தவிர்த்து கணவன் மனைவி அதிகாரத்தைப் பொறுத்தளவில்,

அவர்களுடைய எந்தவொரு சொம்களையும் கூட்டாக அந்நியப்படுத்திக் கொள்ளலாம் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

27. கணவன், அவளுடைய தாய்வழி சொத்து உட்பட அவனுடைய மனைவியின் அனைத்து அசையும் சொத்துக்களையும் அந்நியப்படுத்தலாம்:

கணவனின் அதிகாரத்தைப் பொறுத்தளவில் அவனுடைய மனைவியின் அனைத்து அசையும் சொத்துக்களையும், அதற்கு மேலும், அவளுடைய தாய்வழி முதுசொம் ஆகியவற்றை அவளுடைய அனுமதியின்றி அந்நியப்படுத்த முடியும் என்பதிலும் சந்தேகம் வேண்டாம்.

28. மனைவியின் நபரும், அவளுடைய உரிமைகளும் திருமண அதிகாரத்தின்கீழ் உள்ளன:

மேலே குறிப்பிட்டுள்ளபடி அவளுடைய மனைவியின் நபருக்கு அவளுடைய உரிமைகள் மற்றும் அவளுடைய சொத்துக்கள் ஆகியவை, அனைத்து வகையிலும் திருமண அதிகாரத்தின்கீழ் அமைந்துள்ளன.

மூன்றாம் அத்தியாயம்

கணவன் மனைவி இருவரும் மரித்தப் பின்பாக...

29. பொதுவான பிரச்சனை இல்லாதபோது:

அவர்கள் இருவருக்கும் பொதுவான வாரிசு இல்லாதபோது அவர்களுடைய பண்ணைகள் இரண்டு பங்காகப் பிரிக்கப்படும்.

மனைவியின் பகுதி மற்றும் கணவனின் பகுதி:

ஒன்று அனைத்தையும் கொண்டிருக்கும் வகையில்,

மனைவியின் தந்தைவழி சொம்,

அவளின் தாய்வழி சொம்,

அவளின் தந்தைவழி முதுசொம்

மற்றும்

அவளின் தாய்வழி முதுசொம்,

அதனுடன்

தேட்டத்தின் ஒரு பாதி.

இது, மனைவியின் பகுதி எனப்படும்.

ஏனைய பகுதி, பண்ணையின் எஞ்சிய பகுதியை கொண்டிருக்கும். அது, கணவனின் பகுதி என்று அழைக்கப்படும்.

30. மனைவியின் பாகம், அவளுடைய சொந்த குழந்தைகளுக்கு போய் சேருகிறது:

முந்தைய திருமணத்தின் மூலம் மனைவி அவளுடைய சொந்த குழந்தைகளை விட்டுச் சென்றால், அவளுடைய பிணைகளின் கூற்றுக்கு உட்பட்டு அப்பங்கு அப்பிள்ளைகளைச் சென்றுசேரும். அவளுடைய மரியாதைக்குரிய தாய்வழி முதுசொம் நிலங்கள் குறித்து இனிமேல் விளக்கப்படும்.

31. வாரிசுதாரர் இல்லாதபோது எழும் அனுமானங்கள்:

அத்தகைய குழந்தைகளை அவள் விட்டுச் செல்லவில்லை என்றால் அவளுடைய பங்கு கீழ்கண்ட வகையில் சென்றுசேரும்.

I. *தாய்*

II. *தாயின் பெண்வழி உரிமைப் பிள்ளை*

III. *தாய்வழி பாட்டி*

IV. *தாய்வழி பாட்டியின் பெண்வழி உரிமைப் பிள்ளை மற்றும் இதர.*

விதி என்னவென்றால், மரித்த மனைவிக்கு நேரடி வாரிசுதாரர்கள் இல்லையெனில், மனைவியின் பங்கு அவனுடைய அல்லது அவளுக்கு நெருக்கமான பெண்வழி பெண் வாரிசுதாரருக்கு அல்லது அந்த

வாரிசுதாரரின் நெருக்கமான பெண்வழி உரிமைப் பிள்ளைக்குப் போய்சேரும்.

32. இதேவிதி கணவனின் பங்கிற்கும் பொருந்தும்.

33. வெவ்வேறு திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தைகள்:

ஒரு மனைவி, ஒன்றிற்கு மேற்பட்ட திருமணத்தின் மூலம் குழந்தைகளை விட்டுச் சென்றிருந்தால், ஒவ்வொரு திருமணத்திலுள்ள குழந்தைகளும் அவர்களுக்கு கிடைப்பதில் சமமானதொரு பகுதியைப் பெற வேண்டும். மேலும், அவர்கள் பிறந்த திருமணத்தை இரத்து செய்தவுடனே, சொத்தினை உடனடியாக பங்கு வைக்க வேண்டும்.

மேலும், அடுத்த திருமணத்திற்கு வேண்டி பண்ணையை ஏதாவது பகுதியாக பிரிப்பதற்கு முன்பாக, அவற்றிலிருந்து முந்தைய திருமணங்களில் பிறந்த பிள்ளைகளுக்குப் போய் சேரவேண்டிய அனைத்து சொம்களையும் பிரிக்க வேண்டியது முதலில் அவசியமானதாகும்.

34. இரு பெற்றோருக்கும் பொதுவான பிள்ளைகள்:

துணைகள், அவர்களுடைய பொதுவான பிள்ளையாக மகன்களையும் மகள்களையும் விட்டுச் சென்றிருந்தார்கள் எனில்,

I. *அசையா தாய்வழி முதுசொம்:*

கணவனுடைய அசையா தாய்வழி முதுசொம், அவனோடு உடன் பிறந்தார்க்குச் சென்று சேரும்.

II. தேட்டம்:

அனைத்துத் தேட்டமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்படும். அவற்றில் ஒன்று, ஒரு மனைவியின் அனைத்து திருமணங்கள் (தற்போதைய திருமணம் உட்பட) வாயிலாகப் பிறந்த அனைத்து பிள்ளைகளுக்கும், அதாவது ஒவ்வொரு நபருக்கும் வீதமாய் பிரித்து அளிக்கப்படும். அதோடு, அவர்களில் யாராவது இறந்திருந்தால், அவரின் பாகம் மரித்தவரின் பிள்ளைகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

III. இன்னொரு துணையின் அனைத்து திருமணங்களில் பிறந்த பிள்ளைகளுக்கு இன்னொரு பாதியும் அதேவழியில் பிரிக்கப்படும். அதோடு, அவர்களில் உரிமைப்பட்ட யாராவது மரித்திருந்தால், அவரின் பாகம் மரித்தவரின் பிள்ளைகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

IV. கணவனின் முதுசொம் தாய்வழி அல்ல:

கணவனின் அசையும் அல்லது அசையாத அனைத்து முதுசொம்களும் உள்ளடக்கமாக:

அவனுடைய தந்தைவழி சொம்,

அவனுடைய தாய்வழி சொம், மற்றும்

அவனுடைய தந்தைவழி முதுசொம்

ஆகியன அனைத்தும் அவனுடைய அனைத்து திருமணங்கள் வாயிலாகப் பிறந்த பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படும். அவர்களில் உரிமையுள்ள யாராவது மரித்திருந்தால் வாரிசுதாரரின் பிள்ளைகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

V. மனைவியின் அசையும் முதுசொம், அது அவளுடைய தந்தை வழியாக இருந்தாலும் அல்லது இல்லாமல் இருந்தாலும், அவளுடைய அனைத்து திருமணங்களின் மூலம் பிறந்த அவளுடைய பிள்ளைகளுக்கு சரிசமமாக பகிர்ந்து அளிக்கப்படும். அவர்களில் யாராவது மரித்திருந்தால், அவரின் பாகம் மரித்தவரின் குழந்தைகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

VI. மேற்கூறிய உறுப்பு 2, 3, 4 மற்றும் 5இன்கீழ் பாகப்பிரிவினை செய்தவுடன், பங்குகள் கொடுக்கப் படுவதற்கு முன்பாக ஒவ்வொரு வாழ்க்கைத் துணையின் ஒவ்வொரு திருமணத்திலும் பிறந்த ஆண் பிள்ளைகள், உடன்பிறந்த சகோதரிகளுக்கு உரிமையான பணம் மற்றும் தானியம் ஆகிய அனைத்துப் பங்குகளையும் அவர்களின் அனைத்து சகோதரிகளுக்காக தாங்களே எடுத்துக் கொள்வார்கள்.

VII. அதைப்போன்று, அவர்களுடைய பெற்றோரால் வியாபாரம் செய்வதற்கு வேண்டி விற்பனைக்காக வைத்திருக்கும் சாதனங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியவற்றிலிருந்து சகோதரிகளுக்குக் கிடைக்கும் அனைத்துப் பங்கினையும் மகன்கள் எடுத்துக் கொள்வார்கள்.

VIII. மனைவியின் அசையா முதுசொம்:

மனைவிக்குரிய அசையா முதுசொம் யாதெனில்:

அவளுடைய தந்தைவழி முதுசொம்,

அவளுடைய தாய்வழி முதுசொம்,

அவளுடைய தந்தைவழி சொம்,

மற்றும்

அவளுடைய தாய்வழி சொம்.

(இவையனைத்தும் அவளுடைய பிள்ளைகளைப் பற்றிய சான்றுடன் தாய்வழி முதுசொம் ஆகிறது). மேலும், மரபுரிமை குறித்த உறுதியான விதிகளின் பயன்பாடு குறித்து அடுத்த அத்தியாயத்தில் காணலாம்.

35. பொதுவான மகன்கள் அல்லது பொதுவான மகள்கள் மட்டுமே உள்ளபோது:

வாழ்க்கைத் துணைவர்கள், பொதுவான மகள்களை விட்டுச் செல்லாமல், பொதுவான மகன்களை மட்டும் விட்டுச் சென்றிருந்தால் அல்லது பொதுவான மகன்களை விட்டுச் செல்லாமல் பொதுவான மகள்களை மட்டும் விட்டுச் சென்றிருந்தால், அனைத்துப் பிரிவுகளின் கடைசி விதியானது இதற்கு இன்னும் பொருந்தும். மேலும், மனைவி, அவளுடைய சொந்த மகள்களை அல்லது அந்த மகள்களில், ஏதாவது பெண்வழி உரிமைப் பிள்ளைகளை விட்டுச் சென்றிருந்தாலும் மேற்கூறப்பட்ட விதியே பொருந்தும்.

அவள், அத்தகைய பெண் பிள்ளைகளை அல்லது அவளுடைய பெண்வழி உரிமைப் பிள்ளைகளை விட்டுச் செல்லாதிருந்தால் அவளுடைய முதுசொம் மற்றும் அவளுடைய அசையும் மற்றும் அசையா தாய்வழி முதுசொம் ஆகிய இரண்டும் அவளுடைய மகன்களுக்கு சரிசமமாக பிரித்து அளிக்கப்படும். அவர்களில் உரிமையுடைய யாராவது மரித்திருந்தால் மரித்தவரின் மகன்களுக்கு சரிசமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

மட்டக்களப்பிலுள்ள சில நபர்கள் தூக்கிப் பிடிப்பது யாதெனில், அவளுடைய தாயிடமிருந்து பெண்கள் அல்லது அவளுடைய தாய்வழிப் பாட்டியின் வழியில் பெண்கள் இருக்கும்போது, அவளுடைய தந்தைவழி முதுசொம் எதுவும் அவளுடைய மகன்களுக்கு போய்சேராது என்பதாகும்.

அனைவரும் ஒத்துக்கொள்வது யாதெனில், அவள் மகள்களை விட்டு செல்லாமல் இருந்தால், மனைவியின் முதுசொம், அவளுடைய ஆண் மகன்களை சென்று சேரும் என்பதே.

வாழ்க்கைத் துணைவர்கள், பொதுவான மகன்களை விட்டுச் செல்லாமல், பொதுவான மகள்களை மட்டும் விட்டுச் சென்றிருந்தால், பணம், சாதனங்கள், கால்நடைகள் மற்றும் தானியங்கள் ஆகியவை பொதுவான மகள்களையே சென்று சேரும்.

நான்காம் அத்தியாயம்

தாய்வழி முதுசொம் நிலத்தின் இறங்குரிமை

36. *முதுசொம்:*

ஒரு பெண், அசையா முதுசொம் சொத்தினை விட்டுவிட்டு மரிக்கும்போது, அவளுடைய பிள்ளைகளுக்கு அது தாய்வழி என்றாலும் அவளுக்கும் அது தாய்வழியா அல்லது இல்லையா?

I. *ஆட்சியின் தொடர்ச்சி:*

ஆட்சியின் உரிமைப்படி அவளுடைய மகள்களுக்கு சமபங்குகளாக சென்று சேரும்.

அவளுடைய ஏதாவதொரு பெண் பிள்ளை அவளுக்கு முன்பாகவே மரித்துவிட்டால், அவளுடைய பெண் பிள்ளைகளுக்குச் செல்ல வேண்டிய ஆட்சியின் பங்குகள், மரித்த அவளுடைய பெண்வழி உரிமைப் பெண் பிள்ளைகளுக்குச் சென்று சேரும்.

அவளுடைய மகள்கள் அல்லது அவளுடைய பெண்வழி உரிமைப் பெண் பிள்ளைகள் உயிரோடு இருக்கும்வரை அவளுடைய மகன்களுக்கு ஆட்சியுரிமை ஒருபோதும் செல்லாது.

தூரத்து பெண்வழி உரிமைப் பெண் பிள்ளைகள், அவர்களுடைய இறந்துபோன தாய்மார்களின்

பிரதிநிதியாக மிக நெருங்கிய உறவுகொண்ட பெண்வழி உரிமைப் பிள்ளைகளோடு ஆட்சியுரிமையில் ஒரு பங்கினைப் பெறுவர். அதேநேரத்தில், நெருங்கிய உறவினர்களும் பெறுவர்.

II. உடைமையாகுதல்:

உடைமையின் உரிமை, அவளுடைய ஆண் பிள்ளைகளுக்கு சமபங்கில் சென்று சேருகிறது.

அவளுடைய ஆண் பிள்ளைகளில் யாரேனும் அவளுக்கு முன்பாக மரித்துவிட்டால், அவர்களுடைய பெற்றோர்களை பிரதிநித்துவம் செய்யும் வாய்ப்பு இல்லை என்பதால் உடைமையில் எந்தவொரு பங்கினையும் அவர்கள் பெறுவதில்லை.

அவளுடைய மகன்கள் அல்லது அவளுடைய பெண்வழி உரிமை ஆண் பிள்ளைகள் உயிரோடு வாழும்வரை அவளுடைய மகள்களுக்கு அல்லது அவர்களுடைய பெண் வாரிசுகளுக்கு உடைமை சென்று சேராது.

அவளுடைய நெருங்கிய உறவினரான பெண்வழி உரிமை ஆண் பிள்ளைகள் தாங்களே உரிமையைப் பெற்றுக்கொண்டு, தூரத்து உறவுகளை உரிமையின் பொருட்டு விலக்கி வைப்பார்கள். மேலும், உடைமை என்பது வெவ்வேறு வாரிசுதாரர்களின் கைகளில் ஒரே நேரத்தில் மற்றும் ஒரே முறையில் இருக்க முடியாது.

III. அனுபவித்தல்:

அனுபவ உரிமை, அவளுடைய மகன்கள் ஒவ்வொருவருக்கும் சென்று சேரும்.

அவளுடைய ஆண் பிள்ளைகளில் யாரேனும் அவளுக்கு முன்பாக மரித்துவிட்டால், அவர்களுடைய பெற்றோர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பு இல்லை என்பதால் அனுபவத்தில் பங்குகோர முடியாது.

பெண் பிள்ளைகளின் சகோதரர் இருக்கும் வரையில், அவளுடைய பெண்வழி உரிமைப் பெண் பிள்ளைகளுக்கு அனுபவ உரிமை போய் சேராது.

அவளுடைய மகன்கள் அனைவரும் மரித்துவிட்டால், அனுபவம் அவளுடைய மகள்களுக்கு சமபங்கில் போய் சேரும்.

ஆண் மகன்கள் அனைவரும் மரித்துப்போனால் அனுபவம் அவளுடைய மகள்களுக்கு சென்று சேரும். அவளுடைய மகள்களில் யாரேனும் ஒருவர் மரித்துப்போனால் மரித்தவளின் பங்கினை அவளுடைய மகள்கள் சமபங்காக எடுத்துக்கொள்வர்.

IV. விடுவித்தல்:

விடுவித்தல் உரிமை, அவளுடைய மகள்களுக்கு உரிமைப்பட்டது என்றாலும் அவளுடைய மகன்களுடைய அனுபவ உரிமைக்கு கட்டுப்பட்டதாக இருக்கும்.

அனுபவம் வைத்திருப்பவர் சாகுபடி மற்றும் வரி நோக்கங்களுக்காக விடுவிக்கும் உரிமையைக் கொண்டிருப்பார்.

37. கூடுதலாக இறங்குரிமை:

இறங்குரிமை குறித்த கூடுதல் விவரங்கள்:

I. *ஆட்சி செய்தல்:*

ஆட்சியுரிமையின் ஒரு பங்கினை வைத்திருக்கும் பெண் மரித்தால் விதி 36(1)இன்படி அந்த பங்கு அவளுடைய மகள்களுக்கு சென்று சேரும்.

II. *உடைமை கொள்ளுதல்:*

ஆண் ஒருவருடைய உடைமை, அவனுடைய ஆண் மருமக்களுக்கு நேர்வழியில் சென்று சேரும்.

ஒரு பெண்ணுக்கு சகோதரன் அல்லது மகன்கள் இல்லாதபோது அல்லது அவளுடைய சகோதரர்கள் மற்றும் மகன்கள் திறனற்ற வகையில் பைத்தியம், இளவல் அல்லது வேறு காரணங்களால் உடைமை கொள்ள முடியாத நிலையில் இருக்கும்போது தவிர ஒருபோதும் அது பெண்களின் கைகளுக்குச் சென்று சேராது.

III. *அனுபவம் கொள்ளுதல்:*

அனுபவ உரிமையைக் கொண்டிருந்த ஆண் மரித்துவிட்டால், வழிமுறையாக அவனுடைய வாழ்கின்ற சகோதரனை அல்லது சகோதரர்களைச் சென்று சேரும்.

அனைத்து சகோதரர்களும் மரித்துவிட்டால், அது அவர்களுடைய சகோதரிகளுக்கு அல்லது ஒவ்வொரு நபருக்கும் மற்றும் மரித்தவரின் சகோதரிகளின் பிள்ளைகளுக்கு பங்கில் வீதமாக சென்று சேரும்.

இந்த சகோதரிகளில் ஒருவர் மரித்துவிட்டால், அவளுடைய அனுபவத்திற்குரிய பங்கு அவளுடைய மகன்களுக்கு சமபங்காக சென்று சேரும்.

இவ்வாறாக அனுபவ உரிமை சென்று சேருவது:

(அ) தாயிடமிருந்து அவளுடைய மகன்களுக்கு,

(ஆ) ஆணிடமிருந்து, அவனுடைய உயிருள்ள சகோதரர்களுக்கு,

(இ) அனைத்து சகோதரர்களும் மரித்துவிட்டால், அவர்களுடைய சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் சமபங்காக சென்று சேரும். அச்சகோதரிகளில் யாராவது மரித்துவிட்டால், மரித்தவரின் பங்கில் பிள்ளைகள் பிரதிநிதித்துவ உரிமையைப் பெறுவர்.

மிக நெருங்கிய பெண்வழி உரிமை ஆண் பிள்ளை, தூரத்து உரிமைப் பிள்ளைகளை விலக்கி வைப்பதன் மூலம் அனுபவத்தை வெற்றி கொள்வர்.

IV. விடுவித்தல்:

விடுவித்தல் எப்பொழுதுமே ஆட்சி உரிமை வைத்திருப்பவருக்கே உரியதாயினும் அனுபவ உரிமை வைத்திருப்பவர்களின் உரிமைக்கே அது உட்பட்டதாக இருக்கும்.

சாகுபடி கடன் மற்றும் வரி ஆகிய நோக்கங்களுக்காக எப்பொழுதும் விடுவிக்கும் உரிமையைக் கொண்டவரே அனுபவத்தை வைத்திருப்பார்.

38. தாய்வழி முதுசொம் பற்றிய பொதுவான விதிகள்:

I. ஒரே தாயிடமிருந்து பிறந்த சகோதர்கள் மற்றும் சகோதரிகள் மட்டுமே அவளுடைய முதுசொம்:

அவளுடைய வயிற்றில் பிறந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் தவிர, சகோதரர்கள் மற்றும் சகோதரிகள்

அல்லது அவர்களுடைய வாரிசுதாரர்கள் எவரும் அசையும் அல்லது அசையா தாய்வழி முதுசொம்மில் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறு செய்தால், முதுசொம் சொத்து கேள்விக்குரியதாகும்.

II. முதுசொம் சொத்தில் அடுத்தடுத்த உறவுமுறை மறுபரிசீலனை செய்யப்படவில்லை:

தந்தை அருகிலுள்ள உறவுமுறை ஒருபோதும் தாய்வழி முதுசொம் வாரிசில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

III. வாழ்க்கை சீவிதம்:

ஒரு ஆணிடம் அனுபவம் இருக்கும்போது உடைமையும் அவனிடமே இருக்கும். அதேவேளையில், ஆணிடம் உடைமை இருக்கும்போது, அனுபவம் அவனிடம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

உடைமை மற்றும் அனுபவம் ஒரே நபரிடம் இருக்கும்போது, 'வாழ்க்கை சீவிதம்' என்றே பேசப்படுகிறது.

IV. தாய்வழி முதுசொம் எப்பொழுது தேட்டம் ஆகும்?

பிற வாரிசுதாரர்களின் கவனமின்மையால் ஆட்சி, உடைமை, அனுபவம் மற்றும் விடுவித்தல் ஆகிய நான்கு உரிமைகளும் ஒரே ஆணிடம் ஒன்றாக இருக்கும்போது முதுசொம் தேட்டமாக மாறி, இறங்குரிமை சட்டப்படி தேட்டத்திற்கு பொருந்துவதாக அமையும்.

V. அனுபவத்தை கொண்டிருக்கும் சகோதரர் ஒருவர், அவருடைய சகோதரிகளுக்கு எந்தவொரு பங்கினையும் கொடுக்க வேண்டிய கட்டாயமில்லை:

தாய்வழி முதுசொம் நிலத்தினை உடைமையாகவும் அனுபவமாகவும் கொண்டிருக்கும் சகோதரன் அவனுடைய சகோதரிகளிடம் தாராளமாக நடந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில், அவர்களுக்கு எந்தவொரு பங்கினையும் அவன் கொடுக்க வேண்டும் என்பதற்கு சட்டம் இல்லை.

VI. மூத்த சகோதரர்களின் உரிமைகள்:

விதி 36, உறுப்பு 3இன்படி, அனுபவ உரிமை ஒரு தாயிடமிருந்து அவளுடைய மகன்களுக்கு சரிசமமாக சென்று சேரும். உண்மையான நடைமுறைகளின்படி, மட்டக்களப்பில் மூத்த சகோதரரே முழு அனுபவத்தையும் வைத்திருப்பவராகக் கருதப்படுகிறார். மேலும், நிலத்தின் முழு நிர்வாகமும் சாகுபடியும் அவரிடமே உள்ளது. இளைய சகோதரர்கள் அவரது உதவியாளராக அல்லது அவரது ஊழியர்களைவிடச் சற்று உயர்ந்தவராக கருதப்படுகிறார். ஆனால் சட்டப்படி, அனைத்து சகோதரர்களும் சம பங்குதாரர்கள்.

மூத்த சகோதரர் மரித்துவிட்டால் அடுத்த வயதுடையவர் அந்தத் தகுதியைப் பெறுவார்.

VII. தாய்வழி முதுசொம்மின் வீடு வளவு:

தாய்வழி முதுசொம் ஒரு வீடாக இருந்தால், ஆட்சியுரிமை கொண்டிருப்பவர்கள் அதில்

வாழ்வதற்கும் மற்றும் வளவிலுள்ள விளை பொருட்களை உடனடியாக அதோடு இணைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு.

VIII. தாய்வழி முதுசொம்மை தானம் செய்யும் அதிகாரம்:

தாய்வழி முதுசொம் ஆட்சியைக் கொண்டுள்ள ஒரு பெண், அவளுடைய மகன்கள் உரிமை கோருகிற உடைமை மற்றும் அவளுடைய இறப்புக்குப்பிறகு அதன் அனுபவம் ஆகியவற்றை அவளுடைய வாழ்நாளில், அவளுடைய மகள்களுக்கு நன்கொடை, சீதனம் அல்லது விற்பனை மூலமாக இழக்கச் செய்யலாம். கீழேயுள்ள 10த்தினைப் பார்க்கவும்.

IX. அரசாங்கத்தின் அதிகாரம்:

தாய்வழி முதுசொம் நிலத்திற்கு வரி பாக்கி இருந்தால், அதனை அரசாங்கம் விற்பனை செய்திட முடியும்.

X. விடுவித்தல்

விடுவித்தல், அவளுடைய சகோதரர்களின் உரிமைகளுக்கு உட்பட்டது என்றாலும், அசையும் அல்லது அசையா தாய்வழி முதுசொம் ஆட்சியை கொண்டிருக்கும் அவள், அவளுடைய விருப்பத்தின்பேரில் அதனை அகற்றும்போது, அதனைத் தடுப்பதற்கு சட்டம் இல்லை. ஆனால், தீர்ப்புகளில் சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடான கருத்துகளை எண்கள் 10524 மற்றும் 12668 ஆகியவற்றில் காணலாம். அவதூறு வழக்கு எண். 13341 இல், ஆட்சியுரிமை கொண்ட முக்குவப் பெண்கள், அவர்களுடைய தாய்வழி முதுசொம் நிலங்களை

வாழ்க்கைச் சீவிதம் கொண்டிருப்பவர்களின் ஒப்புதலுடன் விற்பனை செய்யும் நிரந்தர வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. எண் 12460இல், உடைமை மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டுள்ள சகோதரன் ஒருவன், அவனுடைய சகோதரிகளை அதில் சேர்க்காமல் விற்பனை செய்தது செல்லும் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில், சகோதரிகள் அவர்களுடைய உறவினர்களின் விற்பனைக்கு ஆட்சேபனை தெரிவிக்காத நிலையில், அவர்களுடைய மைத்துனர்கள் மட்டுமே ஆட்சேபனை தெரிவித்து இருந்தார்கள்.

XI. நன்கொடையின் வலிமை அல்லது வாரிசின் பரம்பரைச் சொத்து:

மகள் ஒருத்தி, உரிமையாக, நன்கொடையாக அல்லது சீதனமாக அவளுடைய தாயிடமிருந்து பெற்ற முதுசொம் நிலத்தை அல்லது தாய்வழி முதுசொம் நிலத்தை, அவளுடைய வாழ்நாளில் விடுவிக்காமல் மரித்துப்போனால் அது அவளுடைய பண்ணையோடு சேர்வதுடன், அந்நிலத்திற்குரிய தாய்வழி முதுசொம்மின் சுமைகள் அனைத்தும் ஒன்றாக அதில் புத்துயிர் பெறுவதோடு, அவளுடைய மகள்களுக்கு மாறாக அவளுடைய மகனின் கோரிக்கையான வாழ்க்கை சீவிதம் நிலைநிறுத்தப்படும்.

இந்த விதியை ஒத்த வழக்கம், மட்டக்களப்பு பண்டாரப் பிள்ளைகள் மத்தியிலும் உள்ளது.

XII. தாய்வழி முதுசொம் நிலத்தைவிட்டு வெளியேறும் உரிமை:

எந்தவொரு நபரும், தாய்வழி முதுசொம் நிலத்தை உரிமைப் பிள்ளைகளுக்கு வழங்காமல், அந்நியர்களுக்கு ஆதரவாக கொடுத்துவிட முடியாது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளது.

XIII. *கால்நடைகள் மற்றும் கருவிகள்:*

ஏற்புடையதாகிய விதி 19இன்படி, தாய்வழி முதுசொம் கால்நடைகள் மற்றும் கருவிகள் ஆகியவை அடுத்தடுத்து பிணைக்கப்பட்டுள்ள தாய்வழி முதுசொம் நிலத்தின் சட்டத்தைப் பின்பற்றுகின்றன.

XIV. *பிற கால்நடைகள் மற்றும் கருவிகள், அசையும் சட்டத்தைப் பின்பற்றுகின்றன.*

ஐந்தாம் அத்தியாயம்

தம்பதிகளில் ஒருவர் உயிரோடு இருக்கும்போது...

39. *உயிர் பிழைத்தவரின் பகுதி:*

அத்தியாயம் 3 மற்றும் 4இல் உள்ளதுபோல் சட்டம் அமைந்திருக்கும். விதிவிலக்காக, உயிர் பிழைத்தவர் அவனுடைய அல்லது அவளுடைய பகுதியை விதி 29இல் வரையறுக்கப்பட்டுள்ளது போன்று, இதரப் பகுதியை மட்டுமே மரித்தவரின் வாரிசுகளுக்குப் பிரித்துக்கொடுக்க அனுமதிக்கப்படுகிறார்.

அகற்றும் உரிமை:

உயிர் பிழைத்தவருக்கு, தாய்வழி முதுசொம் நிலத்தைத் தவிர அவனுடைய அல்லது அவளுடைய அனைத்து பகுதிகளையும் விருப்பத்தின்பேரில் அகற்றுவதற்கு உரிமையுண்டு.

கணவன், அவனுடைய தாய்வழி முதுசொம் நிலத்தில் உடைமையும் அனுபவமும் கொண்டிருந்தாலும், வரி மற்றும் சாகுபடி நோக்கங்களைத் தவிர, அந்நிலத்தை அந்நியப்படுத்த முடியாது.

மனைவிக்கு தாய்வழி முதுசொம்மீது இருக்கும் அதிகாரத்தை விதி 38இல் பார்க்கவும்.

ஆறாவது அத்தியாயம்

முக்குவர் சட்டத்தைக் குறித்த பிரபலமானக் கருத்துக்கள்

40. இந்தப் பார்வைகளில் ஒருவரின் கருத்து என்னவென்றால்,

I. *தாய்வழி முதுசொம் நிலம் மட்டுமே முக்குவர் சட்டத்திற்கு உட்பட்டது என்று சிலர் கருதுகின்றனர்:*

தாய்வழி முதுசொம் நிலத்தைத் தவிர ஏனைய அனைத்து சொத்துக்களும் டச்சு உரோமன் சட்டத்தை அனைத்து வகையிலும் பின்பற்றுகின்றன. இத்தருணத்தில், அதைப் பொறுத்தவரை,

இரண்டு பகுதிகளாக பண்ணைகள் பிரிக்கப்பட்டு, அதன் பங்குகளை ஒவ்வொரு துணைகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

பல்வேறு வகையான உறவுகளாகிய சுற்றத்தார், சந்ததியினர் மற்றும் கிளைமரபினர் சூழ்நிலைக்கு ஏற்ப அடுத்தடுத்ததாக ஏற்கவோ அல்லது தவிர்க்கவோ செய்யலாம்.

தெற்கு நெதர்லாந்த் சட்டச் செயல்பாடுகளில் காணப்படும் இறங்குரிமை மற்றும் விதிவிலக்குகள் என்னவென்றால்,

அடுக்குதல் அல்லது தாறுமாறாகக் குவித்தல்;

முழு மற்றும் அரை இரத்த உறவுகளின் முறையான இணை உரிமைகள்;

சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த பிள்ளைகளின் உரிமைகள்;

மற்றும் இதர.

II. *மற்றும் அது மருமக்களிடம் சென்று சேரும்:*

அதன் பிடிப்பு யாதெனில், தாய்வழி முதுசொம் நிலமானது மாமன்மார்களிடமிருந்து அவர்களுடைய மருமக்களுக்குச் செல்லும்போது அந்நிலம் மட்டும் மருமக்கள் காணி என்று அழைக்கப்படுகிறது. மேலும், அவர்களுடைய தாய்மார்களைப் பராமரிப்பதன் அவசியத்தை மருமக்கள் மீது விதிக்கிறது.

III. *மற்றொரு பார்வை யாதெனில், தாய்வழி முதுசொம் நிலம் தாயிடமிருந்து மகள்களுக்குச் சென்று சேருகிறது.*

IV. *மகள்கள், அவர்களுடைய பாலினத்தின் காரணமாக அவர்களின் நிலத்தை உடைமை கொள்ளவோ அல்லது அவர்களுடைய நிலத்தில் சாகுபடி செய்யவோ தகுதியற்றவர்களாக இருந்தால், அதன்படி அது, அவர்களுடைய சகோதரர்களுக்கும் மகன்களுக்கும் அடுத்தடுத்து நிர்வாகம் செய்வதற்காக வழங்கப் படுகின்றன.*

V. *ஆண்கள், அவர்களுடைய சகோதரிகளுக்கு மேலாளர்கள் அல்லது அறங்காவலர்கள் என்று கருதப்படுவார்கள்:*

அதனால் சகோதரர்கள் அவர்களுடைய சகோதரிகளுக்கு மேலாளர்கள் அல்லது அறங்காவலர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

VI. அவர்களுடைய மாமன்மார்கள் மரணத்தின்போது தாய்வழி முதுசொம் நிலத்தை மகன்கள் நிர்வகிக்க வரும்போது, அவர்கள் அவர்களுடைய தாய்மார்களின் அறங்காவலர்களாக அல்லாமல் ஒரு புனைகதைபோல், அவர்களுடைய சகோதரிகளுக்கு அறங்காவலர்களாகக் கருதப்படுகிறார்கள்.

VII. தலைமை மேலாளர் மற்றும் அவரது உரிமைகள்:

ஆண் மருமக்களில் மூத்தவரே தலைமை மேலாளராக அல்லது அறங்காவலராக இருக்கும்போது, அவரது விருப்பத்திற்கு ஏற்ப அவரது சகோதரர்கள் அல்லது சகோதரிகள் சாகுபடியில் ஏதாவது பங்கு பெறுவதற்கு அல்லது நிலத்தில் உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளிக்கலாம். ஆனால் அவர், அவருடைய தாயை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

VIII. இந்த கருத்துக்களை மேலும் விவரிப்பது அல்லது எந்த இடத்தில் அவர்கள் உடன்படுகிறார்கள் அல்லது முந்தைய பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையான விதிகளிலிருந்து மாறுபடுகிறார்களா என்பதனைச் சுட்டிக் காட்டுவது அவசியமற்றது.

IX. மருமக்கள் காணி பயன்பாடு ஏன் ஏற்படுகிறது?

அறங்காவலர், மேலாளர், தலைமை மேலாளர் மற்றும் மருமக்கள் காணி ஆகிய சொற்களையும் அதன் பயன்பாட்டு அர்த்தத்தையும் வாசகர் கவனிக்கத் தவறமாட்டார்.

X. *மருமக்கள் என்ற சொல் காணியைத் தவிர வேறு எந்த சொற்களோடும் (அசையும் அல்லது அசையா பொருட்களை வெளிப்படுத்துகிறதா) இணைக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதற்குரிய காரணம் என்னவென்றால், அசையும் தாய்வழி முதுசொம் ஒருபோதும் மைத்துனர்களுக்கு சென்று சேருவதில்லை. பண்டைய முக்குவர்களின் தோட்டம் அல்லது துரவு என்பன வீடு அல்லது வளவு ஆகியவற்றிலிருந்து வேறுபட்டு இருக்கவில்லை. அத்துடன், பெண் மருமகள் இருக்கும்போது, அசையும் சொத்துக்கள் ஆண் மருமக்களுக்கு ஒருபோதும் சென்று சேருவதில்லை.*

ஏழாம் அத்தியாயம்

முக்குவர் சட்டத்தின் தோற்றம்

41. *முக்குவர் சட்டத்தின் தோற்றம்:*

கருணையுள்ள நண்பர் ஒருவர் கவனிக்கத் தவறியதன்பேரில் கொடுத்த ஆலோசனை யாதெனில், 'முக்குவர் சட்டம்' என்பது அச்சகத்திலிருந்து வெளியாகிய தாள்கள் என்பதாகும். அதன் தொகுப்பாளர் என்ற முறையில், முக்குவ ஆட்சி அமைப்பின் தோற்றம் பற்றி, இந்த அவசர குறிப்புகளை கூடுதலாக சேர்க்க வேண்டிய தூண்டுதல் ஏற்படுகிறது. அவை, மக்களின் மொழி, வழக்கங்கள் மற்றும் பாரம்பரிய கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. அதனை, தற்போதைய பாத்திரத்தின் ஓர் படைப்பில் நுழைந்து விவரிக்க இயலாது.

I. *திருமணத்தைப் பற்றி முதலில் அறிந்திருக்கவில்லை:*

பாலினங்களுக்கு இடையேயான உடலுறவு ஒருகாலத்தில் ஒழுங்கற்றதாக இருந்தது, அதன் வார்த்தை பரந்த அர்த்தத்தைக் கொடுத்தது.

II. *பின்பு அறிமுகமானது:*

காலப்போக்கில், பின்வரும் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

(அ) ஒரே குடியைச் சார்ந்த நபர்கள் ஒருவருக்கொருவர் விலகிக் கொண்டனர்.

(ஆ) நேரடி ஏறு வரிசையில் வருகிற ஒரு நபர், நேரடி இறங்கு வரிசையில் வருகிற நபருடன் உடலுறவு வைத்துக் கொள்வதிலிருந்து விலகிக் கொண்டார். அதுபோல், பின்னால் வரும் நபரும் அவ்வாறு உடலுறவு வைத்துக் கொள்வதிலிருந்து விலகிக் கொண்டார்.

(இ) துணைகள் ஒருவருக்கொருவர் விலகிக் கொண்டபோதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துணைகள் வழக்கமாக அதே நபர்களுடன் உடலுறவு கொள்வதை தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

(ஈ) நபர்கள், நேரடி சந்ததியாகிய அவர்களுடைய துணைகளிலிருந்து விலகிக் கொண்டனர்.

III. ஒரு மனிதனின் சம்பாத்தியம், அவன் வாழ்ந்த பெண்ணிடம் சென்று சேர்ந்தது:

அங்கே, திருமணம் இல்லாத ஒரு சமூகமாக இருந்ததால் பெண்ணின் இயற்கையிலான மதிநுட்பம், அவளுக்கும் அவளுடைய எதிர்கால பிள்ளைகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் வேண்டி, ஒவ்வொரு ஆணும் அவளோடு தொடர்ந்து கூடியிருக்கும் காலத்தில் அவன் சம்பாதிக்கும் அனைத்தையும் அவளுக்கு விட்டுக்கொடுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வாள்.

IV. அவர்கள் அதை, அவர்களுடைய பிள்ளைகளுக்கு பரிமாற்றம் செய்தனர்:

ஒரு பெண் மரித்தபோது அவள் விட்டுச்சென்ற அனைத்தும் இயற்கையாகவே அவளுடைய

பிள்ளைகளுக்குச் சென்று சேர்ந்தன. அவை, இயற்கையாக அவளுடைய அனைத்து மகன்களுக்கும் மகள்களுக்கும் இடையில் வித்தியாசமின்றி பிரித்துக் கொள்ளப்பட்டன.

V. அவர்களின் மறைந்த தாயார் செய்தது போலவே மகள்கள் அவர்களுடைய காதலர்களிடமிருந்து தொடர்ந்து சம்பாதிப்பார்கள். அவர்களுடைய தேட்டம் மற்றும் முதுசொம் ஆகிய பலன்களை அவர்களுடைய ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஒரேமாதிரியாக கடந்துவரச் செய்வார்கள்.

VI. ஆண்கள், அவர்களின் குடியைவிட்டு வெளியேற வேண்டும்:

மகனின் வாழ்க்கையைப் பொறுத்தளவில் வேறுபட்டதாய் இருக்கும்.

தனித்துவமான குடிகள் வேறுபட்ட கிராமங்களில் இருந்தன. ஒரு ஆண், அவனுடைய சொந்த கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து பெண்களைத் தேடிச்செல்ல வேண்டியதாய் இருந்ததால், அவனுடன் எளிதில் எடுத்துச் செல்ல முடியாத அனைத்தையும் அவனுடைய சகோதரிகளிடம் விட்டுச்செல்ல வேண்டியதாய் இருந்தது.

ஒரு நிலத்தை விற்பதற்கு அல்லது பண்டமாற்றம் செய்வதற்கான யோசனைகள் பண்டைய காலங்களில் அறிந்திருக்கவில்லை.

VII. அவர்களுக்கு குழந்தைகளும் இல்லை; தேட்டத்தையும் விட்டுச் செல்லவில்லை:

ஆண், அவனுடைய சொந்த குடிக்கு திரும்பினாலோ அல்லது அந்த குடியில் மரித்தாலோ அல்லது அவனுக்கான பெண்களை குடிகளில் கண்டு பிடித்தாலோ, அவனுடைய வாழ்நாளில் தேட்டத்தை அகற்றாமல் விட்டுச் சென்றிருந்தாலோ, அவனுடைய மரணத்திற்குப் பிறகு தேட்டம் தொடர்பாக எந்தவொரு கேள்வியும் எழுவதில்லை. ஏனெனில், எந்தவொரு நபரும் அவனுடைய பிள்ளைகள் என்ற அடிப்படையில், அவனுடைய சொந்த கிராமத்தில், அவன் விட்டுச்சென்ற முதுசொமைக் கோர முடியாது. ஏனெனில், எந்தவொரு முக்குவர் பிள்ளைகளும் அதன் தந்தையை அறிந்திருக்கவில்லை.

அவர்களுடைய முதுசொம், அவர்களுடைய சகோதரிகளுக்கு சென்று சேரும்:

அதன்படி முதுசொம்மானது அவனுடைய சகோதரிகளுக்கும், அவனுடைய சந்தேகத்திற்கு இடமில்லாத உறவினர்களுக்கும் சென்று சேரும் என்பதற்கு தாய் தேவிடியாளாக செயல்படுவதில்லை என்கிற தத்துவமே ஆகும்.

VIII. குறைபாடுகள் பெண்மீது சுமத்தப்படுகின்றன:

கால ஓட்டத்தில், மனிதனின் செயல்பாட்டில் அல்லது அவனுடைய அதிகப்படியான பலத்தை மோசடியாகக் கொண்டு, அந்த பெண்ணின்மீது அடக்குமுறையை ஏற்படுத்தியதால் அவளுடைய சொத்து அனைத்தும் அவளுடைய சகோதரர்களின் அதிகாரத்தின்கீழ் வைக்கப்பட்டன. அதுபோல், அவளுடைய சொந்த மகன்களின் கீழும்.

42. முக்குவர்களின் இறங்குரிமைக்கான அனைத்து நவீன விதிகளும், இப்போதைய பாலினங்களுக்கு இடையில் நடைபெறும் நாகரிக வர்த்தகத்தின் தேவைகளுக்கு ஏற்ப மேற்கூறிய கொள்கைகள் வெறும் தழுவல்கள் என்றே தெரிகிறது.

முக்குவர்கள், ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றி, நீண்டகாலமாக அவர்களுடைய பலதாரமணம் மற்றும் பலஆண்மணம் போன்ற நடைமுறைகளைக் கைகழுவிவிட்டனர்.

43. மேற்கூறிய கருத்துக்களிலிருந்து முக்குவர் சட்டத்தின் அடித்தளத்தை பின்வரும் கொள்கைகளின் காரணங்கள் வாயிலாக காண்பது எளிதானதாகும்.

I. எல்லா பரம்பரையும் தாயிடமிருந்து வருகிறதே தவிர தந்தையிடமிருந்து எதுவும் வருவதில்லை.

II. அடுத்தடுத்ததாக தாய் மூலமாகவே அறியப்படுகிறது.

III. முதுசொம் நிலம், திருமண அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது.

IV. அதன் மேலாளர்களாக பெண்கள் சார்பில் ஆண்களே இருப்பர்.

V. முக்குவ சட்டத்தின் அடிப்படை கொள்கைகள்:

மூத்த சகோதரனே முதன்மை மேலாளராக இருப்பார்.

VI. மேலாளர்கள், அவர்களின் தாயை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால், அவர்களின் சகோதரிகளை அல்ல.

VII. பெண்கள், நிலத்தை வைத்திருக்க முடியாது.

VIII. *மிகவும் வெகுமதிமிக்க அசைபவைகள், ஆண்களுக்கே சென்று சேருகிறது.*

மற்றும் இதர. *மற்றும் இதர.*

44. ஆர்வமுள்ள வாசகர், இந்த அத்தியாயத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளுக்கு ஆதரவாக, மிகவும் மதிப்புமிக்க மற்றும் ஆர்வமான தகவல்களை ஆசிரியர் சாண் லுப்போக் எழுதியுள்ள, "நாகரிகத்தின் தோற்றம் மற்றும் மனிதனின் தொடக்க நிலை" (The Origin of Civilisation and Primitive Condition of Man) *என்கிற நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் காணலாம்.*

(சாண் லுப்போக் எழுதியுள்ள, "The Origin of Civilisation and Primitive Condition of Man" *என்கிற நூலின் மூன்றாவது அத்தியாயம் இந்நூலின் இறுதி அத்தியாயமாக கொடுக்கப்பட்டுள்ளது)*

எட்டாம் அத்தியாயம்

வழக்குகளின் சுருக்கம்

முக்குவர் சட்டத்தை தாங்கி நிற்கும் மட்டக்களப்பு

எண். 10236

வாதிகள்

1. *கதிராமப்போடி உடையார்*
2. *அவருடைய மனைவி வேலத்தாய்*
3. *பாலகப்போடி அலவாப்போடி*
4. *கந்தப்போடி நாகேந்தப்போடி*

எதிர்

பிரதிவாதிகள்

1. *மரியாதைக்குரிய மகாராணியின் வழக்குரைஞர்*
2. *வேலப்போடி பெரியத்தம்பி*

அவதூறு. 29 அக்டோபர் 1845

வழக்கறிஞர் சான் சார்ச் டி வோ என்பவரிடமிருந்து

வலப்போடியார் என்ற முக்குவர், இரவு வேலி நிலத்தின் அசல் உரிமையாளராக இருந்தார். அவருடைய மரணத்திற்குப் பின்பாக, அது அவருடைய மருமகன் நிலமை வேலப்போடிக்கு சென்று சேர்ந்தது. நிலமை வேலப்போடியின் மரணத்திற்குப் பின்பாக, அவருடைய சகோதரிகள் முத்தம்மா

(2ஆம் மற்றும் 3ஆம் வாதியின் தாய்) மற்றும் பத்தநாச்சி (4ஆம் வாதியின் தாய்) ஆகியோர் அந்நிலத்தின் உரிமையாளர் ஆயினர். அவர்களின் மரணத்திற்குப் பின்பாக, வாதிகள் அதன் உரிமையாளராக மாறினர். அரசாட்சியின் பொருட்டு, 2வது பிரதிவாதியின் சொத்தினை நீதிப் பேராணை வழக்கு எண். 5343இன்படி 1ஆம் பிரதிவாதி வரி நிமித்தமாக பறிமுதல் செய்வதற்கு காரணமாக அமைந்தது.

பறிமுதல் செய்ததை நிறுத்தி வைக்கவும் மற்றும் நிலத்தை வாதிகளுக்கு உரியதாக அறிவிக்கவும் கோருவது சம்பந்தமாக.

1ஆம் பிரதிவாதியின் பதில்களை, சனவரி 14, 1846 அன்று, அவருடைய பிரதிநிதி வழக்கறிஞர் தி. ரூல்பு தாக்கல் செய்தார்.

நிலமை வேலப்போடி கையகப்படுத்திய நிலம் கேள்விக்குரியது. அவருடைய மரணத்திற்கு பின்பாக, 2ஆம் பிரதிவாதியாகிய அவருடைய மகன், நிர்வாகத்திடம் கடிதங்கள் பெற்று, வாதிகளின் அறிவுக்குத் தெரிந்தே, அவருடைய தந்தையின் பண்ணையுடன் இணைத்துக் கொண்டார்.

2ஆம் பிரதிவாதி, 1835, 1836 மற்றும் 1837 ஆகிய ஆண்டுகளில் செலுத்த வேண்டிய அந்த நிலத்திற்கான வரியை உறுதியுடன் பணமாகவே செலுத்தி விடுவதாக கூறியிருந்தது அவர் தாக்கல் செய்த அவருடைய பத்திர எண். 5343இன் மூலமாக தெரிகிறது. அதில், பிணையாள்களில் ஒருவராகவும் வாதி இருந்து வருகிறார்.

2வது பிரதிவாதி, அந்நிலத்திற்கு செலுத்த வேண்டிய வரியை அரசுக்கு செலுத்தாத காரணத்தால் 1ஆம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. 1ஆம் பிரதிவாதி, வாதுரையில் முன்வைத்த வாதிகளின் வம்சாவழி

வழக்கத்தை ஏற்றுக் கொள்கிறார். அதேவேளையில், அவர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்களுக்காக முதுசொம் நிலங்கள் விற்கப்பட வேண்டியவையே என்கிறார்.

நீதிப் பேராணை எண். 5343இன்படி வாதிகள் பணத்தைக் கட்டினால் 1ஆம் பிரதிவாதி நடவடிக்கையை கைவிடத் தயாராக இருக்கிறார். முதுசொம் சொத்துக்களில் சாகுபடி செய்வதால் அல்லது வரியால் ஏற்பட்ட கடன்களை அடைப்பதற்கு வாரிசுதாரர்கள் பொறுப்பாவார்கள் என்பது நாட்டு வழக்கங்களில் ஒன்றாகும்.

நிர்வகிக்கும் 2வது பிரதிவாதியிடமிருந்து பாத்தியம் பெறாமல் வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு உரிமையில்லை.

5 பிப்ரவரி 1840

இரண்டாம் பிரதிவாதியின் பதிலுரை

2ஆம் பிரதிவாதியின் தந்தை, நீண்ட காலமாகவே நிலத்தை கைவசம் வைத்திருந்தார். அவருடைய தந்தையின் மரணத்திற்குப் பின்பாக 2ஆம் பிரதிவாதி 1833இல் நிர்வாகத்திடம் இருந்து கடிதங்கள் பெற்று, இந்த நிலத்தை அவரது தந்தையின் சொத்தோடு சேர்த்துக் கொண்டார்.

இது, முதுசொம் நிலம் மற்றும் அத்தகைய நிலங்களை கைவசம் வைத்திருக்கும் தனிநபர்கள், வழக்கமாக அதன் கடனை அடைப்பதற்குக் கடமைப்பட்டவர்கள்.

இச்சொத்தில், வாதிகளுடன் விரும்பிய பங்குகளைப் பெறுவதற்கு உரிமையுடைய இதர ஐந்து நபர்கள் இந்த வழக்கில் சேரவில்லை. இதன்மூலம், வாதிகளின் பாத்தியம் உண்மையானதாக இருக்குமா?

14 மார்ச் 1846

வழக்கறிஞர் டி வோ என்பவரின் பகிர்ப்பு

வாதிகள் கூறுவது யாதெனில், நிலத்தை சட்டப்பூர்வமாக ஒப்பந்தம் செய்ததன் மூலம் ஏற்பட்ட கடன் அனையத்தையும் அரசாங்கத்திற்கு செலுத்த 2ஆம் பிரதிவாதி தயாராக இருக்கிறார்.

2 செப்டம்பர் 1846

மதிப்பீட்டாளர்களின் உறுதிமொழி

கட்சிகளும் வழக்கறிஞர்களும் வருகை புரிந்துள்ள நிலையில், நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவென்றால், நிலத்தின் பற்றுதல் நீக்கப்பட்டு, குறிப்பாக 1ஆம் பிரதிவாதிக்கு வாதிகள் £3 செலுத்த வேண்டும். அவர்களுடைய செலவுத் தொகைகளை கட்சிகளே ஈடுசெய்திட வேண்டும்.

மதிப்பீட்டாளர்கள் ஒத்துக்கொள்கிறார்கள்.

(கையெழுத்து)
கைச்.ஓ. கிரேயி,
மாவட்ட நீதிபதி.

குறிப்புகள்

I. இந்த வழக்கின் வாதுரைகள் அதிகபட்ச தவறுகளைக் கொண்டிருக்கின்றன. 'அசல் உரிமையாளர்' என்கிற சொல் வெளிப்படுத்துவது யாதெனில், சொத்தை வேலப்போடி கைப்பற்றி இருக்கிறார். அதனை அவர் வாங்கியிருந்தால், அது அவரது மருமகன் நிலமை வேலப்போடிக்கு சென்றிருக்காது; அவருடைய சொந்தப் பிள்ளைகளுக்கு சென்றிருக்கும். அவருக்கு மகன்கள் இல்லாதிருந்தால் மற்றும் அவருடைய சகோதரிகள் மரித்திருந்தால், அது நிச்சயமாக வேலப்போடி மற்றும் வேலப்போடியின் சகோதரிகளுக்கு சமபங்கில் சென்றிருக்கும். பொதுவான சட்டம் சொல்வது என்னவென்றால், ஒருவர் குழந்தை பாக்கியம் இல்லாமல் மரித்துப்போனால் மருமகன்கள் மற்றும் மருமகள்கள் அச்சொத்தை பெற்றுக் கொள்வார்கள். போதுமான ஆதாரங்களைக் கொண்டுள்ள இந்த வழக்கில், 'இரவு வேலி' விவரிப்பது என்னவென்றால், வேலப்போடியாரின் தாய்வழி முதுசொம், அவருடைய மரணத்திற்குப் பின்பாக, உடைமை மற்றும் அனுபவம் அவருடைய மருமகன் நிலமை வேலப்போடிக்கும், அதன் ஆட்சியுரிமை அவருடைய (நிலமை வேலப்போடியுடைய) சகோதரிகள் முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகியோருக்கு சென்று சேரும். நிலமை வேலப்போடி மரணம் அடைந்து, முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகியோர் வாழ்ந்து கொண்டிருந்தால் ஆட்சி உரிமை மற்றும் அனுபவ உரிமை அவர்களுக்கு சென்று சேரும். அதனுடைய உடைமை அவர்களுடைய மகன்களுக்கு (3 வது, 4வது வாதிகள் மற்றும் இந்த வழக்கில் சேர்க்கப்படாதவர்களுக்கு) சென்று சேரும். வழக்கு எண். 13341இல் தெரிவது என்னவென்றால், அவர்களுடைய சகோதரர் நிலமை வேலப்போடி மரிப்பதற்கு முன்பாக முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகியோரை முன்னறிவித்திருந்தார். மரணத்திற்குப் பின்பாக, நிலமை

வேலப்போடியின் ஆட்சியுரிமை 2வது வாதி வேலத்தாய் மற்றும் 4வது வாதியின் சகோதரி வள்ளியம்மை ஆகியோருக்கும் (பார்க்கவும் எண். 12460), உடைமை, உரிமை மற்றும் அதன் அனுபவம் 3வது, 4வது வாதிகள் மற்றும் அவர்களுடைய சகோதரர்களுக்கு சென்று சேரும். ஆனால், நிலமை வேலப்போடியின் மரணத்திற்குப் பின்பாக 2வது வாதி, அதாவது அவருடைய மகன் அதன் உடைமையை எடுத்துக்கொள்கிறார். இது தவறான வழியில் கையகப்படுத்தியது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. 2வது வாதி சாகுபடி செய்யும் நோக்கத்திற்காக எடுத்துக்கொண்டதால், அதன் கடனை வாதிகள் அடைக்க வேண்டிய தேவை எழவில்லை. இந்த வழக்கில், இது சாகுபடி செய்ததால் ஏற்பட்ட கடன் அல்ல; அரசுக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி குறித்த கேள்வியே ஆகும். வாதிகள் அதைத் தாங்களே செலுத்த முன்வந்தனர். ஒவ்வொரு நில உரிமையாளரும் செல்லத்தக்கதாகவும் அல்லது பலகீனமான நில உரிமையைக் கொண்டிருந்தாலும் அதனை பொருட்படுத்தாமல் அரசுக்கு வரி செலுத்திட வேண்டும்.

II. *வழக்கு எண். 12460இல் இந்த நிலம், மிகத் தெளிவாக தாய்வழி முதுசொம் என குறிப்பிடப்படுள்ளது.*

வழக்கு எண். 10524

வாதிகள்

1. *கதிராமப்போடி உடையார்*
2. *அவருடைய மனைவி வேலத்தாய்*
3. *பாலகப்போடி பி.கைச். அலவாப்போடி*
4. *கந்தப்போடி நாகேந்தப்போடி*

எதிர்

பிரதிவாதிகள்

1. *மணப்போடியார் வள்ளியம்மை*
2. *வேலப்போடி பி.கைச். பெரியத்தம்பி*

அவதூறு

திரு. வழக்கறிஞர் சான் சார்ச் டி வோ என்பவரிடமிருந்து

சம்பல்தின்னி வேலப்போடியார் என்ற முக்குவர் கொக்கட்டிச்சோலை என்ற இடத்தில் அமைந்துள்ள இரவு வேலியில் (நிலத்தில் மற்றும் குளத்தில்) உரிமை கொண்டிருந்தார். அவருடைய மரணத்திற்குப் பின்பாக, இந்த மாவட்டத்தில் வாழும் முக்குவர்களின் வழக்கம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றின்படி கண்காணித்தல் மற்றும் அங்கீகரித்தல் மூலம் அவருடைய மருமகன் நிலமை வேலப்போடி அதனை கையகப்படுத்தினார். அவருடைய மரணத்திற்குப் பின்பாக, அவருடைய மருமகளான 2வது வாதி, அவருடைய மருமகன்களான 3வது 4வது வாதிகள் மற்றும் அதில், 2வது மற்றும் 3வது வாதிகளான அவருடைய சகோதரி முத்தம்மாவின் குழந்தைகள், 4வது வாதியாகிய அவருடைய சகோதரி பத்தநாச்சியின் மகன் ஆகியோர் எந்தவித இடையூறுமின்றி காலங்காலமாக கைவசம் வைத்து வருகின்றனர்.

1ஆம் பிரதிவாதிக்கு 2வது பிரதிவாதியால் செலுத்துவேண்டிய ஒரு குறிப்பிட்டத் தொகையை மீட்டெடுப்பதற்காக இந்த நீதிமன்றத் தீர்ப்பு எண். 10076 இன்பேரில், நிலம் மற்றும் தொட்டி ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக 1ஆம் பிரதிவாதியால், 2ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானது என காண்பிக்கப்பட்டது.

தடைகளை அகற்ற வேண்டி

முதல் பிரதிவாதிக்கு அளித்த பதில் 9 பிப்ரவரி 1847

இந்த நிலபுலம் நிலமை வேலப்போடிக்கு (2வது பிரதிவாதியின் தந்தைக்கு) சொந்தமானது. அவர், டச்சு காலம் முதல் 1834 வரை கைவசம் வைத்திருந்தார். 2ஆம் பிரதிவாதி 12 வருடங்களுக்கு முன்பாக நிர்வாகத்திடமிருந்து கடிதம் பெற்று, அதனை அவருடைய தந்தையின் பண்ணையோடு இணைத்துக்கொண்டார். அப்பொழுது வாதிகள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. இருப்பினும், 2ஆம் பிரதிவாதி இன்னும் கைவசப்படுத்தாத நிலையில் வாதிகளுடன் கூட்டு சேர்ந்துவிட்டு, இந்த நிலத்தை விற்று அவளுடைய பணத்தை மீட்டெடுக்க முயலும் வகையில் 1ஆம் பிரதிவாதியின் உரிமையை தோற்கடிக்க முயலுகிறார்.

உரிமைக் கட்டளை எண். 8/1834, பிரிவு 2இன்படி சொத்தானது பரிந்துரைக்கப்பட்டதன் மூலம் 2வது பிரதிவாதிக்கு உரியதாகும்.

சூன் 2, 1847

பொதுவான பதில்

சூன் 7, 1847

வாதிகளின் அவதூறுக்கு இவ்வழக்கின் 1ஆம் பிரதிவாதி, அவளுடைய பதிலில் வலியுறுத்தியது யாதெனில், அவளுடைய கடனாளியாகிய 2ஆம் பிரதிவாதி என்பவர் அவருடைய தந்தை நிலமை வேலப்போடியின் நிலத்தை டச்சு அரசாங்கத்தின் காலத்திலிருந்து 1834ஆம் ஆண்டு வரை வைத்திருந்தார். வாதிகள், அவர்களுடைய உரிமையை காலஞ்சென்ற நிலமை வேலப்போடியின் மருமகன்கள் மற்றும் மருமகள்கள் என்கிற முறையில் அதே மூலத்திலிருந்து பெறுகிறார்கள். அதில், கருத்தாய் எழும் கேள்வி என்னவென்றால், அவர்கள் (மருமகன்கள் மற்றும் மருமகள்கள்) மகனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமா என்பதுதான். இது, அவர் முந்தைய உரிமையாளரின் மகன் அல்லது மருமகன் என்கிற முறையில் காலஞ்சென்ற நிலமை வேலப்போடிக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டதா என்பதனைப் பொறுத்ததே.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தளவில், முக்குவர் சாதியைச் சார்ந்தவர்களிடையே மிக நீண்ட காலமாக நடைபெறுகிற வழக்கம், அதாவது, முக்குவர் நிலங்களுக்கு போட்டி உரிமை கோருவதில் எந்தவொரு சந்தேகம் எழுந்தாலும் மரபுரிமைப்படி மருமகன்கள் மற்றும் மருமகள்கள் ஆகியோர் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை விலக்குவதற்கு கீழமை நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள் தொடர்ந்து அங்கீகரித்து வருகின்றன. ஆனால், தற்போதைய வழக்கிலுள்ள வாதுரைகளில் துல்லியமாக எழுதியிருப்பது யாதெனில், முதல் பிரதிவாதியின் பதிலில் முரண்பாடு இல்லை என்பதையும், காலஞ்சென்ற நிலமை வேலப்போடியின் மருமகன்கள் மற்றும் மருமகள்கள்

ஆகியோர் வாதிகள் என்பதையும், பின்னர் அவருடைய மாமாவிடமிருந்து மரபுரிமைப்படி நிலத்தைப் பெற்றார்கள் என்பதையும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மட்டுமே நீதிமன்றம் நம்புகிறது. இன்னொருபுறம், வாதிகள் அவர்களுடைய பதிலில், 1ஆம் பிரதிவாதியின் கருத்துக்களை மற்றும் பொருட்களை பொதுவான முறையில் மறுக்கிறார்கள். இப்பொழுது, இதில் குறிப்பிட்டுள்ள செய்திகளில் ஒன்று, 2 வது பிரதிவாதி காலஞ்சென்ற நிலமை வேலப்போடியின் மகன் ஆவார். வாதிகள், அவர் இல்லை எனச் சொல்கிறார்களா?

மேற்கூறிய காரணத்தின் பொருட்டு கட்சிகளை விசாரிப்பதன் மூலம் ஆதாரங்கள் தேவையா அல்லது தேவை இல்லையா என்பது குறித்து முடிவு செய்வதற்காக நீதிமன்றம் ஒத்திவைக்கப்படுகிறது. வாய்தா நாள், இந்த மாதம் 14ஆம் தேதி.

கைச்.ஓ. கிரேயி

சூன் 14, 1847 அன்று, சூன் 21க்கு வாய்தா நாள் தள்ளிவைக்கப்பட்டது.

சூன் 21, 1847

மதிப்பீட்டாளரின் உறுதி

கட்சியினர் வருகை புரிந்திருந்தனர்.

மதிப்பீட்டாளரிடம் வழக்கு குறித்து விளக்கப்பட்டது.

2வது, 3வது மற்றும் 4வது வாதிகள் காலஞ்சென்ற நிலமை வேலப்போடியின் மருமகன்கள் மற்றும் மருமகள் என்பதனை

முதல் பிரதிவாதி மறுக்கவில்லை என்றாலும், 2வது பிரதிவாதி சூழ்நிலைக்கு ஏற்ப நிர்வாகி என்கிற முறையில் அவருடைய தந்தையின் பண்ணையுடன் வயல் மற்றும் தொட்டி ஆகியவற்றை இணைத்துக் கொண்டது கேள்விகுறியானாலும் அவருடைய தந்தையின் பண்ணை நிர்வாகி என்கிற முறையில் வயல் மற்றும் தொட்டி ஆகியவைகள் அவரால் திருப்பி கொடுக்கப்பட்டது (இது, ஒரு வகையிலோ அல்லது இன்னொரு வகையிலோ நிருபிக்கப்படவில்லை) என்றாலும், முக்குவர் நிலத்தைப் பொறுத்தவரை, இந்த மாவட்ட பழக்கத்தின்படி தொடர்ச்சியாக வரிசைப்படுத்தி விடுவிக்க வேண்டும். அனைத்து செலவுகளையும் இரண்டாம் பிரதிவாதி செலுத்த வேண்டும். இதனை, மதிப்பீட்டாளர் ஒத்துக் கொள்கிறார்.

கைச்.ஓ. கிரேயி

குறிப்புகள்

1. கடந்த வழக்கைப்போன்று, உண்மையிலேயே இதுவும் அதைப் போன்றதாக இருந்தாலும், வரி அல்லது சாகுபடி கடனுக்காக நிலம் கையகப்படுத்தப்படவில்லை. 2வது பிரதிவாதி கைவசம் வைத்திருகிறார் என்பதனை நிருபிக்க 1 ஆம் பிரதிவாதியை அனுமதிக்க வேண்டும். முக்குவர் முதுசொம் சொத்துக்கு எதிராக எந்தவொரு விதிகளும் பொருந்தாது என்பதனை நிருபிக்கும் வகையில் அதிகாரம் அல்லது ஆதாரச் சாட்சியம் எதனையும் காண்பிக்கவில்லை என நீதிபதி கருதியவாறே எடுத்துக்கொள்கிறார். கடந்த வழக்கில் குறிப்பிட்டது போன்று 1834இல் நிலமை வேலப்போடியார் மரித்த பின்பாக, வாதிகள் (மற்றும் அவர்களுடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை) ஆட்சி செய்தல்,

கையகப்படுத்துதல், அனுபவித்தல் மற்றும் விடுவித்தல் ஆகியவற்றில் உரிமை பெறுகிறார்கள். அதேவேளையில், முகவர் அல்லது உறுப்பினர் என்ற நிறம் பூசாமல் 12 வருட காலமாக நிலத்தை அவருக்குரியதாகவே அனுபவிக்க 2 ஆம் பிரதிவாதியை அவர்கள் அனுமதித்துள்ளார். இப்பொழுது, 1ஆம் பிரதிவாதியின் நேர்மையான பாத்தியத்தைத் தோற்கடிக்க, முக்குவரின் முதுசொம் குறித்த தெளிவான சான்றுகள் இல்லாமல் அவர்களை நிருபிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது.

2. முக்குவர் சட்டத்தைக் குறிக்கும் வகையில் தீர்ப்புகள் உண்மையிலேயே இல்லை. அதன் இருப்புக்கு திருப்திகரமான ஆதாரம் இல்லையெனில் வாசகர் குறைந்தபட்சம் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது. அது, தாய்வழி முதுசொம் நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். இருப்பினும், உடைமை கொண்டிருப்பவர், இதர வாரிசு உடையவர்களின் ஒப்புதலுடன் அதனை உடைக்கலாம். அந்த உரிமையாளர் பொதுவாக ஒரு பெண்ணாகவும், அவளுக்கு குழந்தைகள் இருக்கும் நிலையிலும், அதனை அந்நியப்படுத்த விரும்பினால், அவள் தன் தாய்வழி முதுசொம் சொத்துக்களை அவர்களோடு கலந்து ஆலோசிக்கவோ அல்லது குழந்தைகளுக்காகப் பாதுகாக்கவோ தேவையில்லை. அதேவேளையில் அவளுக்கு சகோதரர் அல்லது சகோதரர்கள் இருந்தால் அதனை அந்நியப்படுத்தும் முன்பாக அவர்களுடைய ஒப்புதலை கண்டிப்பாகப் பெற வேண்டும். 12668 எண்ணுடைய வழக்கில், 1ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய முழுத் தகுதி இருந்தும், அவளுக்கு கடன் கொடுத்தவர்கள், அவளுடைய முதுசொம் பங்கினை விதிவிலக்காக எடுத்துக் கொண்டார்கள். அதுபோல், 3வது பிரதிவாதிக்கும் அவருடைய சகோதரருக்கும் சகோதரிகள் இல்லையெனில் அவர்களின் தாயுடைய முதுசொம் பங்குகளை விற்பதற்கு அவர்களுக்கு முழுத் தகுதியுண்டு.

முக்குவர்களின் முதுசொம் சொத்தை அப்புறப்படுத்த முடியாத சாசனமென கருதுவது பல ஆதாரத்தில் ஓர் பிழை என்றாலும் மட்டக்களப்பு சட்டத்தை அது குழப்பத்திற்கு தள்ளுவதாகும். வரி மற்றும் சாகுபடி தேவைகளுக்காக ஒவ்வொரு கிராமமும் தாய்வழி முதுசொம் நிலங்களை நிரந்தரமாக அந்நியப்படுத்தும் விதங்கள் குறித்து கற்பிக்கிறது. இருப்பினும், இதுபோன்ற சாக்குப்போக்குகள் இல்லாமல் சில நிலங்களை விற்பனை செய்ய முடியாது. கட்சிகளின் அறியாமை, நீதிபதிகளின் ஆர்வமின்மை மற்றும் சட்டப் பயிற்சியாளர்கள் ஆகியோரால் முக்குவர் சாதிக்குத் தெரியாத சில அபத்தமான விதிகளுக்கு வழிவகுக்கிறது. நிரந்தரமான தீர்ப்புகளுக்குத் தனித்துவமான மற்றும் தெளிவான ஆணைகள் காணப்பட்டால், இதுபோன்ற தீர்ப்புகள் நாகரிக சட்டத் திட்டங்களுடன் எவ்வளவு தூரம் ஒத்துப்போகும் என்பதனை மேலும் கருத்தில் கொள்வதற்கு அவசிய மானதாக இருக்கும் என்பதற்கு சொத்துப் பரிமாற்றம் மற்றும் நன்கொடைகள் ஆகியவைகளுக்கு ஒவ்வாமையாக, "மரித்த கைகள்" இருக்கும்.

வழக்கு எண்கள் 13341 மற்றும் 12460 ஆகியவைகள் முக்குவர் நிலங்களை அந்நியப்படுத்துதல் பொதுவானது என்பதனைக் காண்பிக்கிறது.

பண்டைய நடைமுறையில், அந்நியப்படுத்தும் வகையில் எண்ணற்ற நிகழ்வுகள் மட்டக்களப்பில் நடந்திருக்கின்றன. 13341 அவதூறு வழக்கைப் பார்க்கவும். சொத்தினை உடைமையாகக் கொண்டிருக்கும் மற்றும் அனுபவிக்கும் சகோதரர் ஒருவர் மற்றும் தனது தாயின் முகவராக அதனை வைத்திருக்கும் நபர்கள் முதுசொம் சொத்தினை விற்பதற்கான உரிமையை திறந்த மனதுடன் மற்றும் எப்பொழுதாவது அமைதியான ஒப்புதலுடன் அவர்களாகவே சரியான நபர்களிடமிருந்து எடுத்துக் கொள்கிறார்கள்.

மட்டக்களப்பில் முக்குவரின் முதுசொம் நிலங்களை ஒருபோதும் விற்கவோ அல்லது குடும்ப ஆதாயத்திற்காக இழக்கவோ முடியாதென நம்பிக்கை கொண்டுள்ளனர். வளர்ந்துவரும் சொத்துக்களை மற்றும் சாதியின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு அக்கேள்வியை அதிகபட்சமாக முழுமையாகவே ஆராய்ந்து, அதன்பேரில் அதிகாரப்பூர்வமாக முடிவெடுக்க வேண்டும்.

3. இந்த வழக்கு சொல்வது என்னவென்றால், இந்த வழக்கிற்கு முன்பாக மட்டக்களப்பில் முக்குவர் சட்டம் குறித்து மாவட்ட மற்றும் உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு தீர்ப்புகள் வெளிவந்துள்ளன.

வழக்கு எண். 11765

வாதி

1. ஆறுமுகத்தப்போடி கத்புரப்போடி

எதிர்

பிரதிவாதிகள்

1. நல்ல பணிக்கிப்போடி தெலிப்போடி

2. மனகப்போடி பணிக்கிப்போடி

அவதூறு, சனவரி 6, 1858

16 ஏக்கர் பரப்பளவுள்ள பெரிய வேலியில் 4இல் ஒருபங்கானது 1ஆம் வாதிக்கு, அதாவது அவருடைய மாமாவின் மரணத்திற்குப் பின்பாக ஒதுக்கப்பட்டது.

1ஆம் வாதி, 4 ஏக்கர் பெரிய வேலியை 2ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தார்.

2ஆம் பிரதிவாதி, அதனை அடப்பன் ஆறுமுகன் வேலச்சிக்கும் அடப்பன் கதிரமலைக்கும் அடமானம் வைத்த நிலையில், அதனை விற்பனை செய்வதற்கான தீர்ப்பை 11406 எண்ணுடைய வழக்கில் அவர்கள் பெற்றார்கள்.

1ஆம் பிரதிவாதி கையகப்படுத்தியதை விடுவிப்பதற்கும், விற்பனையை ஒத்தி வைப்பதற்கும் 2ஆம் பிரதிவாதி தடையாணை கோரினார்.

பதிலுரை 25 மே, 1853

திரு. ஈ.சி. கொலேத்

1824ஆம் ஆண்டு இளையப்பேடி குஞ்ஞகந்தப்போடி என்பவர் பெரிய வேலியை 1ஆம் பிரதிவாதி மற்றும் இதர

மூன்று நபர்கள், அதாவது அவருடைய குழந்தைகளாகிய நான்கு சகோதரிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். பின்பு, நிலம் கடனில் மூழ்கியது.

பங்குதாரர்களில் ஒருவராகிய சின்னவப்போடி குமாரப்போடி என்பவர் 1824இல் கடனைச் செலுத்தி நிலத்தை மீட்டார்.

குமாரப்போடியால் செலுத்தப்பட்ட கடனில் நான்கில் ஒரு பங்கினை செலுத்த வேண்டிய 1ஆம் பிரதிவாதி, 2ஆம் பிரதிவாதியிடம் நெல்லை வாங்கி அவருடைய நான்கில் ஒரு பங்கு நிலத்தில் பயிர் செய்தார். பல ஆண்டுகளாக அதற்குரியதை செலுத்தத் தவறியதால் அவருடைய பங்கினை விற்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டார் என்பதனை மே 6, 1842 பரிமாற்றப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2ஆம் பிரதிவாதி 1842 முதல் கைவசம் வைத்திருப்பதும், அதற்காக கோருவதுமாகும்.

பிரதிசெய்கை. செப்டம்பர் 17, 1853.

திரு. பிராக்டர் ரூல்ப்

காலஞ்சென்ற குஞ்ஞுகந்தப்போடி செலுத்த வேண்டிய கடனை, நிலத்திலுள்ள முத்தாத்து உற்பத்தியில் இருந்து செலுத்த வேண்டும். குஞ்ஞுகந்தப்போடி கடனாளியாக இருந்ததால், அவருடைய கடன் திருப்பி அடைக்கப்படும் வரை விளைநிலத்தில் இருந்துவரும் வருமானத்திற்காக நிலத்தை ஆறுமுகத்தப்போடி கத்புரப்போடி கைவசம் வைத்திருந்தார்.

முதல் பிரதிவாதி மரணிக்காதது வரை வாதியின் உரிமை துவங்காது என்பதால், அவருக்கு எதிராக விதிகளை செயல்படுத்த முடியாது.

எதிருரை. நவம்பர் 18, 1853.

திரு. ஈ.சி. கொலேத்

கடனாளி குஞ்ஞுகந்தப்போடி சாகுபடியில் மிகவும் அவதிப்பட்டார். 1819 மற்றும் 1824 ஆண்டு ஆவணங்களின் அடிப்படையில் பங்குதாரர்களில் ஒருவர் கடனைச் செலுத்தி நிலத்தை மீட்டார்.

அக்டோபர் 1, 1819ஆம் ஆண்டு ஆவணம்

2 வருடத்தில் செலுத்திவிடுவதாக குஞ்ஞுகந்தப்போடி என்பவர் 30 அவனத்திற்கு நெல்லை கடனாக வாங்கினார். வருடத்திற்கு 50 சதவீதம் வட்டியாகும். அதன்பேரில், முத்தாத்து உற்பத்தியிலிருந்து கழிக்க வேண்டிய பங்கு யாதெனில், பலிப்போடியால் பயிரடப்பட்ட வயலிலுள்ள பங்கு. இந்த நிலத்தைக் கையகப்படுத்த வருகிறவர்கள் கையகப்படுத்த விரும்பினால் பலிப்போடிக்கு நெல்லைக் கொடுத்துவிட வேண்டும்.

ஏப்ரல் 5, 1824ஆம் ஆண்டு ஆவணம்

பெரிய வேலியில் பயிரிடுவதற்காக குஞ்ஞுகந்தப்போடி 5 அவனத்திற்கு நெல்லை கடனாக வாங்கினார். அதற்கு, 18 ரிச் டாலர்கள் வரியாக கட்ட வேண்டும். இப்பொழுது, 18 அவனங்களை அவர் கடனாக வாங்கினார். பலிப்போடி, அதில் விவசாயம் செய்து கடனைக் குறைக்க வேண்டும் என்பதுடன் முத்தாத்து உற்பத்தியிலுள்ள பங்கில் விவசாயிக்கான பங்கு விலக்கப்படும். வருடத்திற்கு 50 சதவீதம் வட்டியாகும். வாரிசுதாரர்கள், இந்நிலத்தை மீட்க விரும்பினால் அவர்கள் இந்த கடன்களை அடைக்க வேண்டும்.

அக்டோபர் 27, 1835ஆம் ஆண்டு ஆவணம்

குமாரப்போடி பலிப்போடி 1819 மற்றும் 1824 ஆண்டுகளில் குமாரப்போடியிடம் கடன் வாங்கியதாக ஒப்புக் கொண்டதுடன் அடமானத்தில் இருந்து பெரிய வேலியை மீட்பதாகக் கூறுகிறார்.

மே 24, 1842ஆம் ஆண்டு ஆவணம்

1ஆம் பிரதிவாதி, அவருடைய கடன்களை அடைப்பதற்காகவும், இதற்கு முன்புள்ள அடமானத்திலிருந்து நிலத்தை மீட்பதற்காகவும், அதில் விவசாயம் செய்வதற்காகவும் வேண்டி அவருக்குரிய நான்கில் ஒரு பங்கு நிலத்தினை 2வது பிரதிவாதிக்கு விற்பனை செய்தார்.

நவம்பர் 22, 1853

வாதுரைகளின் அடிப்படையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

திசம்பர் 23, 1854

உச்சநீதிமன்றத் தீர்ப்பு

வழக்க சட்ட அடிப்படையில், 1ஆம் பிரதிவாதிக்கு சொத்தின்மீது வாழ்வதற்கான ஆர்வம் இருந்தாலும் சாகுபடியால் ஏற்படும் கடன்களுக்கு நிலம் பொறுப்பாகும் நிலையில், அவருடைய வாரிசுகளிடமிருந்து அவர் விலகி இருந்தாலும், அவர்மீது வழக்குத் தொடுக்கலாமே தவிர அவரை நிலத்திலிருந்து அந்நியப்படுத்த முடியாது.

செப்டம்பர் 17, 1856

வாதி சார்பில் திரு. ரூல்பாசு,
வழக்கறிஞர் முத்துகித்னா மற்றும்
பிரதிவாதி சார்பில் திரு. பிராக்டர் காதர்மிர்

திரு. ரூல்பாசு சொல்கிற ஒரேயொரு கருத்து என்னவென்றால், நில சாகுபடிக்கு ஏற்ப கடன்கள் நேர்மையானவை என்றும் அவருக்கு வேறு வழக்கு இல்லை என்றும் பிரதிவாதி நிருபிக்க வேண்டும்.

(சாட்சியம், இந்த கருத்தின் அடிப்படையில் தொடர்ந்தது.)
செப்டம்பர் 18, 1856

தீர்ப்பு

நிலம் மற்றும் சாகுபடி ஆகியவற்றின் பொருட்டு கடன் வழங்கப்பட்டது என்பதனை பிரதிவாதிகள் நிருபித்தனர். அதன்பேரில், 1ஆம் பிரதிவாதி விற்பனை செய்தார். வாதியின் வழக்கு, செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

செ.டபிள்யூ.டபிளியூ. பிர்ச்
மாவட்ட நீதிபதி.

சனவரி 21, 1857
உச்சநீதிமன்றத் தீர்ப்பு உறுதிபடுத்தப்பட்டது.

குறிப்புகள்

1. விசாரணையின் அடிப்படையில், நிலமானது குஞ்ஞுகந்தப்போடியின் தாய்வழி முதுசொம் எனக் கருதப்படுகிறது.

2. மூன்றிலிருந்து பன்னிரண்டு ஏக்கர் பரப்புள்ள இந்த வேலியானது பல பகுதிகளை உள்ளடக்கிய விவசாய நிலமாகும். இதன் ஓர் பகுதி முற்றத்து என அழைக்கப்படுகிறது. இது, உரிமையாளரின் நன்மைக்காக, கண்டியன் நின்ற முற்றத்துபோல் முழுவதுமாக விவசாயிகள் விதைப்பதுடன், அதன் ஒருபகுதி வயல்களில் விளையும் உற்பத்தியை அவர்கள் கூலியாக எடுத்துக்கொள்கிறார்கள். இந்த வழக்கில் கடன் கொடுத்தவர் விவசாயி ஆவார். அவரே கடனைக் குறைப்பதற்காக வேண்டி முற்றத்தில் விளைபவற்றில் கிடைக்கும் உற்பத்தியை உரிமையாளர் என்கிற முறையில் வைத்திருக்கிறார்.

மட்டக்களப்பு நெல் சாகுபடியில் நிலவும் கலாச்சாரம் நீளமான மற்றும் விரிவான அமைப்பை கொண்டுள்ளது. ஒருவர் முற்றத்து பற்றி அறிந்து கொள்ள விரும்பினால் முழுமையாகக் கற்க வேண்டும்.

வழக்கு எண். 12668

வாதிகள்

1. கதிரமார் வீராக்குட்டி

2. போக்கானியார் சின்னத்தம்பி

எதிர்

பிரதிவாதிகள்

1. குமாரப்போடி அலமங்கை

2. கமலப்போடி ஆண்டிப்போடி

3. பரிகரிப்போடி கந்தப்போடி

4. அழகிப்போடி கதிராமப்போடி

அவதூறு, மே 31, 1858

வழக்கறிஞர் பி.எப். தூய்சியாந்த் என்பவரிடமிருந்து

எண். 12022இல் வாதியானவர் 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்ப்பைப் பெற்ற நிலையில், 1 ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளின் முத்து வயல் சொத்தினை விற்பனை செய்வதற்காக கைவசப்படுத்த முயன்றபோது 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, அந்த சொத்து அவர்களுடையது என்றனர்.

3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் சார்பில், 22 சூலை 1858 அன்று ரூல்பசு சமர்பித்த பதில்.

முத்துவயல் என்பது முதுசொம். அதன் சாகுபடியில் ஏற்பட்ட கடனை அடைப்பதைத் தவிர வாரிசுதாரர்களால் அதனை விற்பனை செய்ய முடியாது. அந்த சொத்து, இந்தப் பிரதிவாதிகளுக்கு சேர வேண்டிய ஒன்றாகும்.

அக்டோபர் 29, 1858 அன்று பி.எப். தூய்சியாந்த் வழங்கிய பதிலுரை
பொது

சூன் 27, 1859.

2ஆம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்தபோது, 1 ஆம் பிரதிவாதி எனது தாய், அந்த சொத்து அவளுடையது. மேம்படுத்தவும், அதில் சாகுபடி செய்யவும் வேண்டி நானும் அவளும் வாதிகளிடமிருந்து பணம் கொடுத்து வாங்கினோம் என்று கூறினார்.

வாதி, அவருடைய கட்சிக்காரர்களுடன் கலந்து ஆலோசித்து அவர்கள் சார்பாக ஒத்துக்கொண்டது என்னவென்றால், முக்குவர்களின் வழக்கச் சட்டப்படி முதுசொம் நிலச் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு நிலத்தை சாகுபடிக்காகவும், அதன் பதின் வரிக்காகவும் ஒப்பந்தம் செய்யலாமே தவிர கடனுக்காக அதனை விற்பனை செய்ய முடியாது என்றார்.

(கையெழுத்து) ஏ.சி. முரே
மாவட்ட நீதிபதி

3ஆம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நிலம், 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளின் முதுசொம் ஆகும். நான், 1ஆம் பிரதிவாதியின் சகோதரி மகன். நான் தற்பொழுது 1ஆம், 2ஆம், 4ஆம் பிரதிவாதிகள் மற்றும் பிறரின் கூட்டுப் பங்குதாரர். இப்பொழுது, என்னுடைய சகோதரரும் 2ஆம் பிரதிவாதியும் உடைமையின் மேலாளர்கள். அதில், அவர்கள் 10 வருட காலமாக சாகுபடி செய்வதுடன் வரி செலுத்துவதில் ஈடுபடுகிறார்கள்.

4ஆம் பிரதிவாதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நான், 1ஆம் பிரதிவாதியின் மூத்த மருமகன். எனது பாட்டி 1ஆம் எதிர்மனுதாரரின் உறவினர். என்னுடைய பாட்டியும் 1ஆம் எதிர்மனுதாரரும் இரு சகோதரிகளின் மகள்கள்.

1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளால்தான் கடன் ஏற்பட்டது என்பதனை நிருப்பிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளுடையது என்பதால் அந்நிலத்தை வாதிகள் கையகப்படுத்தி விற்பனை செய்வது கேள்விக்குறியாகிறது. வாதிகளின் உத்தரவு பெற்றவர் கூறியதாவது: அவரை ஆச்சரியமாகப் பார்த்தாலும், சாட்சிகளை கொண்டுவர நேரம் வேண்டும்.

(கையெழுத்து) ஏ.சி. முரே
மாவட்ட நீதிபதி.

செப்டம்பர் 21, 1859

வாதி மற்றும் வாதிக்காக திரு. தூய்சியாந்த் வருகை புரிந்தார்.

1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகள் வருகை புரிந்தனர்.

3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகளும் மற்றும் அவர்கள் சார்பாக திரு. ரூல்பா வருகை புரிந்தார்.

கட்சிகள் மற்றும் அதிகாரம் பெற்றவர்களால் சொத்து தனித்தனியாக இருப்பதனை ஒப்புக்கொண்ட நிலையில் தற்பொழுது எழும் கேள்வி என்னவென்றால், 1ஆம் பிரதிவாதியின் முதுசொம் அல்லது வம்சாவழி சொத்தில், சாகுபடி கடன்களுக்காக 1ஆம் பிரதிவாதியின் உரிமைகளுக்கு முன்னுரிமை இல்லை என்பதும், 1ஆம் பிரதிவாதியின் மரணத்திற்குப் பின்பாக 3ஆம் பிரதிவாதிக்கு முக்குவர் சட்டப்படி அதில் ஒரு பங்கு இருக்கிறது என்பதுமாகும். 3 ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதியின் சகோதரி மகன் ஆவார்.

(சாட்சியங்கள் விசாரிக்கப்பட்ட நிலையில் சாகுபடி மற்றும் வரி நிமித்தமாக கடன் ஏற்பட்டதா என்பதும், முழுவதுமாக அல்லது பாதி நிலம் கையகப்படுத்த வேண்டுமா என்பதுமாகும்).

தீர்ப்பு

தீர்ப்பில் கூறப்பட்டதன்படி 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளின் கடனாளிகளாக வாதிகள் தனித்தனியாகவே இருந்தனர். நிலத்திற்கு வரி செலுத்தவேண்டி, குறிப்பிட்ட நிலத்தினை கடனாளிகளின் சொத்தாகக் கருதி, அவர்களுடைய கடனுக்காக விற்பனை செய்ய அறிவிப்பு செய்தனர். 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் விற்பனைக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், இச்செயலை எதிர்தரப்பினர் ஒதுக்கித் தள்ளிவிட்டு 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதியின் கடனுக்காக நிலத்தை ஒதுக்குவதாக அறிவித்தனர்.

3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் கூறுவது யாதெனில், வாதிகளுக்கு கடன் இல்லை என்றும், நிலத்தைச் சாகுபடி செய்ததால் ஏற்பட்ட கடனின் நிமித்தமாக வாதிகளுக்கு கடன் ஏற்படவில்லை என்றும் நிலமானது முதுசொம் அல்லது பரம்பரைச் சொத்தாக இருப்பதால் அதனை விற்கக்கூடாது என்றும் கூறுகிறார்கள். நிலமானது முதுசொம் சொத்து என்பதும், 1வது பிரதிவாதி முக்குவர் பெண்மணி என்பதும், அவளுடைய மகன்தான் 2ஆம் பிரதிவாதி என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. முக்குவர்களின் வழக்க சட்டத்தின்படி பிரதிவாதிகள் எந்த சாதியினராக இருந்தாலும் சாகுபடி கடன்களுக்காக அல்லது பங்கிற்காக வேண்டி அத்தகைய நிலங்களை விற்க முடியாது என்பது வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கே மிஞ்சியிருக்கிற ஒரேயொரு கேள்வி யாதெனில் 1 ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கான இந்தத் தீர்ப்பு கடனானது நிலத்தைப் பயிரிட்டதன் செலவீனங்கள் காரணமாக ஓரளவுக்கு அல்லது முழுவதுமாக வாதிகளுக்கு ஏற்பட்டதா என்பதுதான்.

இந்த பத்திரம் (தாக்கல் செய்த எண். 12022), செப்டம்பர் 1851 அன்று, 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், அக்டோபர் 20, 1847 மற்றும் நவம்பர் 1848 தேதியிட்ட கடன் பத்திரங் களின்படி வட்டியை கூட்டுகிறபோது இரட்டிப்பாகிறது என்பதால் நெல் கடனுக்காக வருகைபுரிய வேண்டி 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளால் வாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இந்த இரண்டு பிந்தைய பத்திரங்களும் சேர்க்கப்படவில்லை. அவற்றில் ஒன்றான செப்டம்பர் 16, 1851 பத்திரத்தில், 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளின் நிலத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்பட்ட செலவீனங்களுக்கான கடனைக் குறிக்கும் வகையில் எதுவும் இல்லை.

. . . . . .

வாதியின் சாட்சி, வாதியின் வழக்கைவிட சிறப்புக்கு உரியதா?

. . . . . .

முக்குவர் சட்டம், தவிர்க்க முடியாத வகையில் மோசமானதாக, கணக்கிடும்போது பொறியில் சிக்கியதாக இருந்தாலும், அதன் இருப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால், நீதிமன்றமானது அதிலிருந்து சாய்ந்திடவோ அல்லது புறக்கணித்திடவோ முடியாது.

எனவே, உத்தரவு பிறப்பிக்கப்படுவது யாதெனில், வாதிகளின் அவதூறு மற்றும் உரிமை ஆகியவை செலவீனங்களுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது. நீதிப் பேராணை எண். 12022 லிருந்து கேள்விக்குரிய நிலம் அவரிடமிருந்தும் அதன் தொடர்ச்சியிலிருந்தும் விடுவிக்கப்படுகிறது.

ஏ.சி. முரே
கூடுதல் மாவட்ட நீதிபதி.

குறிப்புகள்

1. முத்து வயலானது முதுசொம் என்கிற முறையில் குறைந்தபட்சமாக 1வது பிரதிவாதிக்கும், 3வது பிரதிவாதியின் தாய்க்கும், 4 ஆம் பிரதிவாதியின் பாட்டிக்கும் என வாதுரையில் சொல்லப்படுகிறது. தாய்வழி முதுசொம் 1ஆம் பிரதிவாதியின் தாய்க்கும் 4ஆம் பிரதிவாதியின் கிளையில் மற்றும் பொதுவான மூதாதையர் வழியில் வருகிற அவளின் பாட்டிக்கும் மற்றும் அக்கிளையைச் சார்ந்த 1ஆம் மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளுக்கும் சென்று சேருகிறது. இது பொதுவாகவே மூதாதையரால் கையகப்படுத்தப்பட்டதா அல்லது முதுசொம்மாக வருகிறதா என்பது குறித்து இப்போது விசாரிப்பது தேவையற்றது. அது, அவளுக்கு என்னவாக இருந்தாலும் அவளுடைய பேரக் குழந்தைகளுக்கு தாய்வழி முதுசொம் ஆகிவிட்டதால் அதனைப் பொருட்படுத்த வேண்டிய தேவையில்லை.

2. 21 செப்டம்பர் 1859 அன்று, அலுவலர்களாலும் கட்சிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட அறிக்கை யாதெனில், 3ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதியின் சகோதரியின் மகன் என்பதால் 1ஆம் பிரதிவாதியின் மரணத்தின்போது முதுசொம் அவனுக்குச் செல்லும். இது, தவறானதாகும். 1

ஆம் பிரதிவாதி, 3ஆம் பிரதிவாதியின் தாய் மற்றும் 4ஆம் பிரதிவாதியின் பாட்டி ஆகியோர் சொத்தின் உரிமையா ளர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் 1ஆம் பிரதிவாதியின் பாட்டியின் பொதுவான மூதாதையரிடமிருந்து அவர்களுக்கான உரிமையைப் பெறுகிறார்கள். ஒரு கிளையின் ஒரே பிரதிவாதியாக 4ஆம் பிரதிவாதி இருப்பதால் முக்குவ வயலின் ஒரு பாதியை பெறுவதற்கு உரிமையுடையவராவார். 1ஆம் பிரதிவாதிக்கும், 3ஆம் பிரதிவாதியின் தாய்க்கும் மீதியுள்ள பாதியில் கூட்டாக உரிமையுண்டு. 3ஆம் பிரதிவாதியின் தாய் மரித்துவிட்டார். அவளுடைய பங்கு, அவளுடைய சகோதரிக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் அல்லது 1ஆம் பிரதிவாதியின் மகனுக்கும் செல்லக்கூடாது. அது, அவளுக்குச் சொந்தமான 3ஆம் பிரதிவாதிக்கும் மற்றும் அவளுடைய சகோதரருக்கும் செல்ல வேண்டும். இந்த உரிமையின் மூலம் நாம் பார்ப்பது யாதெனில், 3ஆம் பிரதிவாதியின் சகோதரர், அவருடைய தாயின் கிளைப் பிரதிநிதியாக 2ஆம் பிரதிவாதியுடன் இணைந்து 1ஆம் பிரதிவாதியின் தாயை பிரிதிநிதித்துவப் படுத்துவதால் உண்மையான உரிமையாளராகிறார். 3வது பிரதிவாதியை விசாரிக்கும்போது அதுகுறித்து அவர் சரியாக கூறியது யாதெனில், "நான் 1ஆம் பிரதிவாதியின் சகோதரியின் மகன். 1ஆம், 2ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதி மற்றும் பிறருடன் தற்பொழுது நிலத்தில் எனக்கு கூட்டுப்பங்கு உள்ளது. என்னுடைய சகோதரரும் 2ஆம் பிரதிவாதியும் அந்த உடைமையின் மேலாளர்களாக இப்பொழுது இருந்து வருகிறார்கள்."

வழக்கு எண். 12460

வாதிகள்

1. வேலத்தாய்ப்பிள்ளை
2. அவருடைய கணவர் வேலப்போடி கதிராமப்போடி
3. கண்ணம்மை மற்றும்
4. அவளுடைய கணவர் ஆறுமுபாத்தப்போடி குமன்னிப்போடி

எதிர்

பிரதிவாதிகள்

1. காந்தப்போடி நாகந்தப்போடி
2. காந்தப்போடி கதிராமப்போடி
3. பி.எச். பெரியத்தம்பி வாசுதேவப்போடி
4. நாகந்தப்போடி உசுமுண்டப்போடி
5. நாகந்தப்போடி கண்ணப்போடி

அவதூறு, சூன் 5, 1857

இரவு வேலியானது, 1ஆம் மற்றும் 3ஆம் வாதிகளின் தாய்வழி முதுசொம் சொத்து ஆகும். குறிப்பிட்ட சில பகுதிகளை விற்பனை மற்றும் அன்பளிப்பு வாயிலாக வழங்கியதால் 25 வருட காலமாக கே. வன்னியா, பி. அலேகப்போடி மற்றும் வேலத்தாய்ப்பிள்ளை ஆகிய வாதிகள் கைவசம் வைத்துள்ளனர். இது, வழக்கு எண். 10236 மற்றும் வழக்கு எண். 10524 ஆகிய பிரச்சனையில், 2ஆம் வாதியின் கைவசத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.

அக்டோபர் இறுதியில், 4வது மற்றும் 5வது பிரதிவாதிகள் இரவு வேலி வீட்டினை 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம்

வாதிகளிடமிருந்து வாங்கிவிட்டதாக நாடகமாடியதுடன் வாதிகளின் உரிமையில் குறுக்கிட்டனர்.

நவம்பர் 30, 1857, வழக்கறிஞர் ரூபசின் பதிலுரை:

நிலமை வேலப்போடியின் கைவசமிருந்த இந்த நிலத்தில், 50 அவனங்கள் பரப்பளவில் முதலில் சாகுபடி செய்யப்பட்டது. இது கட்சிகளுக்கு முதுசொம். நிலமை வேலப்போடிக்குப் பிறகு, அது அவருடைய மருமகன் மற்றும் மருமகள் ஆகியோருக்குப் போய்சேரும். அதாவது, 1வது மற்றும் 3 வது வாதிகள் மற்றும் அவரது சகோதரர்கள் அலவப்போடி மற்றும் கதிராமப்போடி ஆகியோருக்கு ஒரு அரையும், 1 ஆம், 2ஆம் பிரதிவாதிகள் மற்றும் அவர்களது சகோதரி வள்ளியம்மை (3வது பிரதிவாதியின் தாய்) ஆகியோருக்கு ஒரு அரையும் போய்சேரும். ஆனால், நிலமை வேலப்போடியின் மகன் பெரியத்தம்பி, அவரது தந்தையிடமிருந்த தோட்டத்தை நிர்வகித்தது மட்டுமின்றி, அந்த நிலத்தை அவரது பண்ணை இருப்புகளோடு சேர்த்து 1843 வரை கைவசம் வைத்திருந்தார். பின்னர், அவர் விதைப்பதை கைவிட்டார். 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள், ஒரு பாதியின் வாரிசுதாரர்களாக இருக்கும் நிலையில் அந்த பாதியை 4வது மற்றும் 5வது பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டார்.

வாதியின் பதிலுரை: செப்டம்பர் 30, 1858.

1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் வாழ்வதற்குரிய ஆதாரத்தை மட்டுமே கொண்டிருப்பதால் வழக்கப்படி நிலத்தை அந்நியப்படுத்தவோ அல்லது நிலத்தை நன்கொடையாக கொடுக்கவோ முடியாது.

அவர்களால் முடியுமென்று கருதி, நிலத்தின் சாகுபடிக்கு ஏற்பட்ட கடன்களை அடைக்க வேண்டி, முன்னால்

விற்கப்பட்ட உரிமையாளர்களின் பகுதிகளுக்கான பரப்பளவை கழித்த பின்பாக, 50 அவனங்களாக எஞ்சிய மீதமுள்ள பாதியைவிட அதிகமாக 11 அவனங்களின் சாகுபடி பரப்பளவை அந்நியப்படுத்தினர்.

நடுவர்கள்

வாதிகளுக்காக திரு. வழக்கறிஞர் பீட்டர் முத்துக்கிறித்தியன்

பிரதிவாதிகளுக்காக திரு. வழக்கறிஞர் ரூல்பா

திரு. கனகநாயகம், செயலாளர், மாவட்ட நீதிபதி, நடுவர்.

சனவரி 22, 1861.

உத்தரவு

1ஆம் மற்றும் 3ஆம் வாதிகளுக்கு மட்டுமே சொந்தமான முதுசொம் அல்லது வேறு எவ்வகையிலும் உரிமைபட்ட கேள்விக்குரிய நிலத்தை எங்களுடைய திருப்திக்கு வாதிகள் நிருபிக்கத் தவறிவிட்டார்கள். மேலும், தடையின்றி கைவசம் வைத்திருப்பதை வாதிகள் நிருபிக்கத் தவறிவிட்டனர். இருதரப்பினரும் கொடுத்த ஆதாரங்களின் அடிப்படையில் கேள்விக்குரிய நிலத்திலிருந்து தெளிவாக தெரிவது யாதெனில், அதனுடன் இணைந்த வேறு சில நிலங்களும் மூதாதையர் பட்ட கடனுக்காக விற்கப்பட்டதாக அனைவரும் ஒப்புக்கொண்ட நிலையில் இப்பொழுது இருக்கிற உரிமை 1 ஆம் மற்றும் 2ஆம் வாதிகளுக்கு உரியதாயினும் 1ஆம், 3 ஆம் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் ஒரு பொதுவான பரம்பரையிலிருந்து வந்த நெருங்கிய உறவினர்கள் ஆவர்.

1ஆம் மற்றும் 2ஆம் வாதிகள் 8 அவனங்களுடைய சாகுபடி பரப்பளவைக் கொண்டுள்ளனர். முழு அளவில்

நிருபிக்கப்பட்ட பரப்பளவிலிருந்து மூதாதையர் கடனுக்காக விற்கப்பட்ட நிலங்களைத் தவிர்த்துப் பார்த்தோம் என்றால் வாதிகள் கூறியுள்ள இந்த 8 அவனங்களைத் தவிர கூடுதலாக வாதிகளுக்கு உரிமையுண்டு என்பது குறித்து எங்களுக்குத் தெரியவரவில்லை. எனவே, வாதிகள் தகுதியற்றவர்கள் என்றும் வழக்குச் செலவுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்றும் நாங்கள் தீர்ப்பு அளிக்கிறோம்.

குறிப்புகள்

1. இந்த வழக்கில், நிலமானது தாய்வழி முதுசொம் என முழுமையாக விவரிக்கப்பட்டாலும் இது வெறுமனே முதுசொம் என அழைக்கப்படுகிறது.

2. இது ஒரு முக்கியமான தீர்ப்பாகும். இது, முக்குவர் நிலங்களின் நிரந்தர உரிமைக்கு எதிரான வாதத்தை முன்வைக்கிறது. வழக்கு எண். 10236 மற்றும் வழக்கு எண். 10524லிருந்தும் கட்சிகள் ஒத்துக்கொண்டதிலிருந்தும் மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்தும் இரவு என்பது வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் தாய்வழி முதுசொம் என்பதில் சந்தேகமில்லை. நிலம், தாய்வழி முதுசொம் அல்லது முக்குவர் சட்ட வாரிசுரிமைப்படி 1 ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் ஆகியோர் அவர்களுடைய பங்கிலிருந்து 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ததை ஆதரிப்பதன் மூலம் நடுவர்கள் அவர்களின் நிலைப்பாட்டிலிருந்தும் புத்திசாலித்தனத்திலிருந்தும் தெரியவரவில்லை எனச் சொல்வதும் பைத்தியக்காரத்தனம் ஆகும்.

அசல் நிலம் 50 அவனங்களின் விதைப்பிற்கான பரப்பளவை கொண்டிருந்தது. கடைசியாக வைத்திருந்தவர்கள் 16 அவனங்களை மட்டுமே தற்போதைய வழக்கறிஞரிடம் விட்டுச் சென்றுள்ளனர். வழக்கு எண். 13341 மற்றும் முந்தைய

வழக்குகளிலிருந்து சேகரித்தவை ஆகியவற்றிலிருந்து அதன் பரம்பரையை இவ்வாறாகக் குறிப்பிடலாம்:

நிலமை வேலப்போடிக்கு முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகிய இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவருக்கு பெரியத்தம்பி என்கிற ஒரு மகனும் இருந்தான். அவன், தனது உறவுப்பெண் வள்ளியம்மையை (பத்தநாச்சியின் மகளை) திருமணம் செய்துகொண்டான்.

முத்தம்மாவுக்கு குழந்தைகள் இருந்தனர். அதாவது, 1ஆம் வாதி, காலஞ்சென்ற 3ஆம் வாதி அலவப்போடி மற்றும் 5 ஆம் பிரதிவாதி.

பத்தனாச்சிக்கு குழந்தைகள் இருந்தனர். 1ஆம், 2ஆம் பிரதிவாதிகள் மற்றும் வள்ளியம்மை (பெரியத்தம்பியின் மனைவி).

1ஆம் பிரதிவாதிக்கு குழந்தைகள் இருந்தனர். 4ஆம் மற்றும் 5ஆம் பிரதிவாதிகள்.

வள்ளியம்மைக்கு குழந்தைகள் இருந்தனர். 3வது பிரதிவாதி மற்றும் அவருடைய இரண்டு சகோதரிகள் பத்தநாச்சி மற்றும் குன்சிநாச்சி.

இந்த முதுசொம் உடைமையை பெரியத்தம்பி தவறாக வைத்திருந்ததால் எந்தவிதக் கருத்துமின்றி அதனை தள்ளுபடி செய்திருக்கலாம். நிலமை மரணத்தின்போது ஒரு பாதி முத்தம்மாவுக்கும் இன்னொரு பாதி பத்தனாச்சிக்கும் சென்றது.

இப்பொழுது, முத்தம்மாவுக்கு சந்ததியாக ஓர் ஆணோ அல்லது பெண்ணோ இருக்கும்வரை அவளிடம் சென்ற பாதி ஒருபோதும் பத்தநாச்சியின் சந்ததிக்கு வர முடியாது. இதுபோல் பத்தநாச்சியின் நேர் மரபு வழியில் ஒரு சந்ததியினர்

இருப்பதால் பத்தநாச்சியின் பாதி மறுபுறம் செல்லாது. இந்த கொள்கைகளின் அடிப்படையில், பிரதிவாதிகளின் உரிமைகள் குறித்த கேள்விக்குள் நடுவர்கள் நுழையாமல், வாதிகளின் வழக்கை அவர்கள் சுருக்கமாக தள்ளுபடி செய்ததாகத் தெரிகிறது. இந்த வழக்கின் முடிவுக்கு முற்றிலும் பொருந்தாத ஒரு கேள்வி என்னவென்றால், அவர்கள் அதில் நுழைந்திருந்தால் அது அறிவுறுத்தலாக இருந்திருக்கும்.

தாய்வழி முதுசொம், நிரந்தர மரபுரிமைக்கான சுமையைக் கொண்டிருந்தால், இந்தத் தீர்ப்பு நிச்சயமாக தவறாக இருந்திருக்கும். முத்தம்மாவின் கிளையானது எந்தவித சந்தேகமுமின்றி உரிமையாகப் பார்ப்பது யாதெனில், பத்தநாச்சியின் கிளையில் அனைவரும் மரித்துவிட்டதால் அவளுடைய பங்கு முத்தம்மாவின் கிளைக்குச் செல்லும் என்பதாகும். 4வது மற்றும் 5வது பிரதிவாதிகள், 1வது பிரதிவாதியின் மகன்கள் என்கிற முறையிலும், அவர்கள் வாங்கியதன் மூலமும், அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் குறித்து எந்தவொரு வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. நிலத்தை விலைக்கு வாங்குவதன் மூலம் அதனை அவர்கள் சொந்தமாக்கவும், அதனை குடும்பத்திலிருந்து அந்நியப்படுத்தவும் செய்யலாம். அவர்களுக்கு கடன் வழங்கியவர்கள், அதனை எடுத்து விற்கவும் செய்யலாம்.

பிரதிவாதிகளின் உரிமையைப் பொறுத்தவரை வழக்கானது அவர்களுக்குள் இவ்வாறாக இருக்கும்:

பத்தநாச்சியின் 8 அரவனங்களின் பரப்பளவு அவளுடைய மகள் வள்ளியம்மைக்கு சென்று சேருவதுடன், அவளிடமிருந்து உடைமையாகவும் உரிமையாகவும் 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு அவர்கள் இறக்கும்வரை சென்றுசேரும். வள்ளியம்மை மரித்துவிட்ட நிலையில் 3வது

பிரதிவாதி (மகன்), மற்றும் இரண்டு மகள்கள் பத்தநாச்சி மற்றும் குன்சிநாச்சி ஆகியோர் இந்த வழக்கில் கட்சியாக இணைந்துகொள்ளவில்லை. அதன்படி வள்ளியம்மையின் 8 அரவனங்களின் பரப்பளவு, பத்தநாச்சி மற்றும் குன்சிநாச்சி ஆகியோருக்கு சென்று சேர்ந்தது. 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகள் இன்னும் உயிருடன் இருப்பதால் உடைமை மற்றும் அனுபவம் அவர்களுடனே இருந்து வருகிறது. அவர்கள் மரித்தவுடன், இந்த உரிமைகள் 3வது பிரதிவாதிக்கு சென்று சேர்ந்துவிடும். மேலும், அந்நியப்படுத்தலுக்கு எதிராக எந்தவொரு சட்டமும் இல்லாவிடினும் அதற்குரிய தகுதியாக 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் தற்போதைய மற்றும் எதிர்கால உடைமை மற்றும் எதிர்கால அனுபவம் ஆகியவற்றைப் பெறுவதுடன் உரிமையாளரின் சம்மதத்துடன், குறிப்பாக சகோதரிகளில் 3வது பிரதிவாதியை, அதாவது முதுசொம்மை அந்நியபடுத்த முடியும். ஆனால், இந்த சகோதரிகளின் ஒப்புதல் முறையான வழியில் அந்நியப்படுத்தப்படுவதற்கு பெறப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த ஆட்சேபனையை இந்த சகோதரிகள் வலியுறுத்தி இருந்தால் இது நிச்சயமாக அதிக தகுதியுடையதாக இருந்திருக்கும். ஆனால், இந்த சகோதரிகள், வாழ்க்கை நலனுக்காக உரிமை கோருபவர்களின் சம்மதத்துடன் முதுசொமை அந்நியப்படுத்த முடியுமெனக் கருதி, அதே சகோதரிகளின் சம்மதத்துடன் முதுசொமை அந்நியப்படுத்தினால் வாழ்க்கை தொடர்பாக உரிமை கோருபவர்களுக்கு சரியான ஆட்சேபனையாக இருக்க முடியாது.

3. பரிந்துரைக்கப்பட்ட வேண்டுகோளைப் பொறுத்தவரை நடுவர்கள் குறிப்பிடுகையில், "வாதிகள் தடையின்றி வைத்திருப்பதை நிருபிக்கத் தவறிவிட்டனர். அத்தகைய உடைமை நிருபிக்கப்பட்டிருந்தால் தீர்ப்பு வேறுமாதிரி அமைந்திருக்கும்."

அவர்களின் கூற்றை ஓரளவு நிரந்தர அடிப்படையாகக் கொண்டிருக்கும் அணுகுமுறையிலும் ஓரளவுக்கு தங்களுடைய சொந்த உரிமை சார்ந்த செயலிலும் ஒரு விசித்திரமான முரண்பாடு வாதிகளிடம் உள்ளது.

4. அதற்கு விடையளிக்கையில், வாதிகள் ஒருவகையில் நிரந்தரமான கேள்வியைக் கைவிட்டுவிட்டு பிரதிவாதிகள் பாதிக்குமேல் தலையிடுகிறார்கள் என்றே குற்றம் சாட்டினர்.

அந்தப் பிரதிகளில் கூறப்பட்டுள்ளது யாதெனில், "1வது, 2 வது மற்றும் 3வது பிரதிவாதிகளுக்கு வாழ்க்கைக்கான ஆர்வம் மட்டுமே உள்ளது" மற்றும் அவர்கள், "பங்கினை கொடையாகவோ அல்லது அந்நியப்படுத்தவோ முடியாது" என்கிற பிரதிபலிப்பின் வாயிலாக பத்தநாச்சி மற்றும் குன்சிநாச்சி ஆகியோரின் உரிமைகளைப் பொறுத்தவரை மட்டுமே உண்மை செல்லுபடியாகும்.

வழக்கு எண். 13341

வாதிகள்

1. வேலத்தாய்ப்பிள்ளை
2. அவருடைய கணவர் வேலப்போடி கதிராமப்போடி
3. கண்ணம்மை மற்றும்
4. அவளுடைய கணவர் ஆறுமுபாத்தப்போடி குமன்னிப்போடி

எதிர்

பிரதிவாதிகள்

1. காந்தப்போடி நாகந்தப்போடி
2. பி.எச். பெரியத்தம்பி வாசுதேவப்போடி
3. நாகந்தப்போடி உசுமுண்டப்போடி
4. நாகந்தப்போடி கண்ணப்போடி
5. பலகாபோடி கதிராமப்போடி

அவதூறு, மார்ச் 15, 1861

வழக்கறிஞர் செ.எப். தூசாந்த்

நெல் சாகுபடி செய்யும் அளவிற்கு 50 அவனம் கொண்ட இரவு வேலியை வைத்திருந்த நிலமை வேலப்போடி 1833 இல் மரித்துவிட்டார். அவருக்குப்பிறகு, அவரது இரண்டு சகோதரிகளான முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகியோருக்கு நிலம் பகிர்ந்து அளிக்கப்பட்டது. முத்தம்மாவின் குழந்தைகளான 1வது மற்றும் 3வது வாதிகள், 5ஆம் பிரதிவாதி மற்றும் அலவப்போடி ஆகியோர் மரித்துவிட்டனர். 1வது மற்றும் 3வது வாதிகள் அலவப்போடியின் சகோதரிகளாக இருப்பதால் அவருடைய பங்கில் உரிமை பெறுவர். பத்தநாச்சியின் குழந்தைகள்

என்போர் 2ஆம் பிரதிவாதியின் தாய் மற்றும் ஐந்து குழந்தைகள். அவர்களில் 1ஆம் பிரதிவாதியும் ஒருவர். ஏனைய நான்குபேர் கதிராமப்போடி, அலவப்போடி, நாகந்தப்போடி மற்றும் குஞ்சுத்தம்பி ஆகியோர் மரித்துவிட்டார்கள். அவர்களின் பங்குகள், அவர்களின் சகோதரர் 1ஆம் பிரதிவாதி மற்றும் 2ஆம் பிரதிவாதி ஆகியோருக்கு கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். நிலமை வேலப்போடியின் மரணத்திற்குப் பின்பாக 1வது மற்றும் 2 வது வாதிகள், 5வது பிரதிவாதி மற்றும் அலவப்போடி ஆகியோர் பண்ணையில் ஆர்வமுடைய இதர நபர்களின் சம்மதத்துடன் எ பிரிவில் அமைந்துள்ள 10 அவனங்களை அலகிப்போடி என்பவருக்கு நவம்பர் 12, 1847 அன்று விற்றுவிட்டனர். அதேநாளில், 1ஆம் பிரதிவாதி மற்றும் அலவப்போடி ஆகியோர் மேற்கூறிய ஒப்புதலுடன் பி பிரிவிலுள்ள 8 அவனங்களை 1வது மற்றும் 2வது வாதிகளுக்கு விற்றுவிட்டனர்.

ஒன்பது வருடங்களுக்கு முன்பாக 1ஆம் மற்றும் 2ஆம் வாதிகளும், 1ஆம் பிரதிவாதியும் சி பிரிவில் அமைந்துள்ள 8 அவனங்களை குன்சிலியாபோடி வன்னியா என்பவருக்கு விற்றுவிட்டனர். வன்னியா மற்றும் 1ஆம் மற்றும் 2ஆம் வாதிகள், அவர்களுடைய நிலங்களை முறையே பி மற்றும் சி உடைமைகளை பரிமாற்றம் செய்துகொண்டனர். டி பிரிவில் மீதமுள்ள 24 சாகுபடி பரப்பளவுள்ள அவனங்கள் வாதிகளிடமும், 1ஆம், 2ஆம் பிரதிவாதிகளிடமும் மற்றும் 5ஆம் பிரதிவாதியின் கைவசமும் உள்ளன. 5ஆம் பிரதிவாதி, 1ஆம் மற்றும் 3ஆம் வாதிகளுக்கு ஆதரவாக உரிமையை விட்டுக்கொடுத்ததால் இந்த வாதிகள் 12 அவனங்களில் சாகுபடி செய்வதற்கு உரிமை பெற்றனர். 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள், 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளிடமிருந்து டி முழுவதையும் வாங்கியதாக பாசாங்கு செய்து, வாதிகளை டி பங்கிலிருந்து அக்டோபர் 1836இல் வெளியேற்றிவிட்டனர்.

(முக்குவர்கள், தங்களது தாய்வழி முதுசொம் சொத்துக்களை அந்நியப்படுத்தும் வழக்கத்தில் உள்ளனர் என்பதனை சுட்டிக் காட்டுவதற்கு அவதூறின் மேற்கண்ட சுருக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு, உண்மைகளை முழுமையாக வெளிப்படுத்துவதால் மீதமுள்ள நடவடிக்கைகள் இங்கே கொடுக்கப்படவில்லை).

தீர்ப்பு

வாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு யாதெனில், அந்த நிலத்தின் உடைமையை, நிலமை வேலப்போடி உடைமையாகக்கொண்டு, அதாவது 1833இல் அவர் மரிப்பது வரை அவரின் கைவசமே இருந்துவந்தது. அவருக்குப்பின், அவரது இரு சகோதரிகளான முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகியோருக்கு தாய்வழி முதுசொம் என்கிற பெயரில் உடைமையாக வந்துசேரும். அவர்கள் முக்குவர்கள் என்பதால் வழக்கமாக முக்குவர் பழக்கவழக்கத்திற்கு நிலம் உட்பட்டதே.

வேலப்போடியின் மரணத்திற்குப் பின்பாக (அவருக்கு முன்பாக அவரது சகோதரிகள் மரித்துவிட்டார்கள்), நிலம் அத்தகைய வழக்கத்தின்பேரில், அவரது சகோதரிகளின் குழந்தைகளுக்கு சென்றுசேரும்.

முத்தம்மாவுக்கு வாரிசுகள் உண்டு.

1. *வேலத்தாய் (1ஆம் பிரதிவாதி)*
2. *கண்ணம்மை (3வது பிரதிவாதி)*
3. *அலவப்போடி (காலஞ்சென்றவர்)*
4. *கதிராமப்போடி (5வது பிரதிவாதி)*

பத்தநாச்சிக்கு வாரிசுகள் உண்டு.

1. நகந்தப்போடி (1வது பிரதிவாதி)

2. காலஞ்சென்ற வள்ளியம்மையின் வாரிசுதாரர்கள்

   i. வாசுதேவப்போடி (2வது பிரதிவாதி)

   ii. பத்தநாச்சி

   (வழக்கில் இணைந்து கொள்ளாதவர்)

   iii. குன்சிநாச்சி

   (வழக்கில் இணைந்து கொள்ளாதவர்)

3. கதிராமப்போடி (காலஞ்சென்றவர்)

4. கரியப்போடி (காலஞ்சென்றவர்)

5. நான்சிப்போடி (காலஞ்சென்றவர்)

6. குன்சித்தம்பி (காலஞ்சென்றவர்)

மேலும் இந்த கிளைகள் ஒவ்வொன்றிற்கும் அரைப் பங்கு உரிமையுண்டு என்று அவர்கள் கோருகிறார்கள். கைவிடப்பட்ட எந்தவொரு பங்காக இருந்தாலும், வாழ்க்கை நலனுக்கு உரியதாக இருந்தாலும், அவரால் முடியாத இதர விசயங்களைத் தவிர முக்குவர் வழக்கமே செல்லும் என்பதனை 5ஆம் பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார்.

* * *

இந்த நிலம் குறித்து, முந்தைய வழக்குகள் இருந்ததை அனைவரும் ஒப்புக் கொள்வதுடன் அதற்குரிய ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளனர்.

* * *

தற்போதைய வழக்கு, மார்ச் 15, 1861 அன்று நிறுவப்பட்டது. வழக்கு எண். 12460 அல்லது இந்த வழக்கிற்காக சொல்லப்பட்ட எதுவாயினும், கோனத்தாய் மற்றும் வீரத்தாய் ஆகியோரின் உரிமைகள் குறித்து வாதுரையில் சொல்லப்பட்ட உரிமைகளை பிரதிவாதிகள் (1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4 ஆம்) கோருகிறார்கள். இது, வாதுரையில் எங்காவது அல்லது சான்றுகளில் எங்காவது அவர்கள் யார் என்றோ அல்லது எந்த உரிமையைக் கோருகிறார்கள் என்றோ கூறப் பட்டுள்ளதா?

வழக்குகள் 10236 மற்றும் 10524 ஆகியவற்றில் வெளிப்படையாக வாரிசுகளை இரண்டு வரிகளில் காண்பிக்க, அதாவது முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகிய வாதிகளை உறுதிபடுத்த முடியுமா?

காச்சேரி பதிவேடுகள், அவர்களுடைய உடைமையை திருப்திகரமான முறையில் காண்பிக்கின்றன. பி பகுதியை வாங்கிய வன்னியாவை சார்ந்த பத்துவின் பதிவேடு, 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் வெளியேற்றப்படும் வரை அவர்களிடமே இருந்ததை நிருபிக்கிறது.

பிரதிவாதிகள், டி பகுதியை முழுமையாக உரிமை கோருவதை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. அவர்களுடைய பத்திரப்படி அவர்களுக்கு முறையே ½ மற்றும் ¼ பங்கினை மட்டுமே தர முடியும். 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு, அவர்கள் கருதுவதுபோல் நவம்பர் 1847ஆம் ஆண்டு பி பகுதியை அவர்களுக்கு அன்பளிப்பாக கொடுத்திருந்தாலும், பின்னர் வன்னியாவுடன் சி பரிமாற்றம் செய்து கொண்டதன்படி இன்னொரு ¼ பங்கினையே பிரதிநித்துவம் செய்ய முடியும்.

பிரதிவாதிகள் எதையும் நிருபிக்கவில்லை. ஆனால், எந்தவொரு நோக்கமும் இல்லாமல் நிறைய சாட்சிகளை அழைத்திருக்கிறார்கள்.

சில பகுதிகள், அனைத்துத் தரப்பினராலும் அந்நியப்படுத்தப்பட்டதாக தெரிகிறது. குறிப்பாக, முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகிய இரு வாரிசுதார்கள். அவ்வாறு அந்நியப்படுத்தப்பட்ட சில உயரிய பகுதிகளில் ½ மதிப்பைக் கோரியுள்ளனர். உண்மையில், அனைத்திலுமாக 18 அவனங்களுக்கு அதிகமான புலம் பழைய பதிவேட்டில் இருப்பதாகத் தெரிகிறது. நிகழ்ந்தவை அனைத்தும் அந்நியப்படுத்தப்பட்ட உயரிய நிலங்களாக இருக்கலாம். அவை, வாரிசுகளாக கட்சிகள் இருக்கின்ற பகுதிகளில் அல்ல. வாதிகள், முத்தம்மாவின் வாரிசுகள் என்பதால் இரவு வேலியில் ½ பங்கிற்கு தங்களது உடைமையை திருப்திகரமாக நீதிமன்றத்தில் நிருபித்துள்ளனர். அதன்படி வழங்கப்படும் தீர்ப்பு யாதெனில், அதிலிருந்து கிடைக்கிற சரியான பங்கினைக் கொண்டு அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் பிரதிவாதிகள் செலவுத் தொகைகளைக் கட்ட வேண்டும்.

செ.டபிளியூ. பிரிச்,
மாவட்ட நீதிபதி.

குறிப்புகள்

1. 1ஆம் பிரதிவாதியின் காலஞ்சென்ற சகோதரர்களின் பங்குகள் 1ஆம் பிரதிவாதி, அவருடைய மருமகன் 2ஆம் பிரதிவாதி ஆகியோருக்கு வழங்கப்பட்டதாக அவதூறு கூறுகிறது. இதன் பொருள் என்னவென்றால், இறந்தவரின் வாழ்வாதார நலனிலுள்ள பங்குகள் 1ஆம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்டுள்ளன. 1ஆம் பிரதிவாதியின் மரணத்தின்போது அது 2ஆம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரிக்கும், உடைமையாளராக இருப்பவருக்கும் பகிர்ந்தளிப்பார்கள். இதேபோல், 1ஆம் மற்றும் 3ஆம் வாதிகளுக்கு, அவர்களுடைய காலஞ்சென்ற சகோதரர் அலவப்போடியின்

பங்கில் உரிமையுண்டு என்கிற குற்றச்சாட்டில், அவர் வைத்திருந்த வாழ்வாதார நலனில் 5ஆம் நபரை பங்குதாரராக சேர்த்துள்ளனர். மேலும், 5ஆம் பிரதிவாதியின் மரணத்தின்போது முத்தம்மாவின் கைவசமுள்ள முழு நிலமும் வாரிசுதாரர் என்கிற முறையில் 1ஆம் மற்றும் 3ஆம் வாதிகள் முழு உரிமையாளர்கள் ஆகின்றனர்.

2. முத்தம்மாவின் பிள்ளைகள் ஏ பகுதியை பத்தநாச்சியின் பிள்ளைகளின் சம்மதத்தோடும், பத்தநாச்சியின் பிள்ளைகள் பி பகுதியை முத்தம்மாவின் பிள்ளைகளின் சம்மதத்தோடும் விற்பனை செய்ததாகத் தெரிகிறது. வாங்குகிறவர்களுக்கு ஒப்புதல் வழங்கவும், உடைமையாக கொள்ளவும் தேவையானதாக இது இருந்திருக்கிறது. தாய்வழி முதுசொம்மிலிருந்து வருகிற இந்த இரு கிளைகளும் பிரியாமல் இருந்திருக்கிறது என்பதனையும் அறிகிறோம். ஒவ்வொரு கிளையும், அதன் பங்கினை மற்றொன்றிலிருந்து பிரித்து சுயமாக வைத்திருந்தால், ஒரு கிளையிலுள்ள தனி நபர்களுக்கு முதுசொம்மிலிருந்து வரும் அந்தந்த பங்குகளின்மீது மற்றவர்களின் பரிவர்த்தனைக்கான ஒப்புதல் பெற வேண்டிய எந்தவொரு சந்தர்ப்பமும் அவர்களுக்கு இருந்திருக்காது.

3. வாசகர்களுக்கு நினைவூட்டுவது யாதெனில் முதுசொம் அல்லது பத்தநாச்சியின் குழந்தைகளுக்கு நிலத்தின் ஒரு பகுதி பகிர்ந்து அளிக்கப்பட்டதாக கூறும்போது, உடைமை மற்றும் அனுபவத்தைப் பொறுத்தவரை அது ஆண்களுக்கு வழங்கப்பட்டது; பெண்களைப் பொறுத்தவரை எதிர்கால அனுபவத்திற்குரிய தற்போதைய உரிமையாளர்கள் ஆவர்.

4. 2வது பிரதிவாதியின் சகோதரிகள் இவ்வழக்கில் உடைமை கோரியவராக இணைந்திருக்க வேண்டும். ஏனெனில், பாதி பரப்பளவு அவர்களுக்கு உடைமை

யானதாகும். அவர்கள் இணையாததிலிருந்து, பாதிக்குமேல் அவர்கள் உரிமைகோர விரும்பவில்லை எனத் தெரிகிறது.

5. தீர்ப்பின் முடிவு யாதெனில், தாய்வழி முதுசொம் அழிக்க முடியாதது என்கிற கருத்தை ஆதரிக்கிறது. நிலத்தில் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரின் சம்மதத்துடன் அந்நியப்படுத்தல்கள் நடைபெற்றுள்ளன என்பது விதி 38 *(10)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலைப்பாட்டிற்கு வலுவான ஆதரமாகும்.*

வழக்கு எண். 16151

அவதூறு, நவம்பர் 20, 1869

தீர்ப்பு, அக்டோபர் 30, 1870,

சி.கைச். போலெ, மாவட்ட நீதிபதி.

இந்த வழக்கின் சுருக்கத்தை வழங்குவது தேவையற்றது.

ஒரு முக்குவர் பெண்மணி, அவருடைய நிலத்தை வாதிக்கு விற்பனை செய்கிறார். பின்னர், அவரது உறவினர்களுடன் கூட்டு சேர்ந்துகொண்டு அந்த நிலத்தை அவருடைய தாய்வழி முதுசொம் என வலியுறுத்தி, அதனை வாதி வைத்திருப்பதிலிருந்து தடுக்கிறார். விசாரணையின்போது, அதற்கு அவர் பொருத்தமற்றவர் என்பதால் அவருடைய சாட்சிகளுடன் வாதி தயாராகி வரவில்லை.

வழக்கு எண். 16384

வாதி

1. சின்னவர் வேலாயுதன்

எதிர்

பிரதிவாதிகள்

1. பத்தார் அடப்பன் கதிராமன்

2. மணக்கப்போடி பி.கைச். சின்னத்தம்பிப்போடி

3. மணக்கப்போடி மல்லப்போடி

(இந்த வழக்கில் மட்டுமல்ல, முக்குவர் சட்டத்தைத் தாங்கிய இன்னும் எண்ணிக்கையிலான வழக்குகளின் உள்ளடக்கத்தில் சட்டம் மற்றும் உண்மைகள் குறித்த மதிப்பாய்வுகள் உள்ளன).

பிப்ரவரி 27, 1871.

வாதிகளுக்காக

திரு. வழக்கறிஞர் கிரௌதர்

பிரதிவாதிகளுக்காக

திரு. வழக்கறிஞர் புர்செல் மற்றும்
டிரைபெர்க் ஆகியோருடன்
திரு. வழக்கறிஞர் கதிர்மேர்
(1ஆம் பிரதிவாதிக்காக)
திரு. வழக்கறிஞர் சுவாமிநாடார்
(2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளுக்காக)

தீர்ப்பு

இந்த வழக்கின் வாதி 30 அவனம் மதிப்பிலான நெல்லினை அவர்களிடமிருந்து மீட்டுத்தருமாறு பிரதிவாதிகள் மீது வழக்கு தொடுக்கிறார். சியூனா வன்னியன் வேலி என்ற புலத்திலுள்ள கராச்சி வயல் மற்றும் புன்னை தாவிசம் ஆகிய இரண்டு பொட்டலத் தயாரிப்புகள் 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளால் வாதியிடம் ஒத்திக்கு வழங்கப்பட்டன. அந்த தயாரிப்புகளை 1ஆம் பிரதிவாதி பலவந்தமாக எடுத்துக் கொண்டார்.

2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளால் வாதிக்கு வழங்கப்பட்ட 20 அக்டோபர் 1869 தேதியுடைய எ ஒத்திப் பத்திரத்தின் செல்லுபடி தன்மையை 1ஆம் பிரதிவாதி மறுக்கிறார். 22 அக்டோபர் 1864 அன்று, ஒரு ஒத்திப் பிணைப்பு எஎ–இன்கீழ் 10 அவனங்களின் சாகுபடி செய்வதற்கு அவரது (1ஆம் பிரதிவாதியின்) உரிமையாக 2 ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளின் பெரிய மாமா கண்ணப்பணிக்கிப்போடி வழங்கியிருக்கிறார்.

2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் மறுத்துக்கூறுவது யாதெனில், 1ஆம் பிரதிவாதிக்கு ஒத்தியாகவோ அல்லது வேறுவகையிலோ நிலத்தை முழுமையாக வழங்கிட கண்ணப்பணிக்கிப்போடிக்கு எந்த உரிமையும் கிடையாது. மேலும், அவர்கள் கூறுவது யாதெனில், எந்தவொரு நிலப் பகுதியாக இருந்தாலும் கண்ணப்பணிக்கிப்போடிக்கு வாழ்க்கை நலம் மட்டுமே இருந்த நிலையில் அந்த நலமும் 1864இல் அவரோடு மரித்துவிட்டது.

ஆதாரங்களிலிருந்து தெரிவது யாதெனில், 20 அவனங்களில் சின்ன வன்னியன் வேலி பரப்பளவு முழுவதும் நிலமை கமலப்போடி கண்ணப்பணிக்கிப்போடிக்கு, அதாவது முக்குவர் வழக்கப்படி 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளின்

பெரிய மாமாவுக்கு உரியது. நிலமை பலிப்போடி, அவருடைய வாழ்நாளில் கண்ணப்பணிக்கிப்போடி மற்றும் அவரது சகோதரர் பரிகரிப்போடியார் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கையில் ஒன்றில் பாதி பங்கினை தீர்ப்பாகப் பெற்றார். ஆகவே, அந்த தீர்ப்பின் முடிவுக்குப் பிறகு (சான்றுகள் வாயிலாக நிருபிக்கப்படவில்லை), கண்ணப் பணிக்கிப் போடிக்கு 10 அவனங்களில் சாகுபடி செய்யும் அளவிற்கு ஒரு பாதி மட்டுமே உரிமையுண்டு.

அதிலிருந்து தெரிவது யாதெனில், கண்ணப் பணிக்கிப் போடிக்கு ஒரு சகோதரர் மற்றும் மூன்று சகோதரிகள் உண்டு.

1. பரிகரிப்போடியார், அவரை முன்னறிவித்து சென்றவர்.

2. திரயம்மை, வாரிசின்றி அவரை முன்னறிவித்து சென்றவர்.

3. கண்ணம்மை அல்லது கண்ணாச்சி, காலஞ்சென்றவர், வாரிசினை விட்டு சென்றவர்.

   a) பலத்தாய், காலஞ்சென்றவர், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளின் தாயார்.

   b) வள்ளியம்மை, வாழ்ந்து வருபவர்.

   c) கந்தப்போடி, காலஞ்சென்றவர்.

   d) பரமக்குட்டி, காலஞ்சென்றவர்.

4. மாதம்மா, வேலப்போடி கந்தப்போடி மற்றும் வெல்லப்போடி சடையப்போடி ஆகியோரின் தாய்.

சாகுபடி செய்வதற்கான அவர்களின் உரிமைகள் குறித்து வாதிக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஒரு தகராறு இருந்துவந்தது என்பது ஆதாரங்களிலிருந்து தோன்றுகிறது. சாதரணமாக 1ஆம் பிரதிவாதி, உதவி முகவரிடம் புகார் ஒன்றினை அளித்துள்ளார். வன்னிய சின்னத்தம்பிப்போடி மரித்ததிலிருந்து சில விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. மேலும், இருதரப்பினர் கூறியதன்பேரில் இந்த பிரச்சனையில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மோசமாக, அந்த நேரத்தில் கூறப்பட்ட ஏற்பாட்டின்படி 1 வது பிரதிவாதி ஒத்துக்கொண்டுள்ளார். அடுத்தடுத்து நடந்த மீறல்களை வாதி எவ்வாறு மீட்டெடுத்தார் என்பதனை நிச்சயமாக விசாரிக்க வேண்டும். ஆனால், கூறப்பட்ட ஏற்பாட்டினை 1ஆம் பிரதிவாதி ஒத்துக்கொண்டார் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என நீதிமன்றம் கருதுகிறது.

இந்த நிலத்திலுள்ள 3 அவனங்களில் சாகுபடி செய்த நிலையில் 30 அவனங்களில் பயிரிட்டதை 1ஆம் பிரதிவாதி எடுத்துக்கொண்டார் என வாதி குற்றம் சாட்டுகிறார். நிச்சயமாக, நிலத்தில் சாகுபடி செய்வதற்கு அல்லது ஏதாவது ஒரு பகுதியில் வாதி முயற்சி செய்தபோது எல்லா சந்தர்ப்பங்களிலும் 1ஆம் பிரதிவாதி குறுக்கிட்டார் என்பதனை நீதிமன்றம் நம்புகிறது. இருப்பினும், வாதி 3 அவனங்களில் மட்டுமே பயிரிட்டதாக 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

எண். 11765, 12668, 13341 மற்றும் 13452 போன்ற பல வழக்குகளில் முக்குவர் வழக்கத்திலுள்ள ஆதாரங்களை வாதியின் வழக்கறிஞர் சமர்பித்துள்ளார். அதன்படி, கண்ணப்பணிக்கிப்போடிக்கு நிலத்தில் ஒரு வாழ்வாதார ஆர்வம் மட்டுமே இருந்தது. அது, தாய்வழி முதுசொம் சொத்து ஆகும். அவரது மரணத்திற்குப் பிறகு 2ஆம் மற்றும்

3ஆம் பிரதிவாதிகள் அதனை வாதியிடம் ஒத்திக்கு வைத்திருப்பது சரியானதே ஆகும்.

11766இல் வாதிகள் மற்றும் 1ஆம் பிரதிவாதியின் மருமகன்கள் ஆகியோர் தாய்வழி முதுசொம் சொத்தாகிய பெரிய வேலி நெல் வயலினை விற்பனை செய்வதிலிருந்து தள்ளி வைத்தனர். 1ஆம் மற்றும் 2ஆம் பிரதிவாதியின் தாய்வழி முதுசொம் சொத்தானது முக்குவர்களின் வழக்கப்படி அதில் கூறப்பட்டுள்ளதுபோல் சகோதரியின் குழந்தைகளுக்கு சென்றுவிடும். நிலத்தில் சாகுபடி செய்ததால் அல்லது பங்கீடு செய்ததால் ஏற்பட்ட கடனைத்தவிர பிற காரணங்களுக்காக ஆக்கிரமிப்பாளர்கள் விற்பனை செய்ய முடியாது.

வாதியின் கூற்றினை மாவட்ட நீதிபதி நிராகரித்தார். வாதியின் கூற்று சரியானது என்று ஒப்புக்கொள்வது, அதாவது 1ஆம் பிரதிவாதியினுடைய மாமாவின் மரணத்திற்குப் பிறகு நிலம் அல்லது அதன் சில பகுதிகள் வாதிக்கு சென்றாலும், அவருடைய மாமாவின் வாழ்நாளில் அவரால் ஒரு பகுதியைக்கூட பராமரிக்க முடியவில்லை.

இந்தத் தீர்ப்பினை உச்சநீதிமன்றம் ஒதுக்கிவைத்துவிட்டு மீண்டும் விசாரணைக்காக வழக்கினை திருப்பி அனுப்புகிறது. "வழக்கச் சட்டப்படி வாழ்வதற்கான ஆர்வம் மட்டுமே 1ஆம் பிரதிவாதிக்கு சொத்தில் இருந்துவந்துள்ளது. அந்த நிலங்கள் அதன் சாகுபடியால் ஏற்பட்ட கடன்களுக்கு மட்டுமே பொறுப்பாகும். அவருக்கு எதிராக ஒரு வழக்கினை தாக்கல் செய்யக்கூடிய வாரிசுகளிடமிருந்து விலகி நிரந்தரமாக செய்வதுபோல் நிலத்தினை அந்நியப்படுத்த முடியாது."

2வது விசாரணையில், சிறிய தகராறாக நிலத்திற்காக அல்லது அதன் சாகுபடிக்காக கடன் ஏற்பட்டதா என்பது குறித்து மாவட்ட நீதிபதி முடிவு செய்தார். இந்த விடயம் நிருபிக்கப்படுவதை கருத்தில்கொண்டு 1ஆம் பிரதிவாதிக்கு

நிலத்தை விற்பனை செய்ய உரிமையுண்டு என்றுகூறி வாதியின் கோரிக்கையை நிராகரித்தார்.

இந்தத் தீர்ப்பினை 1857 சனவரி 21 அன்று உச்சநீதிமன்றம் உறுதி செய்கிறது.

எண். 12668 தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றாலும் கற்றறிந்த மாவட்ட நீதியரசரால் 13341 மற்றும் 13452 ஆகியவற்றில் கண்டறியப்பட்ட விசயங்களை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளன. அவர்கள், அந்த அறிவிப்புக்குத் தகுதியானவர்கள். இவ்வாறாக,

"முக்குவரின் வழக்க சட்டத்தின்படி பிரதிவாதிகள் எந்த சாதியினராக இருந்தாலும், அத்தகைய நிலம் (முதுசொம் சொத்து என்று பொருள்) சாகுபடிக் கடனுக்காகவோ அல்லது பங்கீடாகவோ விற்பனை செய்ய முடியாது என்பது வாதிகளால் ஒப்புக்கொள்ளப்படுகிறது." முக்குவர் சட்டம் மோசமானதாக இருக்கலாம். கணக்கிடப்படும்போது பொறியில் சிக்கியதாக இருக்கலாம். ஆனால், அதன் இருப்பு அனுமதிக்கப்பட்டுள்ளதால் நீதிமன்றம் அதனை புறக்கணிக்க முடியாது.

எண். 13341. இந்த வழக்கில், தாய்வழி முதுசொம் சொத்து சகோதரிகளின் குழந்தைகளுக்கு சென்றாலும் அக்குழந்தைகளைத் தவிர்ப்பதற்கு முக்குவர்களின் வழக்கம் ஆக்கிரமிப்பாளர்களை அனுமதித்ததாகவே தெரிகிறது. வேலப்போடிக்கு முத்தம்மா மற்றும் பத்தநாச்சி ஆகிய இரு சகோதரிகள் இருந்ததால் அந்த நிலமானது முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. வேலப்போடியின் மரணத்தின்போது இரு சம பங்காகப் பிரிக்கப்பட்டு, அவருடைய குழந்தைகள் முத்தம்மா மற்றும் பத்தநாச்சிக்கு வழங்கப்படும் என மாவட்ட நீதிபதி முடிவு செய்தார்.

தீர்ப்பு, 1862 நவம்பர் 5 அன்று, உறுதி செய்யப்பட்டது.

எண். 13452இல், வாதியின் வழக்கறிஞரின் வாதத்திற்கு ஆதரவாக எதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. கயிலாயர் காந்தன் (2வது விசாரணை, பக்கம் 3இல்) என்கிற ஒருவரின் சாட்சியத்தில் பின்வருமாறு நான் காண்கிறேன். தாய்வழி முதுசொம் ஆகிய இந்த தோட்டத்தில் (இந்த வழக்கில், சர்ச்சைக்குரிய தோட்டம் என்று பொருள்): பண்டாரப் பிள்ளைகளின் கட்சியினர்: பண்டாரப் பிள்ளைகளுக்கு சொந்தமான நிலத்தினை விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாது. இது, பெண் வாரிசுதாரர் வரிசையில் வரக்கூடியது. அதில், ஆண்களுக்கு ஆதரவான செயல்பாடுகள் இருக்கலாமே தவிர அது எப்பொழுதும் பெண் வாரிசுகளிடமே போய்சேரும். இந்த ஆதாரத்தின் அடிப்படையில் 1863 அக்டோபர் 27ஆம் தேதி உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியது:

“இரண்டாவது விசாரணையின்போது ஒரு சாட்சியத்தின் ஆதாரமுள்ள எதிர்வாதம் யாதெனில், ‘சர்ச்சைக்குரிய நிலமானது தாய்வழி முதுசொம் சொத்து என்றாலும், கட்சிகள் பண்டாரப் பிள்ளைகள் என்றாலும், பண்டாரப் பிள்ளைகளின் சாதிக்குரிய நிலமாக இருந்தாலும், முதுசொம் சொத்தை விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாது. இது பெண் சந்ததி வரிசையில் வருவதாகும். இது அப்படியானால் 1837ஆம் ஆண்டு பத்திரம் செல்லுபடியாகாது என்பதுடன் 1ஆம் பிரதிவாதி, பெண் சந்ததி வரிசையில் பிரதிநிதியாக உரிமைப் பெறுவார்’. ஆனால், அத்தகைய எந்தவொரு உடைமையுரிமையை சட்டப் புத்தகங்கள் வாயிலாக உச்சநீதிமன்றம் அங்கீகரிக்க முடியாது. இந்த உடைமையுரிமைக்கான வழக்கம் மட்டக்களப்புக்கு அசாதரணமாக இருந்தால் அது சட்டப்பூர்வமாக நிருபிக்கப்பட வேண்டும்”. எனவே, இந்த ஆதாரங்களின்

அடிப்படையில் எந்த சட்ட ஆர்வமும் அமையவில்லை. பண்டாரப் பிள்ளையின் வழக்கங்கள் முக்குவர்களின் வழக்கங்களுடன் மிகவும் ஒத்தவையாக உள்ளன. இந்த கடைசி வழக்கில், முந்தைய வழக்குகளிலுள்ள முக்குவர் வழக்கச் சட்டம் குறித்த மேற்கோள்கள் எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை. அந்த தீர்ப்புகள் நீதிமன்றம் முன்பாக வைக்கப்பட்டு பண்டாரப் பிள்ளைகளுடன் முக்குவர்களின் வழக்கங்கள் ஒத்ததாக இருந்ததற்கான சான்றுகள் காட்டப்பட்டிருந்தால் முடிவுகள் சற்று வித்தியாசமாகவே அமைந்திருக்கும். பொது இயல்புடைய வழக்கங்கள், தீர்ப்புகள் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படும். கட்சிகள், இரண்டு வழக்குகளிலும் ஒரேமாதிரியாக இருந்திருந்தால் முந்தைய தீர்ப்புகளால் அவர்கள் வரையறை படுத்தப்பட்டிருப்பார்கள். இரண்டாவது வழக்கில், வழக்குத் தொடுத்தவர்கள் முதல் கட்சிகளுக்கு அந்நியர்களாக இருந்ததால் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றாலும் முடிவாக இருக்கவில்லை.

இந்த முடிவுகளின் வலிமை முக்குவர்களிடையே தாய்வழி முதுசொம் சொத்தினை பெண் வரிசையில் மகள்களுக்கு அல்ல, சகோதரிகளின் குழந்தைகளுக்கும் மருமகன்களுக்கும், அவர்களின் சகோதரிகள் சொத்தினை அவர்களின் வாழ்நாளில் மூத்தவர் நிர்வகிக்கவும், கடைசியாக, மரித்தவர்களில் வாழ்பவரின் சகோதரியின் குழந்தைகளுக்கு சொத்து சென்றுசேரும்.

இருப்பினும், மருமகன் வெறுமனே வாழ்க்கைக்கான ஒரு வேலைக்காரன் மட்டுமே ஆகும். நிலத்தைப் பயிரிடுவதைத் தவிர அல்லது பதின் வரியை செலுத்துவதைத் தவிர, தனது சொந்த தோட்டத்திற்கு அப்பால் எந்தவொரு ஆர்வத்தையும் அவர் உருவாக்கிவிட முடியாது. இதனால், ஒரு வருட

குத்தகைக்கு விடப்பட்டால் அது அவரது மரணத்தின்மீது முடிவடையும்.

இவ்வாறாக இந்த வழக்கில், முக்குவர்களின் வழக்க சட்டத்தின்படி, சின்ன வன்னியன் வேலியின் 10 அவனங்கள் ஆயுள் குத்தகைக்காரராக இருந்த கண்ணப்பணிக்கிப் போடியின் தாய்வழி முதுசொம் சொத்து என ஒத்துக்கொண்டார். அவரால், அவரது சகோதரர் போடியார் முன்னறிவிக்கப்பட்டிருந்தார். அவரது இறப்புக்குப்பின், அவரது சகோதரிகளான திரயம்மா, கண்ணம்மா மற்றும் முத்தம்மா ஆகியோரின் பிள்ளைகளுக்கு அல்லது அவர்கள் முன்னறிவித்திருந்தால் அவர்களது வாரிசுகளுக்கு சென்றுசேரும். நிலத்தில் ஏதாவது வில்லங்கம் அல்லது அந்நியப்படுத்துதல் இருந்தால் கண்ணப்பணிக்கிப்போடி மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்கான சேமிப்பு என்பது அவரது வாழ்க்கையோடு முடிவடையும். ஆகவே, ஒத்திப் பத்திரம் எஎ–எவை விதி விலக்குக்குள் வருகிறதா என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நிலத்தின் ஒரு வருட காலத்திற்கான குத்தகைக்கான ஒத்திப் பத்திரம் இதுவென நீதிமன்றம் கருதுகிறது. ஒத்திக்கு எடுப்பவர் நில உரிமையாளருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வட்டிக்கு கடனாகக் கொடுப்பார் என்றும், அசல்தொகை முழுமையாக செலுத்தப்படும் வரை குத்தகை தீர்மானிக்கப்படாது என்றும், அதேவேளையில், குறிப்பிட்ட விதிவிலக்குக்குள் ஒத்திப் பத்திரம் எஎஎ வரவில்லை என்றால் கண்ணப்பணிக்கிப்போடியின் மரணத்தோடு முடிவடைந்துவிடும்.

ஒத்தி, விதிவிலக்குக்குள் வருவதாக நான் நினைக்கிறேன். அவ்வாறு ஒப்புக் கொண்டாலும் சிறிய சந்தேகம் எழுகிறது. ஏனெனில், 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் ஒரு ஒத்திப்

பத்திரத்தை (ஒத்தி எ பார்க்கவும்) வழங்குவதற்காக வாதிகளுக்கு அளித்தக் காரணம், “கல்லருக்கு அருகில் அமைந்துள்ள சின்ன வன்னியன் வேலி என்று அழைக்கப்படும் நிலத்தின் பங்கினை எங்கள் தத்தா கண்ணப்பணிக்கிப்போடி ஒத்திக்கு விட்டிருந்தார். அதற்குரிய கடனை செலுத்தாமல் சென்றுவிட்டதால் கடனை செலுத்தித் தீர்க்க வேண்டும் என்பதும், வாரிசுரிமைப்படி அதில் ஒருவரான பத்தர் அடப்பன் கதிராமர் என்பவருக்கு உடைமை மற்றும் உரிமை மூலம் அது எங்களுக்கு சொந்தமானது” என்பதாகும். தமிழர்கள் சில சமயங்களில் மூத்த மாமாக்களை தாத்தா என்றும் அழைப்பார்கள் என்பதனை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அடப்பன் கதிராமர் என்பவர்தான் முதல் பிரதிவாதி. இந்த நிலம் கடனுக்காக வாங்கப்பட்டது என்பதற்கு எங்களிடம் மிகுந்த மதிப்புமிக்க ஒப்புதல் ஒன்று உள்ளது என்று நீதிமன்றம் கருதுகிறது. இல்லையெனில் 2ஆம் மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் அதனைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்திருக்க மாட்டார்கள். கடன், அவர்களின் மூத்த மாமாவின் தனிப்பட்ட ஒன்றாக இருந்திருந்தால் அவர்கள் அதனை நிராகரித்திருப்பார்கள் என்றும் நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், இந்த ஆவண சான்றுகளுக்குக் கூடுதலாக 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் கடனை மாற்றியமைக்க விரும்புவதாக வாய்மொழி சாட்சியத்தை அவர்கள் அளித்துள்ளனர். ஆனால், 1ஆம் பிரதிவாதி பணத்தை ஏற்கமாட்டேன் என்று கூறிவிட்டார். பணத்தை ஒப்பந்தம் செய்திருந்தாலும்கூட நீதிமன்றம் முன்பாக எந்தவித ஆதாரமும் இல்லை. சாகுபடி ஆரம்பிக்கப்பட்டு நிலம் விதைக்க தயாராக இருந்திருந்தால் அதனை ஏற்க மறுக்கும் உரிமை அவருக்கு இருந்திருக்கும். மேலும், 1ஆம் பிரதிவாதிக்குரிய 1ஆம் சாட்சியாகிய வேலப்போடி சடையாப்போடியின் ஆதாரங்கள் எங்களிடம் இருப்பதால்

கண்ணப்பணிக்கிப்போடியின் மரணத்திற்குப் பிறகு, நிலம் பகிர்ந்து கிடைக்கும் நபர்களில் ஒருவராகிய முத்தம்மாவின் மகன் 1ஆம் பிரதிவாதி, பிரதிவாதியின் ஒத்திப் பத்திரத்திற்கான தொகையை செலுத்தினார். 1ஆம் பிரதிவாதியிடம் வழங்கப்பட்ட ஒத்திப் பத்திரம் முழுமையானதாகவும் செலவுத் தொகையிலிருந்து விடுபடுவதற்கும் உரிமையுண்டு என்பதனை நீதிமன்றம் உறுதி செய்கிறது.

நீதிமன்றம் கருதுவது யாதெனில், கண்ணம்மா மற்றும் முத்தம்மா ஆகியோரின் வாரிசுகள் ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத ஒரு அரைப்பகுதி அல்லது சொத்தின் பங்கில் உரிமையுண்டு. 2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் 1ஆம் பிரதிவாதிக்கு ஒரு பாதியும் மற்றும் சடையப்போடிக்கு இன்னொரு பாதியும் செலுத்த வேண்டும். அதன்மூலம் ஒத்தியை வெளியேற்றும் உரிமையில் அவர்களும் பங்கு பெறுவார்கள்.

2ஆம் மற்றும் 3ஆம் பிரதிவாதிகளிடமிருந்து 30 அவனங்கள் அளவிற்கு நெல் அல்லது அவனத்திற்கு 18 பென்னிகள் வீதம் வழக்கு செலவிற்காக வாதி பெற வேண்டும் என கட்டளையிடப்படுகிறது.

சி. கேய்,

கூடுதல் மாவட்ட நீதிபதி.

ஒன்பதாம் அத்தியாயம்

நாகரிகத்தின் தோற்றம் மற்றும் மனிதனின் ஆதிகால நிலை

“நாகரிக்கத்தின் தோற்றம் மற்றும் ஆதிகால நிலை” குறித்து கட்டுரை எழுதிய சான் லூப்பக் 30.04.1834 அன்று இலண்டனில் பிறந்தார். இவர் வங்கியாளர், தாராளவாத தொழிற்சங்க அரசியல்வாதி மற்றும் இயற்கை ஆர்வலர். இவருடைய தந்தையின் வங்கியில் 22 வயதில் பங்குதாரரானார். நாணயங்கள் மற்றும் நிதி தொடர்பான வேலைகளில் ஆணையராக இருந்தார். இவர் எழுதிய, “இலண்டனின் இனவியல் சமூகத்தின் பரிவர்த்தனைகள்” என்கிற நூலில் இடம்பெற்றுள்ள, “நாகரிக்கத்தின் தோற்றம் மற்றும் ஆதிகால நிலை” (தொகுதி 6, வருடம் 1868, பக்கம் 328–341), வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் (1865) தொல்பொருளியல் பாடநூலாக நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவர், பழைய கற்காலம் மற்றும் புதிய கற்காலம் ஆகிய சொற்களை உருவாக்கினார். 1870 முதல் 1874 வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1871இல் வங்கி விடுமுறைச் சட்டத்தை நிறைவேற்றினார். 1872 முதல் 1880 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகப் பணியாற்றினார். 1880இல், இலண்டன் பல்கலைக்கழகத்திற்காக வேண்டி பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், பண்டைய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் சட்டம் (1882), கடைகளுக்கான நேரச் சட்டம் (1889) ஆகியவற்றை நிறைவேற்றுவதில் பெரும் பங்காற்றினார். 1873இல் “பூச்சிகளின் தோற்றம் மற்றும் உருமாற்றங்கள்”, 1875இல் “பிரிட்டன் காட்டுமலர்கள்”, 1882இல் “எறும்புகள், தேனீக்கள் மற்றும் குளவிகள்”

மற்றும்1888இல் மிருகங்களின் நடத்தைக் குறித்து "விலங்குகளின் புலன்கள், உள்ளுணர்வுகள் மற்றும் நுட்பங்கள்" ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 28.05.1913 அன்று மரணம் அடைந்தார்.

இனி, "நாகரிக்கத்தின் தோற்றம் மற்றும் ஆதிகால நிலை" குறித்து பேராசிரியர் சான் லூரப்பக் எழுதிய கட்டுரை.

மனிதன், ஒன்று அல்லது பல வகையில் வெவ்வேறு கருத்துகளுடன் அருகருகே வாழ்ந்து வருகிறான். முதல் மனிதர்களின் ஆதிகால நிலைகுறித்து அல்லது மதிப்புமிகு முதல் மனிதர்களின் நிலைகுறித்து இரண்டு எதிர்கருத்துக்கள் உள்ளன.

மனிதன் முதலில் வெறும் காட்டுமிராண்டி என்றும், நமது வரலாறு ஒட்டுமொத்தமாக நாகரிகத்தை நோக்கிய ஒரு நிலையான முன்னேற்றமாக இருந்தது என்றும், சில சமயங்களில், பல நூற்றாண்டுகளாக, சில இனங்கள் நிலையான அல்லது பின்னோக்கி சென்றன என்றும் பல எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். மற்ற எழுத்தாளர்கள், மாறுபட்ட பார்வையைக் கொண்டிருப்பதால் முக்கியத்துவம் குறைந்தவர்களாக கருதப்படுகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, மனிதன் ஆரம்பத்திலே இருக்கிறான். நல்லதே, அவன் என்னவாக இருந்திருக்கிறான்? இப்போதைய கலை மற்றும் அறிவியலை அப்போது அறியாதவனாக இருந்திருக்கிறான். ஆனால், மனரீதியான குணங்களில் நம்மைவிட தாழ்ந்தவனல்ல. ஆகவே, அவர்கள் உயர்ந்த மூதாதையர்களின் சீர்குலைந்த சந்ததியர் என்கிற முறையில் காட்டுமிராண்டிகள் என்று கருதப்படுகிறார்கள். இந்தக் கோட்பாட்டை சமீபத்தில் ஆதரித்தவர்களில் ஒருவர் பிரபலமான மறைந்த பேராயர் டப்ளின்.

தற்போதைய ஆய்வறிக்கையில், இந்த முடிவுக்கு முனைவர் வாட்லியை வழிநடத்திய காரணகாரியங்களை அறிய நான் சுருக்கமாக வழிமொழிகிறேன். இன்னும் சுருக்கமாக, சில உண்மைகளை கவனத்தில் கொண்டாலும், அது ஏற்புடையதல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. முனைவர் வாட்லி, பின்வரும் வார்த்தைகளில் அவருடைய கருத்துக்களை விளக்குகிறார்.

"முற்றிலும் காட்டுமிராண்டி நிலையிலிருந்த சமூகம், நாகரிகம் என்று அழைக்கப்படும் எதையோ நோக்கி நகருவதற்கு வெளிப்புற உதவிகள் ஏதுமின்றி எந்தவொரு சமூகமும் இதுவரை எதுவும் நடைமுறைப்படுத்தவில்லை அல்லது ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை என்பதை எந்தவொரு காரணமுமின்றி நாங்கள் நம்புகிறோம்." "மனிதன், காட்டுமிராண்டி நிலையிலிருந்து வெளிப்படவில்லை. எந்தவொரு சமூகத்தின் நாகரிக முன்னேற்றமும், அதன் உள் வழிமுறை வாயிலாக காட்டுமிராண்டித்தனத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கு எப்போதுமே ஒரு நிலையிலிருந்து துவங்கியிருக்க வேண்டும். இவற்றில், ஆண்கள் எப்போதுமே நடைமுறைப்படுத்தினார்கள் அல்லது தங்களை உயர்த்தினார்கள் என்பதாகத் தோன்றவில்லை."

முதலில், ஒருவர் பதில் அளிப்பதன் வாயிலாக அகற்றப்படுத்த வேண்டியதை உணரலாம். இந்தக் கூற்றை ஒட்டுமொத்தமாக மதிப்பிடும் ஐம்பது சம்பவங்களை மேற்கோள் காட்ட முடியும். எங்கள் சொந்தத் தீவின் எல்கைக்கு அப்பால் செல்லாமல், இங்கிலாந்தின் வரலாற்றை அத்தகைய அறிக்கைக்கு போதுமான பதிலாகக் கருதலாம். ஆயினும் பேராயர் வாட்லி, அத்தகைய உரையாடலை முன்கூட்டியே பார்த்திராத ஓர் விவாதக்காரர். அவர் கூறியதாவது, "பண்டைய செர்மானியர்கள், சோளத்தைப் பயிரிட்டார்கள் என்றாலும் அவர்களின் விவசாயம், அநேகமாக

முரட்டுத்தனம் உடையதாக இருந்தது. ஏராளமான கால்நடைகளை வைத்திருந்தார்கள் என்றாலும் மிருகத்தனமான உழைப்பைப் பயன்படுத்தினார்கள். அவர்களுடைய போரில் குதிரைப் படைகளைப் பயன்படுத்தினார்கள். இதனை மரியாதை மிகுந்த காட்டுமிராண்டிச் செயலாகக் கருத முடியாது அல்லது அவர்கள் அவ்வாறு அழைக்கப்பட்டால் (ஒரு வார்த்தையைப் பற்றி தகராறு செய்வது மதிப்பிற்குரியது அல்ல), அந்த அர்த்தத்தில் ஆண்கள் முன்னேறக்கூடும் என்பதனை ஒப்புக்கொள்கிறேன். உண்மையில், காட்டுமிராண்டி செயலிலிருந்து அவர்களின் சொந்த முயற்சியால் நாகரிக உலகிற்கு முன்னேறியிருக்கிறார்கள். "காட்டுமிராண்டி" என்கிற இந்த வார்த்தையை மிகக் குறைவான மனித இனமே எல்கையாகக் கொண்டுள்ளது. எந்தவித சந்தேகமுமின்றி முனைவர் வாட்லியின் கோட்பாட்டை இன்னும் சிறப்பானதாக ஆக்குகிறது. அதற்கு எதிராக, உறுதியான ஆதாரங்களை முன்வைப்பதில் சிரமம் அதிகரிக்கின்றன. பேராயருக்கு, உண்மையில், எதிரிகளின் கோட்பாட்டை எதிர்த்துத் தேவையான ஆதாரங்களை தயாரிப்பது என்பது எளிதானது என்றாலும், அவருடைய வாதம் முழுவதிலும் அவரையே வெளிப்படுத்துகிறார். காட்டுமிராண்டி செயல்களைக்கொண்ட எந்தவொரு இனமும் தாமாகவே நாகரிக உலகிற்கு உயர்ந்ததாகக் கருத முடியாது. வட அமெரிக்க இந்தியர்களில் ஒரு பழங்குடியினராகிய மேந்தன்களை அவர் நடத்திய விதம் இந்த கருதுகோளை திறம்பட அப்புறப்படுத்துகிறது. இந்த துர்ப்பாக்கியமான மக்களை சூழ்ந்திருப்பவர்களைவிட அவர்கள் அதிக நாகரிகமுள்ளவர்கள் என்று விவரிக்கப் படுகிறார்கள். எந்த அந்நியர்களும் எங்களைவிட முன்னேறியதில்லை என்பதற்கு வெளியுலக உதவி எதுவுமில்லாமல் தங்களை நாகரிகப்படுத்திக்கொண்ட

காட்டுமிராண்டிகளின் ஓர் உதாரணத்தை அவர்கள் அளித்தார்கள். இதற்கு பேராயர் வாட்லி பதில் அளிக்கையில் எழுப்பிய கேள்விகள் என்னவென்றால்:–

முதலாவதாக, இந்த மேந்தன்கள், அதே இனத்தைச் சார்ந்த அண்டை நாட்டுக்காரர்கள் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

இரண்டாவதாக, அவர்கள் அசல் நிலையில் இல்லை என்பதையும், அதிலிருந்து மற்ற பழங்குடியினர் கீழே விழுந்தார்கள் என்பதையும் எப்படி நாம் அறிய முடியும்?

மூன்றாவதாக மற்றும் கடைசியாக, மேந்தன்கள் காட்டுமிராண்டி செயலிலிருந்து வெளிவந்ததாகக் கருதினால், அவர்களிடையே வரும் சில அந்நியர்களின் உதவி மூலம் அது நடந்திருக்காது என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? அதுபோல், ஒருவேளை கொலம்பசின் நீண்ட நாட்களுக்கு முன்பாக மேங்கோ–கேப்பக்கினிலுள்ள பெரு போன்ற நாகரிக நாடுகள்.

எவ்வாறாயினும், ஒருகணம் மற்றும் வாதத்தின் பொருட்டு, மேந்தன்கள் அல்லது வேறு எந்தவொரு இனமும் முதலில் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள். பின்பு அவர்களை நாகரிகப்படுத்திக் கொண்டார்கள் என்றால், அது இன்னும் வெளிப்படையாகவே இருந்திருக்கும். இயற்கையான தன்மையைலிருந்து முனைவர் வாட்லி கோருகிற சான்றுகளைக் கொண்டுவர இயலாது. எந்தவித சந்தேகமுமின்றி, “நாங்கள் உறுதியாக நம்புவது என்னவென்றால், பழங்குடியினராகிய காட்டுமிராண்டிகள் நாகரிக மக்களின் உதவியும் அறிவுறுத்தலும் இல்லாமல் ஒரு நாகரிக அரசாக உயர்ந்ததற்கான, ஒழுங்காக வடிவமைக்கப் பட்டதற்கான எந்தவொரு பதிவு செய்யப்பட்ட நிகழ்வையும் நாங்கள் காணவில்லை என்று அவர் நம்பிக்கையுடன்

உறுதிபடுத்தக்கூடும்." காட்டுமிராண்டிகள், ஒழுங்கினை அறியாதவர்கள், எழுத்துகளை அறியாதவர்கள் என்கிற விதிமுறையிலிருந்து தொடங்கி, எந்தவொரு நாகரிக உதாரணத்தையும் அவர்கள் முன்பாக வைக்கக்கூடாது என்கிற நிபந்தனையை வைத்தோம் என்றால், அத்தகைய பதிவிற்கான இருப்பு எதுவும் சாத்தியமில்லாதது. அதன் இருப்பு அதன் மதிப்பை அழிக்கும். மற்றொரு பத்தியில் பேராயர் வாட்லி கூறுகிறார், மனிதன் பொதுவாக அல்லது சில குறிப்பிட்ட இனம் சுயநாகரிகத்தின் திறனைக் கொண்டிருந்தால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய நிகழ்வின் சில பதிவுகள் அல்லது வழக்கங்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதும் எதிர்பார்க்கக்கூடும். "இதிலிருந்து இதுவரை, இதுபோன்ற எந்தவொரு பதிவின் இருப்பும் கருதுகோளின்படி சாத்தியமற்றது. வழக்கங்கள் குறுகிய காலத்திற்குரியவை மற்றும் நம்பத்தகாதவை." சுயநிர்ணயத் திறன்கொண்ட ஒரு இனத்தின் உண்மையான நிகழ்வை நிருபிக்கக்கூடிய ஒரு உண்மையான நினைவுச் சின்னத்தை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை என்பதனை ஒப்புக்கொள்கிறேன். அதை உருவாக்கிய மக்கள் முதலில் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள் என்பதனை நிருபிப்பதற்கு எந்தவகையான நினைவுச் சின்னத்தை பேராயர் ஏற்றுக்கொள்வார்? அந்நிய செல்வாக்கால், ஒரு உயர்ந்த இனத்தால் ஒருபோதும் அவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ளவில்லையா? வெளிப்படையாக, மேற்கண்ட பத்தியிலுள்ள "நினைவுச் சின்னம்" என்ற வார்த்தை, வாக்கியத்தைச் சுற்றிவருவதற்கு மட்டுமே பயன்படும். ஆனால் பேராயர் வாட்லி கூறுகிறார்: "உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள காட்டுமிராண்டி பழங்குடியினரின் கணக்குகள் எங்களிடம் உள்ளன. அவற்றை அவ்வப்போது கணிசமான இடைவெளியில் பார்வையிட்டவர்கள் நாகரிக மக்களுடன் நிலையானதொரு உறவை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றாலும் தொடர்ந்து

காணக்கூடிய அளவிற்கு, கண்டறிய முடியும் அளவிற்கு பண்படுத்தப்படாத நிலை தொடர்வதாகவே தோன்றுகிறது.” நியூசிலாந்தினரின் சம்பவம் ஒன்றினை அவர் இணைத்துக் கொள்கிறார். “1642ஆம் ஆண்டில் டாசுமேன் நாட்டினை கண்டுபிடித்தபோது மிகவும் முன்னேறிய நிலையில் இருந்ததாகத் தெரிந்தது. 127 ஆண்டுகளுக்குப் பிறகு குக் அதனைப் பார்வையிட்டபோதும் அவ்வாறே இருந்தது.”

மனித இன வரலாற்றில் ஒரு நூற்றாண்டு எவ்வளவு குறுகிய காலம் என்பதை நாம் மறந்துவிடும் அளவிற்கு ஒரு முன்னேற்றத்தை விரைவாகப் பார்ப்பதற்கு நாங்கள் பழக்கமாகிவிட்டோம். சாதாரணமாக, காலவரிசையை கணக்கில் கொண்டால்கூட ஆறாயிரம் ஆண்டு கொடுக்கப்பட்ட நிலையில், காட்டுமிராண்டி நிலையிலிருந்து முற்றிலுமாக ஆத்திரேலியரின் நிலைக்கு முன்னேறியிருந்தால், இன்னும் ஒரு நூற்றாண்டில் அதிக மாற்றத்தை நாம் எதிர்பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. பல மீன்பிடிக் கிராமங்கள், நமது சொந்த கடற்கரையில்கூட 127 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போலவே கிட்டத்தட்ட அதேநிலையில் இருந்து வருகின்றன. காட்டுமிராண்டி அரசைப் பற்றிய வாட்லியின் சொந்த கூற்றுப்படி நியூசிலாந்தினர் நிச்சயமாக விலக்கு அளிக்கப்படுவார்கள் என நான் நியாயமாகவே பதிலளிக்கிறேன். அவர்கள் நிலத்தில் பயிரிட்டார்கள், அவர்கள் வீட்டு விலங்கை வைத்திருந்தார்கள், பரந்துவிரிந்த கோட்டைகளை எழுப்பினார்கள் மற்றும் சிறந்த படகுகளை உருவாக்கினார்கள் என்றால் நிச்சயமாக அவர்கள் காட்டுமிராண்டி நிலையில் இல்லை. அல்லது டாசுமேனைப்போலவே ஒரு குறுகிய வருகை வாயிலாக மக்களின் உண்மையான நிலைகுறித்து கொஞ்சம் உட்பார்வையைத் தெரிவிக்க இயலும் என நான் வாதாடலாம். எவ்வாறாயினும் பேராயர் வாட்லியின் அறிக்கையை கேள்விக்கு உட்படுத்துவதன் வாயிலாக

குறைவான கருத்துகளையே வெளியேற்ற இயலும். ஏனெனில், பல இனங்கள் இப்பொழுது நடைமுறையில் நிலையானவையாக இருக்கின்றன. உண்மையில் இது பொல்லாங்கு கோட்பாட்டிற்கு எதிரான வாதம்; ஆனால் முன்னேற்றத்திற்கு எதிரானது அல்ல. நாகரிக இனங்கள் என நாங்கள் சொல்வது காட்டுமிராண்டி நிலையிலிருந்து எழுந்த இனங்களின் சந்ததியினர். எனினும், காட்டுமிராண்டிகள் நாகரிக இனங்களின் சந்ததியினர். அவர்கள் தற்போதையை நிலையில் மூழ்கிக்கிடக்கிறார்கள் என எங்கள் எதிர்தரப்பினரிடம் வாதிடுகிறேன். ஆனால், நாகரிக இனங்கள் இன்னும் உயர்ந்து கொண்டிருக்கின்றன என்று பேராயர் வாட்லி ஒப்புக்கொள்கிறார். அதேநேரத்தில், காட்டுமிராண்டிகள் இப்பொழுது நிலையானவர்கள். விந்தையாக, இது மிகவும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தை ஆதரிக்கும் வாதமாகத் தெரிகிறது. இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு என்பது ஒரு இனத்தின் முன்னேற்றத்தால் அல்ல; எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஒரு முன்னேற்றம். ஆனால், இந்த பொல்லாங்கு கோட்பாட்டில், அவரே அவரை நிலைத்தவராகப் பார்க்கிறார். மாயை இயற்கையானது. ஓடிக் கொண்டிருக்கும் இரயிலில் இருந்து வெளியே பார்க்கும்போது ஒவ்வொருவரும் சில நேரங்களில் அனுபவித்திருக்கக்கூடும். காடுகளும் வயல்களும் நம்மிடமிருந்து பறந்து கொண்டிருப்பதாகத் தோன்றும். உண்மையில் நாம் நகர்கிறோம். அதேவேளையில் அவை நிலையானவை என்பதனை நாம் அறிவோம்.

இதில் விவாதிக்கப்படுவது என்னவென்றால், “மனிதன் முதலில் படைக்கப்பட்டபோது, முரட்டுத்தனத்தோடு விடப்பட்டான். அந்த இயற்கை சக்திகளின் உதவிபெறாத உடல் மற்றும் மனம் ஆகியவை ஐரோப்பியா மற்றும் நியூ காலந்துக்கு பொதுவானவை. ஐரோப்பியா, இப்பொழுது நியூகாலந்து போன்று இல்லையே, எப்படி?” அத்தகைய

வாதத்தைக் குறித்து, உண்மையில் நான் ஆச்சரியப்படுகிறேன். முதலாவதாக ஆத்திரேலியாவில், சாதகமாக வளர்க்கக்கூடிய தானியங்களோ அல்லது எந்தவித கால்நடைகளோ இருக்கவில்லை. இரண்டாவதாக, ஒரே குடும்பத்திலுள்ள குழந்தைகளைக் கொண்ட அதே பெற்றோரிடத்தில் மிகவும் எதிர்மனப்பான்மையை நாங்கள் காண்கிறோம். அதே தேசத்தில் உயர்ந்த குணமுள்ள குடும்பங்கள் உள்ளன. மேலும், இதர உறுப்பினர் ஒவ்வொருவரும் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ குற்றவாளிகள். இந்த விசயத்தில், கடைசியாக இருந்ததுபோல் பேராயரின் வாதமும் நல்லதாக இல்லையெனில், அது அவருடைய சொந்த பார்வைக்கு எதிரானதே. இது, பூமராங் ஆத்திரேலியரைப் போன்று, அதன் உரிமையாளரை நினைவுபடுத்துகிறது. பேராயர் மனித இனத்தின் ஒற்றுமையை நம்புகிறார். மேலும், மனிதன் முதலில் நாகரிகமானவன் (ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில்) என்று குறிப்பிடுகிறார். "அது எப்படி வருகிறது?" நான் அவரிடம், "நியூ காலந்தினர் இப்பொழுது ஐரோப்பியர் இருக்கிற நிலையில் இல்லையே?" எனக் கேட்கலாம். மற்றொரு பத்தியில், புதிய செர்சி கல்லூரியின் இயக்குநர் சுமித்தின் ஒரு பத்தியைப் பேராயர் வாட்லி மேற்கோள் காட்டி கூறிவதாவது: மனிதன், "கீழை நாடுகளுக்கு வெளியே இயற்கையில் அநாதையாக, நிர்வாணமாக, உதவியற்றவனாக, காட்டுமிராண்டியாக காட்டில் உலாவிக் கொண்டிருந்தபோது, அவன் மிக அவசர விருப்பங்களை எப்படி பெறுவது என்பதனைக் கற்றுக் கொள்வதற்கு முன்பே அவன் அழிந்திருக்க வேண்டும். அவன் படைக்கப்பட்டான் அல்லது இருக்கத் துவங்கினான் என்று வைத்துக் கொண்டாலும், அவனது உடல் சக்திகளின் முழுப் பலத்தில், அவன் அவனுடைய கை கால்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அல்லது அவற்றைப் பயன்படுத்தி அவன் எப்படி மரத்தில் ஏற வேண்டும் என்பதனை அறிவதற்கு எவ்வளவு காலம் வேண்டும் என்பது அவனுக்குத்

தெரியாதே.” அது எவ்வாறாயினும், கொரில்லா அல்லது சிம்பன்சி (மனிதக் குரங்குகள்) குறித்து சரியாக சொல்ல இயலும். அவை நிச்சயமாக நாகரிக மூதாதையர்களின் கீழ்நிலை சந்ததியினர் அல்ல.

பேராயர் வாட்லி முன்வைத்த வாதங்களை மிகச் சுருக்கமாகக் கருத்தில்கொண்டு, அவர் முன்வைத்துள்ள கருத்துக்கு எதிராக, சில உண்மைகளை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, காட்டுமிராண்டிகள் மத்தியில் முன்னேற்றத்தின் அறிகுறிகள் உள்ளன என்பதனைக் காண்பிக்க முயலுகிறேன்.

இரண்டாவதாக, மிகவும் நாகரிகம் வாய்ந்த நாடுகளில், அசல் காட்டுமிராண்டிகளின் தடயங்கள் உள்ளன.

ஆரம்பத்திலிருந்தே ஆண்கள் மேய்ப்பர்கள் மற்றும் விவசாயிகள் என பேராயர் கருதுகிறார். ஆத்திரேலியர்கள், வடக்கு மற்றும் தென் அமெரிக்கர்கள் மற்றும் இன்னும் கூடுதலான அல்லது குறைவான காட்டுமிராண்டி இனங்கள். நம் வீட்டு விலங்குகளுக்கு பொருத்தமான நாட்டில் வாழ்வதுடன், தானியங்களை வளர்ப்பது குறித்து ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ இரண்டையும் அறியாத நிலையில் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஒரு காலத்தில் விவசாயிகளாகவும், மேய்ப்பர்களாகவும் இருந்த ஆண்களின் எந்தவொரு இனமும் அவ்வளவு எளிதான, சாதகமான முயற்சிகளை முற்றிலுமாகக் கைவிட்டுவிட்டது என்பது சாத்தியமற்றது. முன்னறிவிக்கிற மிகக் குறைந்த காலவரிசையை நாங்கள் ஏற்றுக்கொண்டால், அத்தகைய மாற்றத்தின் அனைத்துப் பாரம்பரியங்களையும் அவன் இழப்பான் என்று நான் நினைக்கிறேன். மேலும், தற்போதைய காலனித்துவவாதிகள் சொல்வது, அமெரிக்கர்கள் அல்லது

ஆத்திரேலியர்கள் இத்தகைய காட்டுமிராண்டி நிலைக்கு வந்தாலும்கூட இறக்குமதி செய்யப்பட்டவர்களிடமிருந்து வந்த கால்நடைகளாகிய மந்தைகளை அந்த நாடுகளில் இன்னும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். அவை அழிக்கப்பட்டாலும்கூட அதன் எச்சங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அதேவேளையில், எருதுகளின் அல்லது வீட்டு ஆடுகளின் ஒரு எலும்புகூட ஆத்திரேலியாவிலோ அல்லது அமெரிக்காவிலோ கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நாங்கள் அறிவோம். அதேவாதம் குதிரைக்கும் பொருந்தும். தென் அமெரிக்காவின் முதல் குதிரை உள்நாட்டு இனத்தைச் சார்ந்தது அல்ல. அதுபோல் மீண்டும் தாவரங்கள் விசயத்தில். எங்களால் பயிரிடப்பட்ட தானியங்கள் எதுவும் ஒரு ஒழுங்கற்றப் பகுதிகளிலும் உயிர்வாழும் என்பது எங்களுக்குத் தெரியாது. அதனை மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் அவர்கள் பயிர் செய்வார்கள் என்பது சாத்தியமானதே. மனிதனின் பயணத்தோடு பயணிக்கும் இன்னும் பல தாவரங்கள் உள்ளன. வெள்ளை மனிதனின் பயணத்தால் தென் அமெரிக்கா, ஆத்திரேலியா மற்றும் நியூசிலாந்த் தாவரங்கள், அவர்களின் இனவியல்போலவே கிட்டத்தட்ட ஆழமாகவே மாற்றியமைப்பட்டுவிட்டன. மாவோரிகளிடம் சோகமான பழமொழி ஒன்று உண்டு. பூர்வீக எலியை வெள்ளை மனித எலி அழிப்பதால் வெள்ளை மனிதனுக்கு முன்பாக மாவோரிகள் மறைந்துவிடுவர்; மாவோரி ஈயை ஐரோப்பிய ஈ விரட்டுகின்றன மற்றும் தீவனப் புல், பன்னம் தாவரத்தை கொல்கின்றன.

இந்த பொருளில் முனைவர் கூக்கரின் சுவையான கட்டுரை ஒன்று உள்ளது. அதன் அதிகாரத்தைக் குறித்து யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். அது, 1864ஆம் ஆண்டிற்கான இயற்கை வரலாற்று மதிப்பாய்வில் உள்ளது. “ஆத்திரேலியா மற்றும் நியூசிலாந்தில்”, அவர் கூறுவதாவது, “உதாரணமாக, ஆங்கிலக் களைகளின் திருட்டுத்தனமான அலைகளைவிட

ஆங்கிலக் குடியேற்றத்தின் இரயில் இரைச்சல் இன்னும் நிச்சயமாக அதன் வேலையைச் செய்யவில்லை. ஆண்டுதோறும் அதிகரித்துவரும் இனங்கள், உட்கிளைகள், தனிநபர்கள் ஆகியவை கழிவுகள், பயிரிடப்பட்டவை மற்றும் விளைநிலங்கள் ஆகியவற்றின் மேற்பரப்பில் ஊர்ந்து செல்கின்றன." ஏற்கத்தகுந்த இந்த பொருளில், மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகிற நியூசிலாந்த் தாவரவியலாளரும் தாளாளருமான டபிளியு.டி. லோக் டிராவர் கேண்டர்பரியிலிருந்து எழுதியதாவது: "இந்த நாட்டில், ஐரோப்பிய மற்றும் வெளிநாட்டுத் தாவரங்கள் விரைவாகப் பரவுவதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். சமவெளிகள் வழியாக சாலையின் பிரதான பாதைகளின் ஓரங்களிலும் பசுவுக்கான புற்கள் என்று அழைக்கப்படும் நெருஞ்சி மிகவும் ஆடம்பரமாக வளர்கிறது. வேர்கள் சில நேரம் இரண்டு அடி ஆழத்தில் இருக்கும். அதன் விட்டத்தை நான்கு முதல் ஐந்து அடி வரை பரப்பும். ஒவ்வொரு நதி படுகையில் அமைந்துள்ள கப்பல்துறையில் (அகன்ற இலைத் தாவரம் அல்லது மிருதுவான இலைத் தாவரம்) காணப்படும். வெறும் நீரோடைகளாக மாறும்வரை, இவை மலை நதிகளின் பள்ளத்தாக்கில் விரிவடைகிறது. இந்த விதைச்செடி, நாடு முழுவதும் பரவி கிட்டத்தட்ட ஆறாயிரம் அடி வரை வளர்கிறது. அவர்களை ஒட்டுமொத்தமாக மூச்சுத்திணற அச்சுறுத்தும் அளவிற்கு அச்செடி நதிகளில் அதிகரிக்கிறது." அர்சென்டினா குடியரசிலுள்ள இயந்தை செடி, அதே உண்மையின் மற்றொரு குறிப்பிடத்தக்க உதாரணமாகும். அதன்பேரில் நாங்கள் பாதுகாப்பாகக் கருதுவது என்னவென்றால், ஆத்திரேலியா, நியூசிலாந்த் அல்லது தென் அமெரிக்காவில் உள்ளவர்கள் ஒருபோதும் கால்நடை வளர்ப்பவர்களாக, விவசாய இன மக்களாக இருந்ததில்லை. அந்த நாடுகளிலுள்ள விலங்கினங்களும், தாவரங்களும் கிட்டத்தட்ட தவிர்க்க முடியாத வகையில், அவை

கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலிருந்து மிகவும் வேறுபடுகின்ற வகைக்கு ஆதரமாக இருக்கிறது. உலோகத்தை முற்றிலும் அறியாத காட்டுமிராண்டிகள் வசிக்கும் எந்தவொரு நாடாக இருந்தாலும், எந்தவொரு ஆயுதங்களும் அல்லது உலோகக் கருவிகளும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை ஒரு பொதுவான கருத்தாக நாம் வலியுறுத்தலாம். இன்னும் வலுவான தகவல்கள், மண்பாண்டங்கள் வாயிலாகக் கிடைக்கிறது. மண்பாண்டங்கள் எளிதில் அழிவதில்லை. அது எப்பொழுதும் ஏராளமாகக் கிடைக்கிறது. அது, இரண்டு குணங்களைக் கொண்டது. உடைக்க எளிதானதாகவும், அழிக்க கடினமானதாகவும் இருக்கும். அது, தொல்பொருள் பார்வையை மதிப்புமிக்கதாக்குகிறது. மேலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் புதைகின்றவற்றில் தொடர்புடையது. ஆத்திரேலியா, நியூசிலாந்த் அல்லது பொலினீசியன் தீவுகளில் இதுவரையும் எந்தவொரு மண்பாண்டமும் கண்டுபிடிக்கப் படவில்லை என்பது மிக முக்கியமான உண்மையாகும். மிகவும் எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள ஒரு கலையை, ஆண்களின் எந்தவொரு இனமும் இழப்பதற்கு தயாராக இருப்பதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும், இந்த வாதம் பல கலைகளுக்கும் கருவிகளுக்கும் பொருந்தும். இன்னும் பலர் முன்வைக்கிற இரண்டினை மட்டுமே குறிப்பிடுகிறேன். நூற்புக் கலையும், வில்லின் பயன்பாடும் பல இன காட்டுமிராண்டிகளுக்குத் தெரியவில்லை. ஒருமுறை அது தெரிந்திருந்தால் கைவிடப்படுவதற்கு வாய்ப்பில்லை. இந்த நாட்டில், கட்டிடக்கலை எச்சங்கள் இல்லாதது மற்றொரு வாதம். உண்மையில், இது சாதகமாக இருப்பதாக பேராயர் வாட்லி கூறுகிறார். ஆனால், ஒரு நாட்டில் நினைவுச் சின்னங்கள் இல்லாதது நிச்சயமாக காட்டு மிராண்டித்தனத்தைக் குறிக்கிறது; நாகரிகத்தை அல்ல.

காட்டுமிராண்டிகளின் மனநிலை, பொல்லாங்குக் கோட்பாட்டிற்கு எதிராகவும் வலுவாகவும் பேசுவதாக

எனக்குத் தோன்றுகிறது. கிட்டத்தட்ட உலகளாவிய சாட்சியங்களின்படி கீழ்நிலையுள்ள இன மக்களின் மதங்கள் உள்நாட்டிற்கு உரியவையாக தோன்றுவது மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட உலகளாவிய சாட்சியத்தின்படி, வணிகர்கள், தத்துவவாதிகள், கடற்படை ஆண்கள் மற்றும் மறை பரப்புரையாளர்கள் ஆகியோர் ஒரேமாதிரியாக இருக்கிறார்கள். அதேநேரத்தில், ஒரு மதத்தில் முற்றிலும் ஆதரவற்ற ஆண்களைக்கொண்ட பல இனங்கள் உள்ளன. மேற்படி சம்பவங்களில், உறுதிபடுத்தப்பட்டதைவிட குறைவான எண்ணிக்கையில் அவை உள்ளன. அவற்றில் சில, நல்ல ஆதாரங்களாகவும் உள்ளன. ஒருகாலத்தில் ஒரு மதத்தை வைத்திருந்த எந்தவொரு இனமும் அதனை முற்றிலுமாக இழந்துவிட்டார்கள் என்பது நம்புவதற்குக் கடினமாகவே உள்ளது. மதம், ஆண்களின் நம்பிக்கைகளுக்கும் அச்சங்களுக்கும் வலுவாகவே நிற்கிறது. இது பெரும்பாலும் மனதில் ஆழமாகவே இடம் பிடித்திருக்கிறது. துக்கம் மற்றும் நோய் காலங்களில் மிகவும் ஆறுதலாக இருக்கிறது. எந்தவொரு நாடும், அதனை முற்றிலுமாகக் கைவிடும் என்று என்னால் நினைக்க இயலவில்லை. மேலும், அதன் செல்வாக்கையும் அதிகாரத்தையும் பேணுவதற்காகவே ஆண்களின் இனத்தை அது உருவாக்கம் செய்கிறது. எனவே, இங்கே, இப்போது மதத்தைப் பற்றி அறியாத ஒரு இனத்தை நாங்கள் காண்கிறோம். அது எப்போதுமே அப்படியே இருந்தது என்று என்னால் கருத இயலாது.

சில முன்னேற்றங்கள் நிகழ்ந்ததாகத் தோன்றும் சில நிகழ்வுகளை நான் இங்கே குறிப்பிடுகிறேன். மேக்கில்லிவாரியின் கூற்றுப்படி, ஆத்திரேலியர்களின் எசிங்டன் துறைமுகத்தைப் பின்பற்றுகிற நாட்டு மக்கள் அனைவரும் பட்டை ஓடங்களை மட்டுமே முன்பு வைத்திருந்தனர். மலாயிடமிருந்து அவற்றை அவர்கள் வாங்கியிருந்தார்கள். மற்றவர்களுக்காக இப்போது அவற்றை

முற்றிலுமாக கைவிட்டுவிட்டார்கள். அந்தமான் தீவுகளில் வசிப்பவர்கள் இப்பொழுது தூம்புக்கட்டைகளை அறிமுகப்படுத்துகிறார்கள். பச்சாபியைப் பார்வையிட்ட பர்ச்சல், இரும்பு வேலையை செய்யத் துவங்கியிருப்பதாகக் குறிப்பிடுகிறார். பிரிட்டனின் கூற்றுப்படி, நீக்ரோக்கள் சமீபத்தில் பித்தளை தயாரிக்கக் கற்றுக்கொண்டனர். தாகித்தை கேப்டன் குக் பார்வையிட்டபோது, மிகப்பெரிய மோறை அல்லது அடக்கம் செய்யப்பட வேண்டிய இடம், அப்போதைய ஆளும் அரசிக்காக அமைக்கப்பட்டதாகக் கூறுகிறார். திபெத்தியர்கள், அண்மையில் நரமாமிசம் உண்பதைக் கைவிட்டுவிட்டனர். மேலும், சில உண்மைகள் அவர்களுக்குள்ளே பேசப்படுகின்றன. சில வட அமெரிக்க பழங்குடியினர் மக்காச் சோளத்தைப் பயிரிட்டனர். இப்போது மக்காசோளம் வட அமெரிக்காவிலுள்ள தாவரம். அவ்வகையில், பழங்குடியினரால் முன்கூட்டியே எடுக்கப்பட்டதற்கான தெளிவான சான்றுகள் எங்களிடம் உள்ளன. மீண்டும் பெரு மக்கள் அழைக்கப்படுகின்றனர். ஆண் இனங்களின் பன்முகத்தன்மையை நம்புகிற பெரு மக்கள் ஆரம்பத்திலிருந்தே உள்நாட்டு அழைப்பாளர்களாக இருந்தார்கள் என்பதனை தக்கவைக்க முயற்சி செய்கிறார்கள். ஆயினும் பேராயர் வாட்லி இந்த வரியை எடுத்துக் கொள்ளமாட்டார். அவர் ஏற்றுக் கொள்வது, நிச்சயமாக, பெருவில் குடியேறியவர்களிடம் முதலில் கம்பிளி ஒட்டகம் இருக்கவில்லை. அதுபோல், வேறு எந்த வீட்டு விலங்குகளும், அநேகமாக நாய் இல்லை என்பதனை நான் உறுதியாக ஒப்புக்கொள்கிறேன். பாலினீசியர்களின் பட்டைத்துணி இன்னொரு செய்தியாகும். மற்றொரு வலுவான ஆதாரம் என்னவென்றால், ஆத்திரேலியர்களிடம் உள்ள தாக்கிவிட்டுத் திரும்பும் கைத்தடி என்கிற ஆயுதம் வேறு எந்த இனத்திற்கும் தெரியாது. நாம், அதனை முதன்மையான நாகரிகத்தின் நினைவுச் சின்னமாகப் பார்க்கவோ, ஒரு இனத்துடன்

மட்டுமே தொடர்புடையதாக பார்க்கவோ இப்போது இயலாது. இந்த காரணத்திற்காக, எந்தவகை நாகரிக மனிதர்களிடமிருந்தும் இதனை ஆத்திரேலியர்கள் கற்றுக்கொண்டிருக்க வாய்ப்பில்லை. ஆகையால், இது எனக்குத் தெரிந்ததுபோலவே நாம் விரும்புகிற செய்தி முன்கூட்டியே ஒருபடி தெளிவான சான்றாகும். நீங்கள் விரும்பினால் சிறியது; இன்னும் ஒருபடி மேலாக மக்களால் உருவாக்கப்படுகிறபோது பேராயர் வாட்லி நிச்சயமாக உண்மையான காட்டுமிராண்டிகள் என்பதை ஒப்புக் கொள்வார். பல்வேறு பழங்குடியினர் மத்தியில் முரட்டுத்தனமான எழுத்துகள் காணப்படுகின்றன. படங்கள்–எழுதுதலில் வட அமெரிக்க இந்தியர்களாகிய வம்பர்கள் மற்றும் மத்திய அமெரிக்காவின் குயிப்புகள் ஆகியோர் பூர்வீக வம்சாவளியாக கருதப்படுகிறார்கள். மேற்கு அமெரிக்காவின் வீ நாட்டில் நீக்ரோ முகம்மது டோலு கண்டுபிடித்த கடித அமைப்பைப் பொறுத்தவரை, அந்த யோசனை மறைபரப்புரையாளர்களிடமிருந்து கடன் வாங்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை என்றாலும், அது தனிநபரால் சுயமாக உருவாக்கப்பட்டது. இருப்பினும், மற்ற சந்தர்ப்பங்களில் இதனைப் பராமரிக்க முடியாது என நினைக்கிறேன். மெக்சிகன் விசயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள், பழமையான நாகரிக இனத்திலிருந்து வந்தவர்கள் என்றும், கடிதங்களின் பயன்பாடு மற்றும் பாரம்பரியம் ஆகிய இரண்டையும் படிப்படியாகவும் முழுமையாகவும் இழந்துவிட்டார்கள் என்றும் நாம் கருதிக்கொண்டாலும், என் மனதில், வழிமுறையில், இயற்கையாக நிகழமுடியாத கருதுகோள்:– இன்னும் நாம் அவர்களின் அமைப்பைப் பார்த்தோம் என்றால், படங்கள்–எழுதுதல் அமெரிக்க வம்சாவளியைச் சார்ந்ததாக உள்ளது. கடிதங்களால் எழுதும் முறை எப்போதுமே முற்றிலுமாக அழிந்துபோகலாம் என்றாலும் நான் சந்தேகிக்கிறேன், படம் வரைதல் நிச்சயமாக

அழிந்துபோகாது. இது ஒவ்வொரு கண்ணோட்டத்தைப் பொறுத்தளவில் கீழானதாகும். மெக்சிகோவினர், அவர்களின் நாகரிகத்திற்கு கடமைப்பட்டிருந்தால், அவர்களின் சொந்த படிப்படியான முன்னேற்றத்திற்காக அன்றி, சில ஐரோப்பியப் பயணிகளின் உந்துதலுடன் வானிலை அறிக்கை அல்லது ஈடுபாடுடைய துணிச்சல் போன்றவற்றில் சாகசத்தைத் தொடரலாம். அவர்களின் கடலோரங்களில், எழுத்து முறைமைகளையும், ஏனைய விசயங்களில் செல்வாக்குள்ள தெளிவான சான்றுகளையும் நாம் பார்க்க வேண்டும். அதேவேளையில், அமெரிக்காவின் நாகரிகம் பூர்விகமாக இருந்தது என்பதற்கு எங்களிடம் எந்தவித வரலாற்று ஆவணமும் இல்லை. எனினும், அதன் வரலாற்றுச் சான்றுகள் எங்களிடம் உள்ளன. ஒருவேளை, எந்தவொரு வரலாற்று அறிக்கையையும்விட திருப்திகரமாகவும் இருக்கலாம். அதேவாதம், காட்டுமிராண்டிகளால் எண்களுக்குப் பயன்படுத்தப்படும் பெயர்களிலிருந்தும் பெறப்படலாம். பத்து வரை எண்ணக் கற்றுக்கொண்ட ஒவ்வொரு இனத்திற்கும் கற்றுக்கொள்ளாத அறிவின் ஒரு பகுதி மிகவும் எளிதானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறது என்பதை நான் மிகுந்த சிரமமாகக் கருதுகிறேன். இன்னும் சிலரை நாங்கள் அறிவோம். ஒருவேளை எதுவுமில்லை என்றாலும், அவர்களில் யாரையாவது பேராயர் வாட்லி காட்டுமிராண்டிகள் என்று அழைத்தால், எண்ணிக்கையை துவங்கலாம். ஆத்திரேலிய மொழியில் நான்கைத் தாண்டிய எந்த எண்ணுக்கும் எண்கள் இல்லை. டேம்மர்கள் மற்றும் அபிபோனியர்கள் மூன்றினைத் தாண்டி எதையும் பயன்படுத்துவதில்லை. சில பிரேசிலிய பழங்குடியினர் இரண்டையும் தாண்டி செல்ல முடியாது.

எண்ணுதல் முறை தற்பொழுது அதிகமாக முன்னேறியுள்ள பல சந்தர்ப்பங்களில், அது அதன் சொந்த மற்றும் சமீபத்திய தோற்றத்தைக் கொண்டுள்ளது. நாகரிக நாடுகளில், எண்களின்

வழித்தோன்றல்கள் ரொம்ப காலத்திற்குமுன் தெளிவற்றதாக இருந்த நிலையில், அதன் நேரத்திற்கேற்ப எல்லா வார்த்தைகளிலும், குறிப்பாக அடிக்கடி பயன்பாட்டிலுள்ள மற்றும் அச்சகக் கண்டுபிடிப்புக்கு முன்பாக படிப்படியாக மாற்றம் கண்டுள்ளது. காட்டுமிராண்டி எண்கள், முன்னாள் நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களாக அமைந்திருந்தாலும், பொதுச் சிதைவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டிய பொருள்கள் மற்றும் வழிகள் வாயிலாக அந்த அசல் மொழியில் அதனை கண்டுபிடிப்போம் என்று எதிர்பார்க்க முடியவில்லை. ஆயினும், அத்தகைய சந்தர்ப்பங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனாலும், அவை உண்மையாக இருப்பதாக கருதி, நிச்சயமாக நாம் கண்டுபிடிக்க வேண்டாம். நிச்சயமாக இங்கே இந்த வாதத்திற்கு, இதற்குத் தேவையான அனைத்துவகை வளர்ச்சியையும் அல்லது எல்லா நிகழ்வுகளையும் முன்வைக்க என்னால் முடியாது. ஆனால், ராயல் கல்வி நிறுவனம் முன்பாக வழங்கிய என்னுடைய நண்பர் திரு. டெய்லரின் சுவையான சொற்பொழிவிலிருந்து ஒரு சிறிய பத்தியை மேற்கோள் காட்டுவேன். அதில், சில உண்மைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் தென் அமெரிக்கா மற்றும் மேற்கு அமெரிக்காவின் பல பழங்குடியினரிடையே 5க்கு, "ஒரு முழுக் கை" மற்றும் 6க்கு, "ஒன்று இன்னொரு கைக்கு" 10, "இரு கைகளும்" மற்றும் 11, "ஒரு அடி" 20, "ஒரு இந்தியன்" மற்றும் 21, "ஒன்று இந்தியன் கைக்கு" அல்லது அதற்காக 11, "ஒரு பாதம்" அதற்காக 12, "பாதம் 2" அதற்காக 20, "ஒரு மகன் முடிக்கப்பட்டான்" போன்ற வேறுபாடுகள் காணப்படுகின்றன. டைமண்ட் நிலத்தில் பரிதாபமாக பூர்விக மக்களிடையே ஒரு கையால் கணக்கிடுதல் பெயரளவில், "ஒரு மனிதன்" புகன்னா என அழைக்கப்படுகிறான். படத்தை எங்களிடம் காண்பிப்பதற்காகவும், அவனுடைய காட்டுமிராண்டித் தனமான படத்தைக் காண்பிப்பதற்காகவும், அவனுடைய விரல்களால் எண்ணுகிறான். அவன் சைகைகளை

வார்த்தைகளில் விவரித்தால், அந்த வார்த்தைகள் ஒரு எண்ணாக மாறும். ஒருவேளை அந்த மொழியும் சூலசின் பாண்டு மொழியை அணுகாது. அவனின் விரல்களைக் கொண்டு எண்ணுவதற்கு, அவன் எப்போதும் அவனது இடதுகையின் சிறிய விரலால் தொடங்குகிறான். இதனால் 5யை எட்டும்போது, அவன் அதை "முழுக் கை" என்று அழைக்கிறான். 6ஐ அவன் பொருத்தமான சைகையால் மொழிபெயர்க்கிறான். அதனைத் "தாத்தித்தியூபா" என்று அழைக்கிறான். "கட்டைவிரலை எடுத்துக் கொள்ளுங்கள்" 7, கைவிரல் மூலம் சைகையில் காட்டுகிறான். சுட்டிக்காட்டப்படும் கோம்பா என்ற வினைச்சொல் "சுட்டிக்காட்ட", 7யைக் குறிக்கும் ஒரு எண்ணின் வெளிப்பாடாக அமைகிறது. இங்கே நிச்சயமாக பேராயர் வாட்லிக்கு தேவைப்படுகிற ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. இந்த எண்கள் சமீபத்திலுள்ளவை. ஏனெனில், அவை ஒழுங்கற்றவை. அவர்கள் பழங்குடியினர். அவர்கள் பழங்குடியின மொழியில் ஒரு தெளிவான அர்த்தத்தைக் கொண்டுள்ளனர்.

மீண்டும், பல காட்டுமிராண்டித்தனமான மொழிகளில், "வண்ணம்", "தொனி", "மரம்" மற்றும் இன்னும் பல சொற்கள் முற்றிலும் குறைபாடுள்ளவை என்பதை நாங்கள் அறிவோம். ஒவ்வொரு வகையான வண்ணத்திற்கும், ஒவ்வொரு வகையான மரத்திற்கும் பெயர்களைக் கொண்டிருக்கிறோம். அது, பொதுவான யோசனைக்கு உரியதல்ல.

இதைப்போன்ற பிறச் சான்றுகள் காட்டுமிராண்டி மொழிகளிலிருந்து எடுக்கப்படலாம். காட்டுமிராண்டிகள் இடையே பயன்பாட்டில் காணப்படும் பொருள்களைப் பொறுத்தவரை இந்த இயற்கையான வாதங்கள், பயணிகளின் அறிக்கைகளைவிட அதிக எடை கொண்டவையாகும். உதாரணமாக, ஓர் ஆரம்பகாலப் பயணி தான் பார்வையிட்ட

ஒரு இனத்தில் ஒருசில கலை அல்லது அறிவு இல்லாதததை குறிப்பிட்டார் என்றும், பின்னர் வந்தவர்கள் பூர்வீகவாசிகளிடம் அதனைக் கண்டறிந்தார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். பிற்காலப் பயணிகள், சிறந்த வாய்ப்பாக அவர்களின் முன்னோடிகள் கவனிக்காத்தைக் கண்டார்கள் என்பதை சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதுடன், பெரும்பாலான மக்கள் இதனை முன்னேற்றத்தின் தெளிவான சான்றாக ஏற்கத் தயங்குவார்கள். இது அனுமான சம்பவம் அல்ல. ஆரம்பகால எசுப்பானிய எழுத்தாளர்கள் (Spanish writers), லாட்ரோன் தீவுகளில் வசிப்பவர்கள் நெருப்பைப் பயன்படுத்துவதை அறியாதவர்கள் என்று கூறுகிறார்கள். பிற்காலப் பயணிகள், அதற்கு மாறாக, அதனை அறிந்திருந்தார்கள் என்கிறார்கள். பூர்வீகவாசிகள் முன்கூட்டியே ஒருபடி மேலாக இருந்தார்கள் என்பதற்கல்ல; எசுபானியர்கள் தவறு செய்தார்கள் என அவர்கள் ஏறக்குறைய ஒருமனதாகக் கருதுகின்றனர். வாட்லியின் கூற்றுகளுக்கு எதிராக நான் இந்த கருத்தை முன்வைக்கவில்லை. ஏனெனில், நான் இந்த கருத்தைப் பாராட்டவில்லை. அது எவ்வாறாயினும், அத்தகைய இருப்பை ஒப்புக்கொள்வதற்கு காட்டுமிராண்டிகளுக்கு இடையே பொருள் முன்னேற்றம் குறித்த திருப்திகரமான சான்றுகளைப் பெறுவது எவ்வளவு கடினம் என்பதனை காண்பிப்பதற்காகவே நான் இங்கு குறிப்பிடுகிறேன். மொழியிலிருந்து பெறப்படுகிற வாதங்கள் சந்தேகங்களுக்கு உரியதல்ல என்றாலும் அவர்கள் அவர்களின் சொந்த கதையைச் சொல்கிறார்கள். அதேவேளையில், முடிவுகளை எடுக்க எங்களை சுதந்திரமாக விட்டுவிடுங்கள். மிகவும் நாகரிக இனங்கள்கூட ஒருகாலத்தில் காட்டுமிராண்டி நிலையில் இருந்தன என்பதைக் காட்டும் சில கருத்தாய்வுகளை நான் இப்பொழுது மிகச் சுருக்கமாகப் பதிவிடுகிறேன்.

ஐரோப்பா முழுவதும் மட்டுமல்ல; இத்தாலி மற்றும் கிரேக்கத்தில் மட்டுமல்ல; நாகரிகத்தின் தொட்டில் என்று அழைக்கப்படுகிற பாலத்தீனம், சிரியா, எகிப்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் கல் யுகத்தின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உண்மையில், இவை அந்தக் கல் கத்திகள் போன்றவற்றின் துண்டுகள் மட்டுமே என்று கூறலாம். நீண்ட காலமாக மதச் சடங்குகளுக்காக பயன்படுத்தப்பட்டுவந்த உலோகம், அதன்பின்பாக பொதுப் பயன்பாட்டிற்கு வந்தது என்பது எங்களுக்குத் தெரியும். இது உண்மையில் எப்படியென்றால், மிச்சமிருக்கிற யானைகள் உரோமானியர்களால் கொண்டுவரப்பட்டவை எனக் கருதி இங்கிலாந்தில் தற்போதைய யானைகளின் எலும்புகளை கணக்கிடுவதற்கு எடுத்த ஒரு முயற்சியை நினைவூட்டுகிறது. ஆனால், எகிப்திய மற்றும் யூதப் பாதிரியார்களால் கல் கத்திகள் ஏன் பயன்படுத்தப்பட்டன? ஒரு காலத்தில் பொதுப் பயன்பாட்டில் இருந்ததால் அவர்களிடம் மரியாதைக்குரிய ஓர் உணர்வு இருந்தது.

மேலும், அதேமுடிவுக்கு மிகவும் தீர்மானமாக சுட்டிக்காட்டப்படும் பிறக் கருத்தாய்வுகளும் உள்ளன. பல்வேறு காட்டுமிராண்டி பழங்குடியினர் மத்தியில் பெண்ணின் நல்லொழுக்கம் மிகவும் அலட்சியமாகப் பார்க்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. சில காட்டுமிராண்டிகளிடம் அவ்வாறாக இல்லை. திருமண யோசனையைப் பொறுத்தளவில், நான் அந்த இடத்திற்கு வரவில்லை என்று சொல்லவில்லை. இந்த அறிக்கையை ஆதரிக்கும் ஆதாரங்களை நான் இங்கு கொண்டுவர வேண்டிய தேவையில்லை. ஆண்களின் கீழுள்ள இனங்களில் ஆர்வம் காட்டும் அனைவருமே, அவனது நாய் அல்லது ஆண் அடிமைகளைப் போலவே காட்டுமிராண்டிகளின் மனைவிகள் அவனது சொத்தின் ஒரு பகுதி என்பதனை ஒப்புக்கொள்வீர்கள். அதுபோல், ஒரு மனிதன் மரிக்கும்போது

அவனது சகோதரனின் விதவைகளையும் மீதமுள்ள சொத்தையும் கைப்பற்றிவிடுகிறான். அந்தமாதிரி நேரங்களில் பெண்கள் அதிக நீதியுடன் நடத்தப்படுகிறார்கள் என்கிறார்கள். இதில், முதலாவதாக வருகிற முடிவு என்னவென்றால், எங்கள் கருத்துகளின்படி அனுகூலங்கள் சந்தேகத்திற்குரியவையே. உதாரணமாக, அந்தமான் தீவுவாசிகள், அதாவது ஒரு ஆணும் பொண்ணும் குழந்தை பிறந்து தாய்ப்பால் கொடுக்கும் வரை மட்டுமே ஒன்றாக இருப்பார்கள். அவர்கள் சுதந்திரமானவுடன் பிறரோடு இணை சேர்ந்து விடுகிறார்கள். ஏனைய சந்தர்ப்பங்களில், கணவன் மனைவி விருப்பப்படி திருமண உறவை விலக்கிக் கொள்கிறார்கள். இன்னொரு வகையில், மீண்டும், பெற்றோரைப் பற்றிய ஒரு ஊகத்தைக்கூட அளிக்காத வகையில், அவர்களின் இணைப்பு அத்தகைய இயல்புடையதாக அமைந்துள்ளது. இதன்விளைவு என்னவென்றால், பல காட்டுமிராண்டிகளுக்கு தந்தைவழி மூலம் எந்தவொரு உறவையும் பற்றித் தெரியாது. அவர்கள், பெண்கள் வழியாக மட்டுமே உறவை அங்கீகரிக்கிறார்கள். ஆத்திரேலியர்கள், பிசியார்கள், தென்கடல் தீவுவாசிகள், இந்துத்தானிலுள்ள பண்டைய செல்டுகள், கிரேக்கர்கள், காசியர்கள், நாயர்கள் மற்றும் பிற பழங்குடியினர், சில கோசாக் கூட்டங்கள், பல நீக்ரோ பழங்குடியினர் போன்றவர்களிடம் இது காணப்படுகிறது. சுருக்கமாக, உலகம் முழுவதும். அதேகாரணத்திற்காக, ஒரு மனிதனின் உண்மையான வாரிசுகள், அவனது சொந்தப் பிள்ளைகள் அல்ல; ஆனால், அவனது சகோதரிகளின் பிள்ளைகள். அதே காரணத்திற்காக மேற்கு தன்சியாவிலுள்ள பாண்டு மொழி பேசும் மக்களிடம் (முதல் பார்வையில் விவரிக்க முடியாத) ஒரு வழக்கம் உள்ளது. ஒரு மனிதனின் சொத்து, சட்டத்திற்குப் புறம்பான அவனது பிள்ளைகளுக்குச் செல்லுமே தவிர, அவனது சட்டப்பூர்வமான பிள்ளைகளுக்கு அல்ல.

திருமண யோசனையில், படிப்படியான கட்டுமானத்தைக் கண்டுபிடிப்பதன் மூலம் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் காண்கிற இரண்டு அசாதாரணப் பழக்கவழக்கங்களை நாம் முழுமையாகக் கணக்கிட முடியும். ஒரு மனிதன், அவனுடைய சொந்தப் பிள்ளைகளோடு எந்தவித தொடர்பும் இல்லை என்று பல்வேறு பழங்குடியினரால் கருதப்படுகிறது. அவனுடைய சொத்து அவர்களுக்கு அல்ல; அவனுடைய சகோதரிகளுக்குச் செல்கிறது. விசயங்கள் மேம்பட்டதால், பெற்றோரால் சம்பவிக்கிற தன்மை அதிமானதால், பெண்கள் வழியாக மட்டுமே என்கிற உறவு படிப்படியாக கைவிடப்பட்டது. பல காட்டுமிராண்டிகள் இதுவரை முன்னேறவில்லை. மற்றவர்கள் சமீபத்தில் மாற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். உதாரணமாக ஒரு நூற்றாண்டிற்கு முன்னர், ஐட் இரட்டன் என்பவர் இதன் நினைவாக ஒரு தூணை அமைத்தார். எவ்வாறாயினும், மிகவும் நாகரிக நாடுகளில்கூட, ஆரம்பகால வரலாற்றில், இந்த முன்னேற்றத்தின் தடயங்களை நாம் காண்கிறோம். ஆகவே, ஆரம்பகால யூதர்கள் மத்தியில், ஆபிரகாம் அவரது ஒன்றுவிட்ட உடன்பிறந்த சகோதரியை மணந்தார். நாபோர், அவருடைய சகோதரனின் மகளை மணந்தார். அம்ராம், அவனுடைய தந்தையின் சகோதரியை மணந்தான். இங்கே நாம் உறவினர்களின் முறையை பெண்கள் மூலமாக மட்டுமே காண்கிறோம். இந்தப் பெண்கள், அந்த நேரத்தில் உறவினர்களாக கருதப்படவில்லை. யூத வரலாற்றின் பிற்காலத்தில் அவர்கள் அவ்வாறாக இருந்திருப்பார்கள். ஒரு மனிதன் குழந்தை இல்லாமல் மரித்தபோது, அவனது உடன்பிறந்த சகோதரன், விதவையை திருமணம் செய்வது வழக்கம். மனதைத் தொடுகிற ரூத் மற்றும் போவாசு ஆகியோரின் கதையும், தாமாரின் சோகமான வரலாறும்கூட அப்படித்தான். திரு. மேக்கேலன், அவருடைய சிறந்த நூலில் சுட்டிக்காட்டியுள்ளது போலவே, ஒருகாலத்தில்

உரோமானியர்கள், “சட்ட வழிமுறைகளை அறியாதவர்களாக இருந்த நிலையிலும், ஆயுதங்களின் பலத்தைப் பொறுத்தளவில் அவர்களின் தகராறுகளைத் தீர்ப்பதற்காக அவர்களுடைய நல்ல அலுவலக நண்பர்கள் வாயிலாக சரிசமமான நிலையிலிருந்த பல இனங்களுடன் நீதி நிர்வாகம் செய்தனர்.” அதேசமயம், திருமணத்தைப் பொறுத்தவரை, கிரேக்கர்கள் மற்றும் உரோமானியர்கள் ஆகியோருக்கு இடையேயான பழக்கவழக்கங்களைக் காண்கிறோம். அவை, அந்த காலத்தை சுட்டிக்காட்டுகின்றன. அப்போதையை மெருகூட்டப்பட்ட பியோன்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள். சட்டத்தின் பார்வையில், நம் மத்தியில்கூட ஒரு மனிதனுக்கு திருமணம் ஆகாமல் இருந்தால், அவனுடைய குழந்தைகளுடன் அவனுக்கு எந்தவித உரிமையும் இருப்பதில்லை. அவன், அவனுடைய சொந்த சந்ததியினருடன் இரத்த உறவால் அல்ல; ஆனால், அவனுடைய தாய்வழி திருமணம் வாயிலாக உறவு ஏற்படுகிறது. திருமணம் நடக்கவில்லை என்றால், அவனுடைய பெயரில் அவர்களுக்கு உரிமையில்லை. எந்தவொரு உறவும் இல்லாதபோது, அவர்களிடம் பணம் எஞ்சியிருக்கும் சந்தர்ப்பங்களைப்போல, அவனுடைய சொத்தில் ஏதாவது ஒன்றினை அவன் விட்டுவிட்டால், நாடு உட்புகுந்து பத்தில் ஒன்றிற்கு உரிமை கோரும்.

நாகரிகத்தின் வெவ்வேறு அளவுகளைக்கொண்ட இனங்களின் ஒவ்வொரு படிநிலையிலும், பெண்ணை வெறும் பொருளாக மட்டும் கருதுவது முதல் திருமணத்தின் புனிதமான யோசனை வரை எல்லாம் ஆண்களிடமே உள்ளது. படிப்படியான மாற்றம் முன்னேற்றத்தின் அறிகுறியாகும்; சீரழிவிற்கானது அல்ல என்பதற்கான தெளிவான ஆதாரங்களை நாம் காண்கிறோம். நாகரிக நாடுகள், அவர்களின் பண்டைய காட்டுமிராண்டித் தடயங்களை நீண்ட காலமாகவே வைத்திருக்கின்றன.

காட்டுமிராண்டிச் செயல்கள் முந்தைய வீரத்தின் நினைவுச் சின்னங்கள் அல்ல. நரம்புகளிலுள்ள வால்வுகள், சுழற்சியின் தசையைக் குறிப்பதால், நமது நவீன நாகரிகத்தின் உன்னதமான அம்சங்களில் ஒன்றாக பெண்களுக்கான மரியாதையில் படிப்படியாக முன்னேற்றத்தை நாம் காண முடியும்.

இந்தச் சுவையான செய்தியைவிட்டு வெளியேறுவதற்கு முன்பாக, பல நாடுகளில் திருமணத்தின் தோற்றம் பற்றிய மரபுகள் உள்ளன என்பதனைக் காணலாம். எகிப்தியர்களுக்கு மெனசாகவும், சீனர்களுக்கு போகியாகவும், கிரேக்கர்களுக்கு செக்ராபியாகவும், இந்துக்கள் சுவேதகேதுவாகவும் உள்ளன. திருமணம் சமகாலத்தில் எங்கள் இனத்துடன் இருந்திருந்தால், திருமணம் எப்போதுமே இயற்கையாகவே தோன்றியிருந்தால், அது நமக்குத் தேவையானது என்று நான் சொல்லலாம். இத்தகைய மரபுகள் அரிதாகவே எழுந்திருக்கக்கூடும்.

நோவா சிகாட்டியனின் இயற்கை அறிவியல் நிறுவனம் திரு. காலிபர்டன் எழுதிய, “மனித இனத்தின் ஒற்றுமை, தும்மலுடன் தொடர்புடைய சில மூடநம்பிக்கைகளை உலகளாவிய தன்மையால் நிருபித்துள்ளது” என்கிற சுவையான தலைப்பில் நூலொன்றினை வெளியிட்டது. “ஒருமுறை நிறுவியதும்,” அவர் கூறுவதாவது, “இயற்கையாக எல்லா மனிதர்களுக்குள்ளும் தங்களால் பரிந்துரைக்க முடியாதது போன்ற ஏராளமான தன்னிச்சையான பழக்கவழக்கங்கள் எப்பொழுதும் உலகளவில் கவனிக்கப்பட்டு வருகின்றன. அவை பழமையான பழக்கவழக்கங்கள் என்கிற முடிவுக்கு வருகிறோம். அவை பொதுவான மூலத்திலிருந்து பெறப்பட்டவை. மரபுரிமையாக இருந்தால், மனித இனத்தின் சிதறுதலுக்கு முந்தைய ஒரு சகாப்தத்திற்கு கடமைப் பட்டுள்ளோம்.” அத்தகைய முடிவினை நியாயப்படுத்த வேண்டுமென்றால் பழக்கவழக்கம் வெளிப்படையாகவும்

தன்னிச்சையாகவும் இருக்க வேண்டும். இரண்டும் இரண்டும் நான்காக மாறுகின்றன என்கிற நம்பிக்கையும், வருடத்தை பன்னிரெண்டு மாதங்களாக பிரிப்பதும், இவைபோன்ற தற்செயல்கள் எதுவும் நிச்சயமாக நிருபிக்கப்படவில்லை. எந்தவொரு உலகளாவிய இருப்பையும் அல்லது பொதுவான, தெளிவான பழக்கவழக்கங்களின் இருப்பையும் நான் மிகவும் சந்தேகிக்கிறேன். உண்மை என்னவென்றால், பல செய்திகள் நமக்கு தன்னிச்சையாகவும் விசித்திரமாகவும் நமக்குத் தோன்றுகின்றன. ஏனெனில், அவை தோன்றிய நிலையிலிருந்து மிகவும் மாறுபட்ட நிலையில் நாம் வாழ்கிறோம். பல விசயங்கள் ஒரு காட்டுமிராண்டி செயலுக்கு இயல்பானதாக தோன்றுகிறது. இது எங்களுக்கு அபத்தமானது; கணக்கிட முடியாதது.

திரு. காலிபர்டன், அவருடைய வலுவான செய்தியாக, ஒரு நபர் தும்மும்போது, “கடவுள் உங்களை ஆசிர்வதிக்கிறார்” அல்லது அதற்கு சமமான வெளிப்பாடு என்று சொல்லும் பழக்கத்தை முன்வைக்கிறார். இது முதல் பார்வையிலே, இந்த பழக்கவழக்கம் ஒற்றையாக, தன்னிச்சையாக, பண்டைய மற்றும் பரவலாக விரிவாக்கப்பட்டதாக நமக்குத் தோன்றுகிறது என்பதனை நான் ஒப்புக்கொள்கிறேன். ஓமர், அரிட்டாட்டில், ஆபிலியா, பிளினி மற்றும் யூத போதகர்கள் ஆகியோரும் இதுகுறித்து தெரிவித்திருக்கிறார்கள். மேலும் இது, எலோரிடா, ஒட்டாகட் மற்றும் டோங்கா தீவுகளில் உற்று நோக்கப்படுகிறது. இது விரும்பக்கூடியதாக இல்லை என்பதால், திரு. காலிபர்டன் தனக்குள் வெளிப்படுத்துவது யாதெனில், அவருடைய ஆட்சியின்கீழ் வருவதற்கு, அது அதுவாக இல்லை.

கண்ணுக்குத் தெரியாத மனிதர்கள் மீதான நம்பிக்கை காட்டுமிராண்டிகளிடையே மிகவும் பொதுவானது. ஆசிர்வாதங்களைக் கணக்கிடுவது தேவையில்லாதது என்று

அவர்கள் நினைக்கும் அதேவேளையில், தவறான எண்ணங்களால் ஏதாவது ஆபத்துகள் ஏற்பட்டால், அதற்கு மர்மமாக இருப்பவர்களே காரணமென அவர்கள் கூறுகிறார்கள். நோயைப் பொறுத்தளவில், அந்த மர்மமான மனிதர்களின் உடமை என பல காட்டுமிராண்டிகள் கருதுகிறார்கள். நோய் ஏற்பட்டால், அவர்களின் உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் கருதுவதில்லை. மாறாக, அவை கடவுளால் ஏற்படுகின்றன என்றும், அவர்களுடைய வைத்தியன் நோயை குணப்படுத்த முயற்சிக்கவில்லை, பேயை ஓட்டுகிறார் என்றும் கூறுகிறார்கள். சில பழங்குடியினர் ஒவ்வொரு வியாதிக்கும் ஒரு தனித்துவமான தெய்வத்தைக் கொண்டுள்ளனர். ஆத்திரேலியர்கள், இயற்கை மரணத்தை நம்புவதில்லை. ஒரு மனிதன் மரித்துவிட்டால், அவன் சூனியத்தால் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறார்கள். ஒரேயொரு சந்தேகம் என்னவென்றால், யார் குற்றவாளி? இப்பொழுது இந்த மன நிலையிலுள்ள மக்களில், ஆண்களில் ஒவ்வொரு இனமும் கடந்து செல்கின்றன அல்லது இந்த வளர்ச்சி கட்டத்தை கடந்து செல்கின்றன என்பதை நாங்கள் அறிவோம். இயல்பாகவே ஒரு மனிதன் தும்முவதை பார்ப்பது, கிட்டத்தட்ட தவிர்க்க முடியாததாகும். அதேவேளையில், கண்ணுக்குத் தெரியாத சிலரால் அவன் தாக்கப்பட்டான் அல்லது அசைக்கப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். கண்ணுக்குத் தெரியாத வேறு சிலரிடம் உதவியைக் கோருவதற்கான தூண்டுதல் என்பது முதல் இயல்பைவிட சக்தி வாய்ந்ததாக உள்ளது.

ஒரு தும்மல், "வரவிருக்கும் தீமையின் சகுனம்" என்பதை திரு. காலிபர்டன் ஒப்புக் கொள்கிறார். ஆனால், இது அதிகப்படியானது. தும்மல் ஏதேனும் தீய ஆவியைக் கொண்டுதான் இருக்குமென காட்டுமிராண்டியின் மனதிற்குள் முடிவாகவே தோன்றும். திரு. காலிபர்டன்

மிகவும் நம்பியுள்ள இவ்விசயத்தில் எவ்வகையிலும் “நியாயமற்ற வழக்கம்” இல்லை என்கிறார். அதன்மூலம், அவர் தானே வகுத்த நிபந்தனைகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. அவர் தற்செயலாக வேறு சில நிபந்தனைகளை முன்வைக்கிறார். அவற்றில் பெரும்பாலானவற்றை அதிகமாக நிருபிப்பதில் நன்மையில்லை. மரித்தவர்களின் நினைவாக ஒரு திருவிழா, “நவம்பர் தொடக்கத்தில் அல்லது அதற்கு அருகில்” இருப்பதை அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். அந்த திருவிழா மிகவும் பொதுவானது. வருடத்தில் மாதங்கள் இருப்பதைவிட இதுபோன்ற ஒரு திருவிழாவை நடத்த இன்னும் பல இனங்கள் இருப்பதால், பல சந்தர்ப்பங்களில், அவற்றை அவர்கள் ஒன்றாக நடத்த வேண்டும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. காலிபர்டன் தொடர்ந்து கூறுவதாவது: எசுபானியர்கள், நவம்பர் 22ஆம் தேதியை அனைத்து ஆத்துமாக்களுக்கான ஒரு புனிதமான நாளாகக் கருதி திருப்பலியை நிறைவேற்றிக் கொண்டாடுவதைக்கண்டு, அவர்களே மிகவும் இயல்பாகவே ஆச்சரியப்படுகிறார்கள். புறசாதியினரும் மரித்தவர்களின் வருடாந்திர நினைவேந்தலை நடத்துகிறார்கள். இந்த ஆர்வமுள்ள செயல், அவர் சொல்வதுபோல், அத்தகைய திருவிழாவின் இருப்பை நிருபிப்பது மட்டுமல்ல, “சிதறலுக்கு முன்” (இதனை திரு. காலிபர்டன், படிப்படியான செயல்முறையாகப் பார்க்காமல், ஒரு திட்டவட்ட நிகழ்வாகவே பார்க்கிறார்) அவர் கூறுவதாவது, அந்த சமயத்தில் ஆண்கள் ஒரு நாள்காட்டியை உருவாக்கி, போதுமான அளவிற்கு முன்னேறிய நிலையில், தற்போதைய காலத்திலும் அதனை மாற்றம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். எவ்வாறாயினும் அது அப்படியல்ல என்று எங்களுக்குத் தெரியும். திரு. காலிபர்டன் மீண்டும் கூறுகிறார்: பேய்களைப் பொறுத்தவரை காட்லாந்த் மற்றும் பூமத்திய ரேகை ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில்

கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே காணப்படுகிறது. அங்குள்ள பேய்கள், உயிருள்ளவர்களை மிகவும் கடினப்படுத்துவதாகவும், தொந்தரவு செய்வதாகவும் கருதுகிறார்கள். சில சமயங்களில், வெள்ளித் தோட்டாவால் கொல்லப்படுகிறார்கள். இங்கே, நிச்சயமாக ஓர் தன்னிச்சையான நம்பிக்கையாக முதல் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். சிதறடிக்கப்படுவதற்கு முன்பாக, உயிருள்ள பேய்களிடத்தில் நம்பிக்கை இருந்தது என்பதனை நிருபிக்க வேண்டும். அப்பொழுது, வெள்ளித் தோட்டாக்கள் பயன்பாட்டில் இருந்தது என்பதனை நிருபிக்கலாம். இந்த விளக்கம் மிகச் சுவையானதாக நான் நினைக்கிறேன். ஏனெனில், இதைப்போன்ற கருத்துக்கள், தொலைதூர நாடுகளில், "மனித இன சிதறலின் முந்தைய சகாப்தத்தில்" அவற்றின் தோற்றம் இல்லை என்றாலும், மனித மனதின் உண்மையான அடையாளமாக உள்ளது. வெவ்வேறு நாடுகளில், இதைப்போன்ற பழக்கவழக்கங்கள், "ஒரு பொதுவான மூலத்திலிருந்து பெறப்பட்டவையாக" உள்ளது. அதனை, அவசியமுள்ள பழமையாக நான் நம்பவில்லை. மனித இனத்தின் ஒற்றுமைக்கான ஒரு வாதத்தை நிச்சயமாக அவற்றில் நான் காண்கிறேன். இருப்பினும் (இதனை ஒரு அடைப்புக்குள் குறிப்பிட்டிருந்தாலும்), மனிதன் ஒரு இணையிலிருந்து வந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

முடிவாக, நாடுகள் பின்னடைவை நோக்கி சென்ற சம்பவங்கள் உள்ளன என்பதை நான் ஒருகணம்கூட மறுக்கவில்லை. இதனை விதிவிலக்கான நிகழ்வுகளாக நான் பார்க்கிறேன். நான் இங்கு மிகச் சுருக்கமாக சுட்டிக்காட்டியுள்ள உண்மைகள் மற்றும் வாதங்கள் வேறுபல எடுத்துகாட்டுகளால் ஆதரிக்கப்படலாம். இருப்பினும், அவை பின்வரும் முடிவுகளுக்கு வலுவான

காரணங்களைக் கொண்டுள்ளதாக நான் நினைக்கிறேன். அதாவது,

தற்போதைய காட்டுமிராண்டிகள், நாகரிக மூதாதையர்களின் சந்ததியர்கள் அல்ல.

மனிதனின் பழமையான நிலை முற்றிலும் காட்டுமிராண்டித் தனமானது. இந்த நிலையிலிருந்து பல இனங்கள் சுயமாக தங்களை வளர்த்துக்கொண்டன.

இந்தக் கருத்துகள், நிச்சயமாக விஞ்ஞானக் காலத்திலிருந்தே பின்பற்றப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்காலத்திற்காக அவர்கள் வைத்திருக்கும் உற்சாகமான வாய்ப்புகளைக் காரணமாகக்கொண்டு அவற்றை ஏற்றுக்கொள்வதில் நாங்கள் குறை காணமாட்டோம்.

மனிதனின் கடந்தகால வரலாறு சீரழிந்தால், ஆதாரமற்ற எதிர்பார்ப்புடன் எங்களுடைய எதிர்கால முன்னேற்றம் இருக்கும். மறுபுறம், கடந்தகாலம் முன்னேற்றத்தை அடைந்திருந்தால், எதிர்காலமும் அவ்வாறே இருக்குமென நாம் நம்பலாம். நாகரிகத்தின் ஆசிர்வாதங்கள், மற்ற நாடுகளுக்கும் பிற நிலப்பகுதிகளுக்கும் மட்டுமல்ல, நம்முடைய சொந்த நிலத்தில்கூட அவை பொதுவானதாகவும் சமமாகவும் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், இப்போது நம்முடைய சொந்த நாட்டு மக்களில் ஏராளமானோர் நம்மிடையே காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையில், கரடுமுரடான நன்மைகளோ, முரட்டுத் தனமான இன்பங்களோ இல்லை. அவர்கள், நாகரிக மனித எல்கைக்குள் இருக்கிற மிக உயர்ந்த மற்றும் உன்னதமான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மொழிபெயர்ப்பாளரின் பிற நூல்கள்

1. நீதிமன்றக் கூண்டில் திருக்குடும்பம்
2. தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஓர் அறிமுகம்
3. அமெரிக்க அடிமைகளின் அணுவிபத்து மசோதா
4. மறுபக்கத்தின் மறுப்பக்கம் - மண்டைக்காடு கலவரம்
5. புற்றீசல்போல் கிளம்பும் புற்றுநோய்
6. விரட்டியடிக்கப்பட்ட இறைவன்
7. இயேசு சிலுவையில் அறையப்பட்டாரா?
8. திருவிவிலியம் இயேசுவை இழிவுபடுத்துகிறதா?
9. குமரிக் காங்கிரசின் தந்தை கொட்டில்பாடு துரைசாமி
10. உள்ளாட்சி மற்றும் மீன்வளத்துறை மந்திரி லூர்தம்மாள் சைமன்
11. குளச்சல் (இனயம்) பெட்டகத் துறைமுகம் குமரிவாழ் மக்களுக்கு வரப்பிரசாதமா?
12. மீனவ வீரனுக்கு ஒரு கோவில் - பொய்யும் புனைவும்
13. பள்ளம்துறை
14. கண்காணி
15. இயேசுவின் மனைவி மகதலேனா மரியா
16. குளச்சல் போர் - கட்டுக் கதைகளும் கற்பனைக் குதிரைகளும்
17. குளச்சல் போர் 1740–1741
    (மொழிபெயர்ப்பு, மார்க் டி லெனாய் எழுதியது)
18. தேசிய கடல் மீன்வள மசோதா ஓர் ஆய்வு
19. கிறித்தவத் தேவாலயச் சட்டம் - ஓர் அவசரத் தேவை
20. சிலுவையேற்றம் - கண்ணால் கண்ட சாட்சி
    (மொழிபெயர்ப்பு)

THE MUKKUVA LAW

முக்குவர் சட்டம்

முன்பொரு காலத்தில் இலங்கையிலுள்ள மட்டக் களப்பில் மிக முக்கிய சாதியாக முக்குவர் சாதி இருந்து வந்துள்ளது. பொதுவாக, சாதிப் பெயரில் எந்தவொரு நாடும் அறியப்பட்டதில்லை. மட்டக்களப்பில், மிகப் பெரும்பான்மை மக்களான முக்குவர்கள் பெயரில் இத்தேசம் 'முக்குவர் தேசம்' என அறியப்பட்டுள்ளது. அவர்களுக்கென இச்சட்டம் அமலில் இருந்து வந்துள்ளது. இச்சட்டத்தை பிற சாதியினரும் பின்பற்றியுள்ளனர். இந்நூல் முக்குவர்களின் பண்டைய காலகட்ட குடும்ப வாழ்க்கை மற்றும் அவர்களுடைய வாரிசுரிமைக் குறித்துப் பேசுகிறது. இதுவொரு வரலாற்று ஆவணம்.

– திருத்தமிழ்த்தேவனார்